

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
&
ஸ்ரீ திலீப் குமார் ராய்




N. 14421
"வந்தே மாதரம்"
"தன தான்ய"



"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்
டம்டம் - பம்பாய் - மதராஸ் - டில்லி



கடைசியாக அவன் துணிகள்
உண்மையாகவே சுத்தமா
கவும் வெண்மையாகவும்
இருக்கின்றன
அது ஸன்லைட்
டினுல் தான்!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்

இப்பொழுது தமிழ்நாடெங்கும் நடைபெருகிறது




அபிமன்யு

ஜூபிடர் தயாரிப்பு

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா & புதுக்கோட்டை சமஸ்தானம் :
ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், மதுரை
மலபார் உரிமைகள் : வர்மா பிக்சர்ஸ், திருப்பணித்துறை
புக்கிங்குகளுக்கு : சந்துரு பிலிம்ஸ், எர்ணகுளம்
ஆந்திராவுக்கு : பூர்ண பிக்சர்ஸ், பெஜவாடா

HINTS FOR HEALTH




A Cool & Clean Bath

Goes a long way

ஆற்றிலோ, குளத்திலோ, கிணற்றடியிலோ அல்லது குழாயின் கீழோ குளிர்ந்த நேரங்களிலே சுத்தமாக ஸ்னானம் செய்வதுதான் ஆரோக்யத்துக்கும் தீர்க்காயுளுக்கும் நேரான வழி என்பதை அறிவீர்கள். எளிதாகவும் இன்னும் ரஞ்சகமாகவும், ஸ்னானம் செய்ய உதவுவது மலபார் லிம்டா சோப்.

இதன் நுரை சருமத்திற்குள் வெகுதூரம் சென்று அசுத்தங்களைப் போக்கி, சருமத்தை மிருதுவாக்கி, உடல்களுக்கு அலாதி மேனி அழகு அளிக்கிறது. உங்களுக்கு ஏற்ற சோப் அதுவே.





மலபார்

லிம்டா சோப்

வெஜிடபில் ஸோப் ஒர்க்ஸ்

கள்ளிக்கோட்டை

புரொப்ரைடர்ஸ்: ஜே. L. N. P. & Co., LTD., கள்ளிக்கோட்டை. பம்பாய் 2. சென்னை 1.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 } இதழ் 44 } மே 30 { சர்வதாரி ௵ { வைகாசி 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 44

என்ன சேதி?

"வீரர்"களின் வேலை

பாதுகாப்பில்லாத கிராமங்களிலுள்ள நிரபராதிகளான ஜனங்களின் மீது பாய்ந்து அவர்களைக் கொன்றும், அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையிட்டும் வந்த ஹைதராபாத் "வீரர்"களான ரஸாக்கியர்கள் இப்போது ரயில் கொள்ளையில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னையிலிருந்து பம்பாய்க்குச் சென்று கொண்டிருந்த மெயில் கங்காபூர் ஸ்டேஷனிலே நிற்கையில் ஆயுதந்தாங்கிய ரஸாக்கியர்கள் திடீரென்று வந்து வண்டிக்குள் புகுந்து பிரயாணிகளைக் கொன்றும் காயப்படுத்தியும் சாமான்களைக் கொள்ளையடித்துக் கொண்டும் ஓடி விட்டார்கள்.

விஜயவாடாவுக்கு அருகில் ரஸாக்கியர்கள் மற்றொரு ரயில் வண்டியிலும் புகுந்து கொள்ளையடித்திருக்கிறார்கள்.

நைஜாம் ஆட்சிக்குச் சிறிதளவும் ஆபத்து ஏற்படாமல் பாதுகாக்கவே தங்களுடைய படை இருப்பதாக ரஸாக்கியர்கள் கூறுகின்றனர். நைஜாம் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் போது போர்முனையில் அவர்கள் தங்களுடைய திறமையைக் காட்டுவதுதான் வீரத்தனம். அதை விட்டு விட்டுக் கிராமங்களைச் சூறையாடியும் ரயில் வண்டிகளில் பிரயாணம் செய்யும் நிரபராதிகளைக் கொள்ளையிட்டும் வரும் காட்டுமிராண்டிகள் நைஜாம் ஆட்சியைப் பாதுகாக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருப்பது நைஜாமின் துர்ப்பாக்கியமே. போரையே பிறப்புரிமையாகக் கொண்டு பிரமாதமான ஆர்ப்பாட்டத்துடன் காஷ்மீர் மீது படையெடுத்த மலைவாசிகளை அநேகமாக ஒடுக்கிவிட்டார்கள். அவர்களை அடக்கிய இந்திய சர்க்கார் படை வீரர்களுக்கு ரயில் கொள்ளைக்காரர்களான ரஸாக்கியர்களை அடக்க அதிக காலமாகாது.

கண்டிக்கிறோம்

சென்னை வேலை நிறுத்தம் ஒரு வழியாக முடிந்தது. தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தம் ஆரம்பமாகி விட்டது. முக்கியமாக இஞ்சின் டிரைவர்கள், பயர்மன்களின் வேலை நேரத்தைப் பற்றியே இப்போது வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. வேலை நேரம் சம்பந்தமாகத் தங்களுக்குள்ள குறையை நிவர்த்தித்துக் கொள்வதற்காக டிரைவர்களும் பயர்மன்களும் நடுவழியிலும், நள்ளிரவிலும், கொடும் வெய்யிலிலும் ரயில் வண்டிகளை நிறுத்திப் பெண்களையும், சிசுக்களையும், வயோதிகர்களையும் பரிதவிக்கும்படிச் செய்வது நியாயம் ஆகுமா? மேற்படி குறைக்குப் பரிகாரம் தேட டிரைவர்களும் பயர்மன்களும் இதர வழிகளை முயற்சித்துப் பார்த்தார்களா? எனவே பொதுஜனங்களை நேரடியாகப் பாதிக்கும் மேற்படி வேலை நிறுத்தம் கண்டிக்கத் தக்கது; முற்றிலும் கண்டிக்கத் தக்கது.

ஊருக்குப் போவாரா?


ரயில்வே தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தைக் கண்டிக்கும் நாம் அவர்களுடைய கோரிக்கை நியாயமற்றது என்று சொல்லவில்லை. அவ்விஷயமாக முதலிலேயே தகுந்த முறைகளைக் கைக்கொள்ளாமல் வேலை நிறுத்தம் ஏற்படும்படி செய்தது ரயில்வே நிர்வாகிகளின் திறமையின்மையைக் காட்டுகிறது. வேலை நிறுத்தத்தைத் தடுக்க முடியாத அவர்கள் அறிக்கைமேல் அறிக்கை விடுப்பதோ, அழகான முறையில் வாதிப்பதோ அர்த்தமற்ற காரியம்.


வேலை நேரம் சம்பந்தமாக மற்ற ரயில்வேக்களில் வேலை நிறுத்தம் ஏற்படாமல் இருக்கும்போது தென்னிந்திய ரயில்வேயில் மாத்திரம் ஏன் வேலை நிறுத்தம் ஏற்பட வேண்டும்? இந்தக் கேள்விக்குத் தொழிலாளிகள் பதில் சொல்ல வேண்டும். அதுபோலவே அதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பை தென்னிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் ஸ்ரீ ஜே. எப். வி. ரெய்னுல்ட்ஸ் தட்டிக் கழித்துக் கொள்ள முடியாது. ஸ்ரீ ரெய்னுல்ட்ஸின் நிர்வாக காலத்தில்

நான் தென்னிந்திய ரயில்வேயில் விதண்டா வாதங்களும் வேலை நிறுத்தங்களும் அதிகமாகி யிருக்கின்றன. எனவே அவர் மேற்படி பதவியிலிருந்து விலகி ஊருக்குப் போவாராயின் பாதி சங்கடம் தீர வழி பிறக்கலாம். வேலை நிறுத்தங்களைத் தூண்டி விடுவோர் கம்யூனிஸ்டுகள் தான் என்று சொல்லுவதுடன் அதிகாரிகளின் கடமை முடிந்து விடாது. கம்யூனிஸ்டுகள் தூண்டி விடுவதற்கு இடம் கொடுக்காமல் நிலைமையைச் சமாளிக்க அதிகாரிகள் முயற்சிக்க வேண்டும்.

எழுத்தாளர் மகாநாடு

ஏற்கெனவே பல சிறப்புக்களைப் பெற்றுள்ள நாஞ்சில் நாட்டு நாகர் கோவில் நகரது 1948-ம் வருஷம் மே மாதத்தில் ஒரு புதிய சிறப்பை அடைந்தது. இம்மாதம் 14, 15உகளில் மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு அங்கு சிறப்பாக நடந்தேறியது. கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை வரவேற்புத் தலைவராகவும் "பிரசண்ட விகடன்" ஆசிரியர் ஸ்ரீ நாரண துரைக்கண்ணன் மகாநாட்டின் தலைவராகவும் விளங்கிச் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 300 தமிழ் எழுத்தாளர் விஜயம் செய்திருந்தார்கள். "காலச்சக்கரம்" ஆசிரியர் ஸ்ரீ பெரியசாமித்தூரன், "வனம்" ஆசிரியர் ஸ்ரீ திருஞானம், "தமிழ் முரசு" ஆசிரியர் ஸ்ரீ சிவஞான கிராமணியார், "சிவாஜி" ஆசிரியர் ஸ்ரீ திரிலோக சீதாராம், "கலைமகள்" ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் ஆகியவர்கள் மகாநாட்டில் முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டார்கள். "புத்துயிர்" ஆசிரியர் ஸ்ரீ வெ. நாராயணன் அவர்களும், "தேவி" ஆசிரியர் ஸ்ரீ பி. மகாலிங்கம் அவர்களும் வரவேற்புக் கமிட்டியின் சார்பாகச் சிறந்த பணி ஆற்றினர்கள். மகாநாட்டின் முக்கிய தீர்மானங்களில் ஒன்று கல்வி மந்திரி அவர்களின் "கலைக் களஞ்சிய" முயற்சிக்கு பரிபூரண ஆதரவு தருகிறது. இன்னொரு முக்கிய தீர்மானம் பேராசிரியர் வ. ரா. அவர்களின் மணி விழாவைச் சிறப்பாக நடத்தி வைக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டது. வரப்போகும் வருஷத்தில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு பல அரும் பெரும் காரியங்களைச் சாதிக்கப் போகிறது என்று மகாநாட்டில் சொற்பொழி வாற்றிய எழுத்தாளர் பலர் கூறியுள்ளார்கள். அவர்களுடைய வாக்கும் விருப்பமும் பலிக்கட்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் சில நாளாகத் தீவிரமான பேனா யுத்தம் நடந்து வருகிறது. சீக்கிரத்தில் அது வேறுவித யுத்தமாக மாறுமோ என்னவோ?
அமெரிக்கா
பிரசாரம்


உடை அளித்து அருள் புரிவாய், சர்க்காவே!
பாகிஸ்தானில் துணிப் பஞ்சம் அதிகமாயிருப்பதால் கவர்னர் ஜெனரலும் மந்திரிமார்களும் சுதேசி சர்க்கா இயக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்களாம்!

சொர்க்கத்தின் உணவு என்ன?

அமரர்களும் அவர்களுடைய தேவிகளும் பூலோகத்தில் புண்ணியம் செய்துவிட்டுப் போகிறவர்களும் வாழும் சொர்க்கம் எப்படிச் சொர்க்கமாயிற்று? எந்தக் காரணத்தினால் அதைச் சொர்க்கம் என்று பாராட்டிச் சொல்லுகிறோம் என்று கேட்டால், அதைப் பற்றி என்ன சந்தேகம்? நமது இந்திய சர்க்காரின் உணவு மந்திரி ஸ்ரீ ஜெயராம்தாஸ் தௌலத்ராமின் பேச்சுகளிலிருந்து அது தெளிவாகத் தெரிந்து போகிறதே!

தேவலோகத்தில் வாழ்கிறவர்கள் தினசரி சோளத்தைத்தான் உணவாக உட்கொள்கிறார்கள்! அரிசி முதலிய வேறு எந்தத் தானியத்தைச் சாப்பிட்டாலும் அவர்களுக்கு வயிற்று வலி வந்து விடுகிறது! ஆகையால் சோளத்தையே காலையிலும் மத்தியானத்திலும் மாலையிலும் மூன்று தடவை வலம் வந்து வணங்கி விட்டு உட்கொள்கிறார்கள். உண்மையில் சோளச் சோற்றையே அவர்கள் சொர்க்கமாகக் கருதுகிறார்கள்! சோள உணவினாலேதான் சொர்க்கம் சொர்க்கமாயிருக்கிறது! சோளம் மட்டும் இல்லாவிட்டால் சொர்க்கம் நரகமாகிவிடாதா!...

இப்படியாக இந்திய சர்க்காரின் உணவு மந்திரி ஸ்ரீ ஜெயராம்தாஸ் தௌலத்ராம் அவர்கள் தமிழ்நாட்டில் சென்ற வாரம் சென்ற விடமெல்லாம் சோளத்தின் சிறப்பைச் சொல்லிக்கொண்டே போனார். ஆனாலும் தமிழ்நாட்டு மக்கள் சோளத்தின்மேல் அவ்வளவாக மோகம் கொள்ளவில்லை. "சொர்க்கத்திலுள்ள தேவர்களே சோளத்தைச் சாப்பிட்டுக் கொண்டு சுகமாயிருக்கட்டும்; நாங்கள் கிடைத்த வரையில் வெறும் அரிசிச் சோற்றைச் சாப்பிட்டுக் கொண்டு இந்தப் பூலோகத்திலேயே இருந்து தொலைகிறோம்!" என்றார்கள்.

* * *

தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு முன்வந்த உணவு மந்திரி ஸ்ரீ ஜெயராம்தாஸ் அவர்களுக்கு நாம் மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறோம். அவரைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பிய இந்திய சர்க்காருக்கும் பரிபூரண நன்றி செலுத்துகிறோம்.

கஷ்டப்படுகிறவர்கள் மற்றவர்களிடம் அனுதாபத்தை எதிர்பார்ப்பது இயற்கை; கஷ்டப்படும்போது நல்ல வார்த்தையாக இரண்டு வார்த்தை யாராவது சொன்னால் ஓரளவு ஆறுதல் ஏற்படுகிறது. ஒருவருமே நம்மைக் கவனிக்கவில்லையென்று ஏற்பட்டால் கஷ்டம் பன்மடங்காகிறது. பசியிருந்தவன் சமையலறையிலிருந்து வரும் சமையல் மணத்தைக் கொண்டு ஓரளவு திருப்தியடைகிறான். "ஆச்சு; இதோ இலை போட்டாகி விடும்!" என்று சொல்வதைக் கேட்டாலே கொஞ்சம் பசியைப் பொறுத்துக் கொள்ளலாமென்று தோன்றும்.

இதையெல்லாம் முன்னிட்டே நமது பிரதம மந்திரியும் உணவு மந்திரியும் பற்றாக் குறை ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டும் என்றும், அந்தந்த ஜில்லா ஜனங்களின் கஷ்டங்களை நேரில் கேட்டு அறிய வேண்டுமென்றும் நாம் கோரினோம். கஷ்டங்களை அறிந்து கூடியவரை நீக்க முயல வேண்டுமென்றும் குறைந்தபட்சம் ஆறுதலான வார்த்தைகளாவது சொல்ல வேண்டும் என்றும் விரும்பினோம். உணவுப் பொருள் விநியோகத்திலுள்ள குறைபாடுகளை மந்திரிமார்கள் நேரில் ஸ்தலத்துக்குச் சென்று பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினோம்.

நம்முடைய வேண்டுகோளைச் சென்னை மந்திரிகள் நிறைவேற்றாவிட்டாலும் இந்திய சர்க்காரின் மந்திரி நிறைவேற்றியது குறித்துத் திருப்தியடைகிறோம். பஞ்சப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்க்கவேண்டும் என்று ஸ்ரீ ஜெயராம்தாஸ் ஒப்புக்கொண்டது பெரிய காரியம். ஆங்காங்கு ஜனங்களுடைய ஆவலாதிகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டது

அதைவிடப் பெரிய காரியம். கூடிய வரையில் குறைகளைத் தீர்க்க முயல்வதாக வாக்களித்தது மிக மிகப் பெரிய காரியம்.

சென்னிந்தியர்கள் சோளம் சாப்பிட்டுப் பழகிக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ ஜெயராம்தாஸ் ஆங்காங்கு பிரசாரம் செய்து கொண்டு போனார். சோளத்தின் குணாதிசயங்களைப் பற்றி அவரைப் போல் உற்சாகமடைய நம்மால் முடியாது. ஆயினும் பஞ்சத்தையும் பட்டினியையும் விடச் சோளம் உண்டு உயிர் வாழ்வது மேல் என்பதில் சந்தேகம் இல்லை. வழக்கமான உணவை விட்டு வேறு உணவைக் கைக்கொள்வது மிகவும் கஷ்டமான காரியம். இதற்கு ஜனங்களிடையே கொஞ்சம் பிரசாரம் செய்வது அவசியம். அட்வைஸரி கவர்ன்மெண்டின் கீழ் இதே மாதிரி தமிழ் மக்கள் கோதுமை சாப்பிட வேண்டி நேர்ந்த போது, கோதுமை உணவைப் பற்றிப் பிரமாதமான பிரசாரம் சர்க்காரால் நடத்தப்பட்டது. ஆனால் நம்முடைய சென்னை மந்திரிகளோ, "அரிசி இல்லை; சோளந்தான் இருக்கிறது. வேண்டுமானால் சாப்பிடுங்கள்; வேண்டாவிட்டால் பட்டினி இருங்கள்!" என்ற பாவத்தில் காரியம் செய்து வருகிறார்கள். ஜனநாயக யுகத்தில் சர்க்காரை நடத்துவோர் இத்தகைய மனோபாவம் கொள்ளக் கூடாது. ஸ்ரீ ஜெயராம்தாஸைப்போல் நல்ல முறையிலே பேசி, வாதமிட்டு, அவசியமானால் கெஞ்சிக் கூத்தாடி, ஜனங்களைச் சோளம் உட்கொள்ளத் தூண்டுவதுதான் சரியான முறை.

* * *

ஸ்ரீ ஜெயராம்தாஸ் சென்ற இடங்களில் எல்லாம் ஜனங்கள் அரிசிக் கிராக்கியைப் பற்றி முறையிட்டார்கள். ரூபாய்க்கு முக்கால் படி அரிசி விற்பதை எடுத்துச் சொன்னார்கள். இன்னும் அதிக அரிசி அனுப்ப முயல்வதாக ஸ்ரீ ஜெயராம்தாஸ் நல்ல வார்த்தை கூறினார். ஜில்லாவுக்கு ஜில்லா அரிசி போவதற்குள்ள தடையை எடுக்க வேண்டுமென்று பல இடங்களில் கேட்டுக் கொண்டார்கள். ஜில்லாத் தடையை எடுக்க முடியாது என்று ஸ்ரீ ஜெயராம்தாஸ் கூறினார். இதற்குச் சபைக்கட்டாக அவர் கூறிய வாதங்கள் ஒப்புக்கொள்ளத் தக்கவையல்ல. பழைய அட்வைஸரி கவர்ன்மெண்டின் கீழ் முதல் முதலாக இந்த ஜில்லாவுக்கு ஜில்லாத் தடை ஏற்பட்டது. உத்தியோக வர்க்கத்தவர் இலேசில் தங்களிடமுள்ள அதிகாரங்களைக் கைவிட முன்வருவதில்லையல்லவா? அதிகாரங்களை வைத்துக் கொள்வதற்கு ஏதாவது காரணங்களைச் சொல்வார்கள். ஆகையினால்தான் ரேஷனைப் பெரும்பாலும் கைவிட்ட பிறகு கூட ஜில்லாத் தடையை மட்டும் எடுக்க மாட்டோம் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் பலன் என்ன? திருநெல்வேலியில் ஜனங்கள் அரிசி கிடைக்காமல் அவஸ்தைப் படுகிறார்கள். தஞ்சை ஜில்லாவில் நெல்லைக் களத்து மேட்டிலிருந்து எடுக்காமல் மழை பெய்து முளைத்துப் பாழாய்ப் போகிறது! தஞ்சாவூர் ஜில்லாவுக்கும் ஸ்ரீ ஜெயராம்தாஸ் போயிருந்தால் இதைத் தெரிந்து கொண்டிருப்பார். போகாதபடியினால், உத்தியோக வர்க்கத்தாரின் வாதத்தையே ஸ்ரீ ஜெயராம்தாஸ் சொல்கிறார். இந்த மட்டும் சொல்கிறாரே என்று சந்தோஷப் படுகிறோம். ஜனங்களிடையில் விஷயத்தை எடுத்துச் சொல்லி அறிவுறுத்த வேண்டும் என்று நினைக்கிறார் அல்லவா? அதற்காக வந்தனம்.

* * *

இன்னும் சில இடங்களில் விவசாய அபிவிருத்தி சம்பந்தமான சர்க்கார் உதவிகளைப் பற்றி ஜனங்கள் கேட்டார்கள். "அது வேறு விஷயம். இந்த மூன்று மாதத்தை எப்படி ஓட்டுவது என்பதுதான் என்னுடைய பொறுப்பு. நிரந்தர விவசாய அபிவிருத்தி என்னுடைய இலாகா அல்ல" என்று ஸ்ரீ ஜெயராம்தாஸ் ஓரிடத்தில் சொன்னார். வேறு இடங்களில் வேறு விதமாகச் சொன்னார்.

நாம் ஸ்ரீ ஜெயராம்தாஸிடம் கேட்டுக் கொள்வது என்னவெனில், "இந்த மூன்று மாதத்துப் பொறுப்புத்தான் தங்களுடையது எனில் அடுத்த மூன்று மாதத்துப் பொறுப்பு யாருடையதோ அந்த மகாராஜனை உடனே அனுப்பி வையுங்கள்!" என்பதுதான்.

அடுத்த மூன்று மாதத்திலும் இதே நிலைமை ஏற்படாமலிருக்க வேண்டுமென்றால், இன்றைய தினமிருந்தே வருங்கால விவசாயத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டும்.

அப்படி முன்னாடியே கவனிக்காவிட்டால் திரும்பத் திரும்ப இதே 'அன்றாடம் காய்ச்சி' நிலைதான் ஏற்

பட்டுக் கொண்டிருக்கும். சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தந்தி யடித்துக் கொண்டே யிருப்பார்கள். இந்திய சர்க்கார் வெளி நாடுகளுக்குத் தூது அனுப்பிக் கொண்டே யிருப்பார்கள். கோடி கோடி ரூபாய் வெளி நாடுகளுக்குப் போய்க் கொண்டே யிருக்கும். ஜனங்கள் பசி தீராமல் 'பஞ்சம், பஞ்சம்' என்று முறையிட்டுக் கொண்டே யிருப்பார்கள்.

தமிழ் நாட்டில் பல இடங்களில் சென்ற வாரம் மழை பெய்தது. சீக்கிரத்தில் மேற்காற்று மழை பூரணமாக வந்துவிடும். ஆறுகளில் தண்ணீரும் வரும். குறைந்த காலத்தில் அறுவடை செய்யக்கூடிய குறுவை நெல் நடவுக்கும் விதைப்புக்கும் இப்போதே திட்டம் போட்டால் ஜூலை மாதத்தில் வேலை ஆரம்பிக்கலாம். செப்டம்பரில் நெல் அறுவடையாகும். அப்போது அரிசிப் பஞ்சம் பெரிதும் குறையும்.

இப்போது தூங்கிக் கொண்டிருந்தால் அப்புறமும் பஞ்சம் நீடித்துக் கொண்டிருக்கும்.

சென்னை மாகாணத்தில் எந்தெந்த ஜில்லாக்களில் எத்தனை பிரதேசத்தில் குறுவை சாகுபடி செய்ய வசதி உண்டு என்று சர்க்காரிடம் கணக்கு இருக்கிறதா? அவ்வளவு நிலத்தையும் குறுவை சாகுபடிக்குக் கொண்டு வரவும் நல்ல விளைவு காணும்படி செய்யவும் திட்டம் இருக்கிறதா?

* * *

தமிழ் நாட்டின் உணவுக் களஞ்சியமான தஞ்சாவூர் ஜில்லாவில் மிராசுதார் பண்ணையாள் தகராறு பெருந் தொல்லையாகிச் சாகுபடியைத் தடை செய்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். கொலைக்கும் கொள்ளைக்கும் அஞ்சி விவசாயிகள் பலர் கிராமங்களை விட்டுப் பட்டணங்களில் குடியேறி வருகின்றனர். இந்த நிலைமையில் சரியான முறையில் சரியான காலத்தில் சாகுபடி எப்படி ஆகும்?

தஞ்சாவூர் விவசாயக் குழப்பத்துக்கு வழி செய்யா விட்டால் தமிழ் நாட்டில் அரிசிப் பஞ்சம் ஒருநாளும் தீரப்போவதில்லை. அதைப் பற்றிச் சென்னை சர்க்கார் என்ன யோசனை செய்திருக்கிறார்கள்? என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

ஒன்று பண்ணையாள் — மிராசுதார் தகராறை இருதரப்பும் ஒப்புக்கொள்ளும்படியான முறையில் தீர்த்துவைக்க வேண்டும். இருதரப்புக்கும் பொதுவான தர்ம நியாயமான ஏற்பாடு ஒன்றைச் சொல்லி அதை ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப் படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பண்ணையாள் முறையை அடியோடு ஒழித்து விட்டு, அதன் பலனாக எந்த நிலமாவது தரிசு கிடந்தால் அதைச் சர்க்கார் எடுத்துக் கொண்டு சாகுபடி செய்ய முன்வர வேண்டும்.

இரண்டாவது வழிதான் சிலாக்கியமானது என்பது நம் அபிப்பிராயம். பண்ணையாள் முறை பழைய யதேச்சாதிகார யுகத்துக்கு உரியது; இந்தக் காலத்துக்கு அது பொருந்தாது. தஞ்சாவூர் ஜில்லாவில் பண்ணையாள் முறையை அடியோடு ஒழித்தால் ஒழியத் தகராறுகள் வந்துகொண்டுதானிருக்கும். விவசாயமும் தடைப்பட்டுக் கொண்டுதானிருக்கும்.

* * *

பிற நாடுகளில் விவசாயத்தை எந்தெந்த முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள் என்பதைக் கொஞ்சம் கவனிக்கும்படியாகச் சென்னை மந்திரிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

அமெரிக்கா தேசம் சென்ற யுத்தத்தில் நாலு வருஷம் ஈடுபட்டிருந்தது. இந்த நாலு வருஷத்தில் அமெரிக்காவின் தானிய உற்பத்தியில் 100-க்கு 50 வீதம் அதிகமாயிற்று! ஆனால் இந்த அபிவிருத்தி போதும் என்று அமெரிக்கர்கள் நின்று விடுகிறார்களா? இல்லை! இரண்டு வாரத்துக்கு முன்னால் தினப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகி யிருந்தது. அமெரிக்காவைப் பற்றித்தான்.

"வெர்ஜீனியா மாகாணத்தில் அல்லி போத்தின் என்னும் விதவைக்குச் சொந்தமான 105 ஏக்கர் தரிசு நிலத்தை விவசாயப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் ஒரே நாளில் பண்படுத்திச் சாகுபடி செய்து காட்டினார்கள். அன்று காலையில் தொண்டர்கள் இயந்திரக் கலப்பை முதலிய கருவிகளுடன் வந்தார்கள். அன்று மாலைக்குள் 105 ஏக்கரா நிலத்தையும் உழுது, மேடு பள்ளம் நிரவி, எருப்போட்டு விதை விதைத்தார்கள். இருபது ஏக்கரா நிலத்தை மாடுகளுக்கு மேய்ச்சல் பண்ணையாக்கிச் சுற்றிலும் வேலி எடுத்தார்கள். தண்ணீருக்காகப் பெரிய குளம் தோண்டித் தண்ணீர் இறைக்கும் எஞ்சின் வைத்துக் கொடுத்தார்கள். பண்ணையின் நடுவில் இருந்த மேற்படி விதவையின் வீட்டைப் பழுது பார்த்து மேற் கூரைக்கு வர்ணம் பூசிப் புத்தம் புதியது மாதிரி செய்தார்கள். வீட்டைச் சுற்றிலும்

கீரிய பூங்கா அமைத்தார்கள். இவ்வளவும் பன்னிரண்டு மணி நேரத்தில் இயந்திர சாதனங்களைக் கொண்டு நடத்திவிட்டது.”

மேற்கண்ட செய்தி ஏதோ ஜால வித்தை மாதிரி தோன்றுகிறதல்லவா? அமெரிக்கா ஒரு அற்புத தேசம். மாய ராட்சதர்கள் வாழும் தேசம். அமெரிக்காவைப் போல் இந்தியாவிலே நாம் செய்ய முடியாது என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் இங்கிலாந்தில் என்ன நடைபெறுகிறது என்று பார்க்கலாமல்லவா?

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் விளம்பர இலாகா பின்வரும் ரஸமான விவரத்தைத் தமிழில் மொழி பெயர்த்துச் சென்ற வாரத்தில் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பியிருக்கிறது:—

“பிரிட்டிஷ் விவசாயிகளுக்கு உதவுவதற்காகத் தாமாகவே முன்வந்துள்ள தொண்டர்களைக் கொண்ட மிகப் பிரம்மாண்டமான ‘தரைப் படை’யின் முற்பகுதியினர் சமீபத்தில் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். 1948-ம் ஆண்டுக்குப் போட்ட திட்டப்படி உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஏற்பட்ட ஏழு மாத கால இயக்கத்தில் சுமார் இரண்டு லட்சம் தொண்டர் படையினர் பங்கு பெறுவார்களென அறிவிக்கப்படுகிறது.

தொண்டர்களின் மொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் இருந்ததைவிட 50,000 இவ்வருடம் அதிகரித்துள்ளது. ஆகவே பிரிட்டன் முழுவதுமுள்ள சுமார் 100 விவசாய முகாம்களுக்கும் போதுமான ஆள் பலம் கிடைத்து வரும்.

பிரிட்டனிலுள்ள காரியாலயங்களிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் சிப்பந்திகள் அனைவரும் தங்கள் விடுமுறையின் போது குறைந்த பட்சம் ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் வரை இவ் விவசாய முகாம்களில் வேலை செய்வதென முடிவு செய்துள்ளனர். கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகளும் தொண்டர் படையின் தொகையை அதிகரிக்கத் தாமாகவே முன் வந்துள்ளனர்.

இவர்களைத் தவிர 30,000 ஐரோப்பியத் தொண்டர்களும் யுத்தக் கைதிகளாயிருந்து விடுவிக்கப்பட்ட சுமார் 16,000 ஜெர்மானியரும் பிரிட்டிஷ் விவசாயப் பண்ணைகளில் வேலை செய்வதற்கு விவசாய மந்திரி காரியாலயம் அனுமதி அளித்துள்ளது. * * * பிரிட்டனில் தற்போது தங்கியுள்ள இதர பல வெளிநாட்டு அன்பர்களும் அதிக உணவு உற்பத்தி இயக்கத்திற்கு உதவுவதின் மூலம் தங்கள் ஓய்வு நேரத்தைக் கழிப்பதென்று முடிவு செய்துள்ளனர்.”

இப்படியாக பிரிட்டனில் உணவு உற்பத்தி இயக்கத்தை நடத்துகிறார்கள். எத்தனையோ நூறு நூறு வருஷமாகப் பிறநாடுகளிலிருந்தே உணவு தருவித்துக் கொண்டிருந்த பிரிட்டனில் மேற்கண்டவாறு உணவு உற்பத்தியை ஒரு மாபெரும் இயக்கமாக நடத்துகிறார்கள்.

சென்னை மாகாணத்தில் இப்படி ஓர் இயக்கம் நம்முடைய பொதுஜன சர்க்காரால் நடத்தப்படும் காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். சென்னை மாகாணத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இப்போதைய விளைவை விட 100-க்கு 10 பங்குதான் அதிகப்படியாக வேண்டும். இந்த அபிவிருத்தி நம்முடைய விவசாயத்தில் செய்ய முடியவில்லையென்றால், நாம் சுதந்திரத்துக்கு லாயக்கற்றவர்கள் என்றாவது முடிவு செய்ய வேண்டும்; அல்லது இப்போதுள்ள சர்க்கார் மந்திரிகள் ஆட்சி புரியத் தகுதியற்றவர்கள் என்றாவது முடிவு செய்ய வேண்டும்.

அட்டைப்பட விளக்கம்

ஆ! மாம்பழமே!

மல்கோவாப் பழம் மார்பைப் பார்த்துக் கொண்டது. காதரும் பீதரும் களிக் கூத்தாடின. ருமானி மாம்பழம் "பிரமாதம்! பிரமாதம்!" என்றது. குண்டு மாம் பழம் பெருமை தாங்காமல் விண்டது. அல்பான்ஸோவும் ஜெஹாங்கீரும் 'கயால்' பாடி மகிழ்ந்தன. நீலம் நிலத்தில் நில்லாமல் குதித்தது. சேலம்பீடுச்சாலே "தமிழ் நாடு தமிழருக்கே" என்றது. பங்கன பல்லி "மதராஸ் மனதே!" என்றது. ஏழை 'பெங்களூரா "என்ன விசேஷம்?" என்று கேட்டது. நாடிப்பசந்து பாரிஸ் தான் போகலாம் என்று புறப்பட்டது.

சென்னைப் பழ ரஸிகர்கள் எல்லாரும் சேர்ந்து வோட்டுக் கொடுத்து 'பழங்களில் சிறந்தது மாம்பழம்' என்று முடிவு செய்ததினாலே தான் மாம்பழங்கள் இவ்வளவு குதூகலம் அடைந்திருக்கின்றன.

மாம்பழத்துக்கு வந்த மகிமையைப் பற்றி மற்றப் பழங்கள் அவ்வளவாகப் பொறுமைப் படவில்லை. பழந் தமிழ் நாட்டு முக்கனிகளில் ஒன்றாகிய மாம்பழத்துக்கு இத்தகைய சிறப்பு வந்தது குறித்துப் பலாப்பழம் மிக்க மகிழ்ச்சி அடைந்து பக்கத்திலுள்ள மல்கோவாவைக் கட்டிக் கொள்ளப் பார்த்தபோது மல்கோவா துரித காலத்தில் நகர்ந்து கொண்டது! சாத்துக்குடி ஆரஞ்சு 'ஹார்ட்டி கன்க்ராசுலேஷன்' தெரிவித்தது. வாழைப்பழம் வழக்கம்போல் வழவழ வென்று வாழ்த்துக் கூறியது. பிறகு எல்லாப் பழங்களும் சேர்ந்து மாம்பழத்துக்குப் பல்லாண்டு பாடின.

கனிவர்க்கக் கண் காட்சியில் ஸ்ரீ எம். எஸ். சிவராமனும், ஸ்ரீ ஜெயராம்தாஸும்



இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எங்கே நடந்தன தெரியுமா? சென்னை அரசாங்க மாளிகைத் தோட்டத்தில் சென்றவாரத்தில் நடந்த கனிவர்க்கக் கண்காட்சியிலே தான்.

• • •

"கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடு" என்பதாக நம் அருமைத் தாய் நாட்டைக் குறித்துப் பாரதியார் பாடினார். அவருடைய வாக்கைப் பொய்யாக்குவதற்கு நமது விவசாய இலாகா மிகப் பாடுபட்டு வருகிறது. அதாவது "கணக்கின்றித் தரும் காரியம் கூடவே கூடாது; கனியாகட்டும், கிழங்காகட்டும், தானியமாகட்டும்; — எதுவானாலும் கணக்குடனே தான் தரவேண்டும்" என்று தீர்மானித்து நாட்டில் விளைவதற்கெல்லாம் கணக்குப் போட்டு விடுகிறார்கள்! இந்தியாவில் உற்பத்தியாகும் கனிவர்க்கங்கள் கூட விவசாய இலாகாவின் கணக்குக்கு உட்பட்டிருக்கின்றன. சென்ற இருபது வருஷத்தில் பழ வர்க்கங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக நாற்பது திட்டங்களுக்கு ரூ. 23½ லட்சம் ரூபாய் இந்திய சர்க்கார் செலவழித்தார்களாம். அதன் பலனாக ஏற்பட்ட அபிவிருத்தி எவ்வளவு தெரியுமா? 1918-19-ல் 57 லட்சம் ஏக்கராவில் பழவிருட்சத் தோட்டங்கள் இருந்தன. இது 1928-29-ல் ஐம்பது லட்சம் ஏக்கரா ஆயிற்று. 1933-34-ல் 48 லட்சம் ஏக்கராவுக்கு வந்து இந்த வருஷத்தில் 45 லட்சம் ஏக்கரா ஆகிவிட்டது!

இப்படித் தலைகீழாக அபிவிருத்தி ஏற்பட்டு வருவதைத் தடுத்துக் கனி உற்பத்தியை அபிவிருத்திச் செய்யும் பிரயத்தனம் சுதந்திர இந்தியாவில் இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு அங்குரார்ப்ப

ணம் சென்ற வாரத்தில் சென்னையில் நடைபெற்றது. மே 21ல் அகில இந்தியக் கனி உற்பத்தியாளர் மகா நாட்டை நமது பிரதம மந்திரி கனம் செட்டியார் திறந்து வைத்தார். "உணவுகளில் சத்வம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று வகை உண்டு. கனி உணவுதான் சாத்வீக உணவு" என்று பிரதம மந்திரி அருமையாகக் கூறினர். கனி உற்பத்தியாளர் என்ற ஹோதாவில் கனம் செட்டியார் தாம் பிரதம மந்திரி என்பதைக்கூட மறந்து "கனி உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சர்க்கார் இன்னும் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும்!" என்று வற்புறுத்தினர்.



"இதுதான் சக்கப் பழம்!" என்று விவசாய மந்திரி ஸ்ரீ மாதவ மேனன் அறிமுகப் படுத்துகிறார்.

அன்று மாலை இந்திய சர்க்காரின் உணவு மந்திரியான ஸ்ரீ ஜெயராம் தாஸ் கனி வர்க்கக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். காலிபோர்னியாவில் மூன்று பேருக்கு ஒரு ஏக்கரா வீதம் கனித் தோட்டம் இருக்கிறதென்றும், கேவலம் பாலைவனப் பிரதேசமான பாலஸ்தீனத்திலேகூட ஏழு பேருக்கு ஒரு ஏக்கரா வீதம் பழத் தோட்டம் இருக்கிறதென்றும், "இனிய நீர்ப் பெருக்கினை இன்கனி வளத்தினை" என்று வர்ணிக்கப்பட்ட இந்தியாவில் எழுபது பேருக்கு ஒரு ஏக்கராப் பழத் தோட்டந்தான் இருக்கிறதென்றும் எடுத்துக் காட்டினர். அங்கேயெல்லாம் ஒரு ஏக்கராவில் விளையும் பழங்களில் இருபதில் ஒரு பங்குகூட நம் நாட்டில் விளைவதில்லை என்றும் சொல்லி, ஆகையால், "கனிகளைப் பெருக்குங்கள்; கனி விருட்சங்களை அதிகமாக்குங்கள்!" என்று மன்றாடினர்.


"ஆகட்டும்! அப்படியே செய்கிறோம்!" என்றார் சென்னை விவசாய இலாகா டைரக்டர் ஸ்ரீ எம். எஸ். சிவராமன் ஐ. ஸி. எஸ். அவர்கள். அவரும் சில புள்ளிக் கணக்குகளை எடுத்துக் காட்டினர். ஒரு ஏக்கரா நிலத்தில் 5000 ராத்தல் தானியம் விளையுமென்றும் அதே நிலத்தில் 60,000 ராத்தல் பழம் விளையச் செய்யலாம் என்றும் கூறிக் கேட்பவர்களைத் திணற அடித்தார். இதற்காகச் சென்னை விவசாய இலாகா செய்து வரும் காரியங்களையும் விளம்பரப்படுத்தினர். வருகிற ஜூலை மாதத்துக்குள் 15,000 எலுமிச்சம் செடிகள் விவசாய இலாகா விநியோகிக்கக் கூடியதாயிருக்கும் என்று பெருமிதத்துடன் கூறினர்! பதினையாயிரம் எலுமிச்சம் செடிகள்! அவ்வளவும் பட்டுப் போகாமல் வளர்ந்து காய்த்துப் பழுக்க ஆரம்பித்து விட்டால் ஒரே சக்கைப் போடுதான்! 108 டிக்ரி வெப்பம் காரணமாகச் சென்னையில் எத்தனை பேருக்குப் பைத்தியம் பிடித்தாலும் அவ்வளவு பேரும் தலையில் தேய்த்துக் கொள்ள வேண்டிய எலுமிச்சம் பழம் கிடைக்கும் அல்லவா?

* * *

கனி வர்க்கக் கண்காட்சிச் சாலையின் முகப்பில் அமைக்கப் பட்டிருந்த கோபுரம் பார்த்தவர்களின் நாவில் ஜலம் ஊறச் செய்வதாயிருந்தது! அந்தக் கனிவர்க்கங்களைக் கொண்டு அமைந்த அழகிய கோபுரத்தையும் காட்சிச் சாலையைத் திறந்து வைத்த ஸ்ரீ ஜெயராம் தாஸ் அவர்களையும் நமது அட்டைப் படத்தில் காணலாம்.

* * *

கனி வர்க்க மகா நாடும் கண்காட்சியும் சென்னையில் நடத்துவதற்குக் காரணமாயிருந்தவர்களில் மூன்று பேரைக் குறிப்பிட வேண்டும். ஒருவர் நமது மிகச் சுறுசுறுப்பான விவசாய டைரக்டர் எம். எஸ். சிவராமன் அவர்கள். இன்னொருவர் ஆந்திர தேச பக்தரான ஸ்ரீ பாபிநீடு எம். எல். ஏ. அவர்கள். இன்னொருவர் சென்னை மாகாணக் கனி வளர்ப்பு நிபுணர் ஸ்ரீ நாயக் அவர்கள். இந்த மூவருக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


HAMAM
பரிசுத்தத்தில்
முதல் பாடம்
★
ஹமாம் சோப்புத் தேய்த்து
அனுதினமும் ஸ்நானம்
செய்யுங்கள்.
HAMAM
ஹமாம் சோப்பு
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ராஜி

29. வழக்கு வேண்டாம்

சமீபத்தில் நடந்த மகா யுத்தத்தின் ஆரம்பத்தில் மிஸ்டர் நெவில்லி சேம்பர்லின் என்பவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்தாரல்லவா? இவருடைய தந்தை மிஸ்டர் ஜோஸப் சேம்பர்லின் என்பவர் அப்போது பிரிட்டிஷ் மந்திரி சபையில் குடியேற்ற நாட்டு மந்திரியாகப் பதவி வகித்தார். டர்பனில் காந்திஜி இறங்கிய அன்று நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்டதும் அவர், “காந்தியைத் தாக்கியவர்களைக் கைதுசெய்து வழக்கு நடத்தவும்” என்று நேட்டால் சர்க்காருக்குத் தந்தி அடித்தார்.

உடனே நேட்டால் சர்க்காரின் அட்டர்னி ஜெனரலான மிஸ்டர் எஸ்கோம்ப், காந்திஜியைக் கூப்பிட்டு அனுப்பினார். காந்திஜிக்கு நேர்ந்த கஷ்டங்களுக்காகத் தமது வருத்தத்தையும் அநுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார். பிறகு அவர் கூறியதாவது:—“கப்பலிலிருந்து இரவு நேரத்தில் இறங்கும்படி நான் சொல்லி அனுப்பினேன். அதைக் கேட்டு நடந்திருந்தால் இந்தக் கஷ்டங்கள் நேர்ந்திரா. ஆனால் மிஸ்டர் லாட்டனுடைய யோசனைப்படி நடந்து அதனால் நேரும் கஷ்டங்களை அநுபவிக்க உறுதி கொண்டிருந்ததை நான் பாராட்டுகிறேன். அம்மாதிரி நடந்து கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு என்பதையும் ஒத்துக் கொள்கிறேன். இப்போது உங்கள் விருப்பம் என்ன? உங்களைத் தாக்கியவர்களைக் குறித்து அடையாளம் சொல்ல முடியுமானால் அவர்களைக் கைது செய்து வழக்கு நடத்தத் தயாராயிருக்கிறேன். வழக்கு நடத்த வேண்டும் என்று மிஸ்டர் சேம்பர்லினிடமிருந்தும் எங்களுக்குத் தந்தி வந்திருக்கிறது.”

இதற்குக் காந்திஜி பின்வருமாறு பதில் அளித்தார்: “யார் மீதும் வழக்கு நடத்த எனக்கு விருப்பம் இல்லை. இரண்டொரு மனிதர்களை நான் அடையாளம் கண்டு பிடித்துச் சொல்ல முடியும். அதனால் பயன் என்ன? அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில் எனக்குத் திருப்தி கிடையாது. என்னைத் தாக்கியவர்கள் மீது எனக்குக் கோபம் இல்லை; அவர்கள் மீது நான் குற்றம் சொல்லவும் மாட்டேன். குற்றம் உங்களைப்போன்ற சமூகத் தலைவர்களுடையது. நீங்கள் ஜனங்களுக்குச் சரியான வழி காட்டியிருக்க வேண்டும். அப்படிச் செய்ய நீங்கள் தவறி விட்டீர்கள். யாருக்கும் தண்டனை வாங்கிக் கொடுக்க நான் விரும்பவில்லை. இந்தியாவில் நான் இருந்தபோது நேட்டால் வெள்ளைக்காரர்கள்மீது ஏதோ அவதூறுப் பிரசாரம் செய்ததாக நம்பி அவர்கள் இம்மாதிரி நடந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையை உணரும்போது அவர்களே தங்களுடைய செயலுக்காக வருந்துவார்கள்.”

இதைக் கேட்டதும் மிஸ்டர் எஸ்கோம்புக்கு ஒரே வியப்பாய்ப் போய்விட்டது. காந்திஜியிடம் அவருக்கு ஏற்கனவே இருந்த மதிப்பு இன்னும் உயர்ந்தது.

“இப்போது நீங்கள் சொன்னதை எழுத்து மூலமாக எழுதித் தருவீர்களா? ஏனெனில் தங்களுடைய விருப்பம் இதுவென்று மிஸ்டர் சேம்பர்லினுக்கு நான் அறிவித்து விடவேண்டும். ஆனால் அவசரப்

பட்டு நீங்கள் எழுதிக் கொடுக்கவேண்டாம். திரும்பிச் சென்று மிஸ்டர் லாப்டனையும் இன்னும் உங்களுடைய நண்பர்களையும் கலந்து கொண்டு முடிவு செய்யலாம். முடிவு செய்த பிறகு எனக்கு எழுதித் தெரிவித்தால் போதும். ஆனால் ஒரு விஷயம் நிச்சயமாகச் சொல்வேன். இப்போது நீங்கள் சொன்னதுபோல் உங்களைத் தாக்கியவர்கள் மீது வழக்குத் தொடாமல் விட்டீர்களானால், நேட்டாலில் அமைதியை நிலை நாட்டுவதற்குப் பெரிதும் உதவியாயிருக்கும்!" என்று மிஸ்டர் எஸ்கோம்ப் சொன்னார்.

"வந்தனம்! ஆனால் இது விஷயமாக நான் யாரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை. தங்களிடம் வருவதற்கு முன்னாலேயே இதைப்பற்றி நன்றாக ஆலோசித்து முடிவு செய்து விட்டேன். இந்த நிமிஷமே தாங்கள் கேட்டபடி எழுதிக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றார் காந்திஜி.

ஆம்; காந்திஜி கப்பலை விட்டு இறங்குவதற்கு முன்னாலேயே கப்பல் உத்தியோகஸ்தர்களிடம் சம்பாஷிக்கும்போது, "எனக்கு வெள்ளைக்காரர்கள் மீது தனிப்பட்ட கோபம் கிடையாது. அவர்கள் எனக்குத் தீங்கு செய்தாலும் நான் அவர்களுக்குத் திருப்பித் தீங்கு செய்ய மாட்டேன்" என்று சொல்லியிருந்தார் அல்லவா?

அந்த வார்த்தையை இப்போது நிறைவேற்றினார். மிஸ்டர் எஸ்கோம்ப் கேட்டபடி "வழக்குத் தொடர வேண்டியதில்லை" என்று வாக்குமூலம் எழுதிக் கொடுத்தார்.

• • •

காந்திஜி போலீஸ் ஸ்டேஷனை விட்டு வீட்டுக்குச் சென்றபோது மிஸ்டர் அலெக்ஸாண்டர் இரண்டு போலீஸ் சேவகர்களை அவருடைய பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தார். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே போலீஸ் பாதுகாப்புத் தேவையில்லாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

'நேட்டால் அட்வர்டைஸர்' என்னும் பத்திரிகையின் பிரதிநிதி காந்திஜியைப் பார்க்க வந்தார். இந்தியாவில் காந்திஜி செய்த காரியங்களைப் பற்றியும் பேசிய பேச்சுக்களைப் பற்றியும் பல கேள்விகள் கேட்டார். ஸர் பிரோஸிஷா மேத்தாவின் யோசனைப்படி காந்திஜி இந்தியாவில் எல்லா இடங்களிலும் தமது பிரசங்கங்களை எழுதிப் படித்திருந்தார். அவ்விதம் செய்தது இப்போது மிகவும் உபயோகமாயிருந்தது. தமது பேச்சுக்களின் நகல்களைக் காந்திஜி மேற்படி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கொடுத்து, "இந்தியாவில் என் பேச்சுகளில் எதைப்பற்றியாவது மிகைப்படுத்திச் சொல்லியிருக்கிறேனா, — தென்னாப்பிரிக்காவில் பகிரங்கமாகச் சொல்லாத எந்த விஷயத்தையாவது இந்தியாவில் சொல்லியிருக்கிறேனா, — நீரே பார்த்துக் கொள்ளும்!" என்றார். பிரசங்கங்களின் நகல்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றையும் மேற்படி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கொடுத்தார். அவற்றில் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரரைப் பற்றிக் கடுமையாகவோ அவதூறாகவோ ஒரு வார்த்தையும் இல்லை என்று பத்திரிகைப் பிரதிநிதி தெரிந்து கொண்டார். மற்றும், 'கோர்லாண்டு' 'நாதேரி' கப்பல்களில் வந்த பிரயாணிகளைத் தாம் திரட்டிச் சேர்த்துக் கொண்டு வரவில்லையென்றும், கப்பல் ஏறுவதற்கு முன்னால் அவர்களைத் தமக்குத் தெரியவே தெரியாது என்றும் ஆதாரங்களுடன் நிரூபித்தார். மேற்படி கப்பல்களில் வந்தவர்களில் பலர் ஏற்கெனவே தென்னாப்பிரிக்காவில் குடியேறியவர்கள், — தாய் நாட்டுக்குச் சென்று திரும்புகிறவர்கள் என்றும், இன்னும் பலர் நேட்டாலில் குடியேறும் உத்தேசம் இல்லாதவர்கள், — டிரான்ஸ்வாலுக்குப் போகிறவர்கள் என்றும் எடுத்துக் காட்டினார்.

இந்த விவரங்களையெல்லாம் மேற்படி பத்திரிகைப் பிரதிநிதி தம்முடைய பத்திரிகையில் வெளியிட்டார். இத்துடன், காந்திஜி தம்மைத் தாக்கியவர்கள் மீது வழக்குத் தொடர மறுத்து விட்டார் என்னும் செய்தியும் பிரசுரமாயிற்று. இந்த விவரங்களினால் டர்பன் ஐரோப்பியரின் மனோபாவம் மாறிவிட்டது. அவர்கள் தங்களுடைய நடத்தையைக் குறித்து அவமானப்படலாயினர். பல பத்திரிகைகள் காந்திஜி குற்றமற்றவர் என்று தீர்ப்புக் கூறி ஜனக் கூட்டத்தின் செயலைக் கண்டித்தன. இவ்வாறு டர்பன் வெள்ளைக்காரர்களின் பலாத்காரமும் காந்திஜியின் அஹிம்சையும் தென்னாப்பிரிக்கா இந்திய சமூகத்துக்கு ஒரு புதிய கௌரவத்தை அளித்தன. இந்தியர்களின் உரிமைப் போராட்டத்துக்கும் அதனால் சாதகம் ஏற்பட்டது. இந்தியர்களும் அதிகத் தன்மதிப்பு உணர்ச்சி பெற்றார்கள்.

30. எளிய வாழ்க்கை

காந்திஜி கப்பலி லிருந்து இறங்கிய அன்று நடந்த விபரீத சம்பவங்களின் கொந்தளிப்பு விரைவிலேயே அடங்கி விட்டது. சில தினங்களுக்கெல்லாம் அவருடைய தினசரி வாழ்க்கை பழைய ரீதிக்கு வந்தது. வக்கீல் தொழிலில் வருமானம் மட்டும் அதிகம் வரத் தொடங்கியது. ஆனால் அதைக் காந்திஜி அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. தம் வாழ்க்கையைப் பொது ஊழியத்துக்கு மேலும் மேலும் அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும் என்னும் ஆசை அவர் உள்ளத்தில் வளர்ந்து வந்தது. பொது வேலையில் ஸ்ரீ மனசுக்லல் நாஸர் காந்திஜிக்குப் பெரிதும் உதவி செய்தார்.

காந்திஜி இல்லாத சமயத்தில் சேத் ஆதம்ஜி மியாகான் தமது கடமையை நன்கு நிறைவேற்றி யிருந்தார். நேட்டால் இந்தியக் காங்கிரஸுக்கு ஆயிரம் பவுனுக்கு மேல் நிதி சேர்த்திருந்தார். காந்திஜி திரும்பி வந்த தினத்தில் நடந்த சம்பவத்தின் பயனாக இந்திய சமூகத்தினிடையே பெரிதும் கிளர்ச்சி ஏற்பட்டிருந்தபடியால் அதைப் பயன்படுத்திக் கொண்டு காங்கிரஸ் நிதியை 5000 பவுனாகப் பெருக்கினார். இதைக் கொண்டு ஒரு வீடு வாங்கி வாடகைக்கு விடப்பட்டது. இவ்விதமாக நேட்டால் இந்தியக் காங்கிரசுக்கு நிரந்தர சொத்து ஏற்பட்டது.

இம்மாதிரி பொது ஸ்தாபனங்களுக்கு நிரந்தர சொத்து அதிகம் சேர்த்து வைப்பது பிசகு என்பது காந்திஜி பிற்காலத்தில் கொண்ட உறுதியான அபிப்பிராயம். காந்திஜி தென்னாப்பிரிக்காவை ஒரு வழியாக விட்டு விட்டு இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு நேட்டால் காங்கிரஸின் சொத்து கோர்ட்டில் வழக்கு நடப்பதற்குக் காரணமாயிற்று. இதுவும் இன்னும் பல பொது ஸ்தாபன அனுபவங்களும் காந்திஜியின் மனதில், "நிரந்தர நிதிகளைக் கொண்டு பொது ஸ்தாபனங்களை நடத்துதல் பெருந் தவறு" என்ற அபிப்பிராயத்தை உறுதிப் படுத்தியது. இதைப்பற்றிக் காந்திஜி எழுதி யிருப்பதாவது :—

"ஒரு பொது ஸ்தாபனத்தின் நிரந்தர நிதியிலேயே அதன் தார்மிக வீழ்ச்சிக்கு வித்து இருக்கிறதென்பதில் ஐயமில்லை. பொது ஸ்தாபனம் எனில், பொது ஜனங்களின் சம்மதியுடன் பொது ஜனங்களின் பணத்தைக் கொண்டு நடக்கும் அமைப்பு என்று பொருள். அத்தகைய ஸ்தாபனத்துக்குப் பொது ஜனங்களின் ஆதரவு எப்போது இல்லாமற் போகிறதோ, அப்போது அந்த ஸ்தாபனம் இருப்பதற்கே உரிமை இழந்தாகிறது. நிரந்தர நிதியைக் கொண்டு நடத்தப்படும் அமைப்புகள் பொதுஜன அபிப்பிராயத்தை மதியாமல் அதற்கு மாறாக அடிக்கடி காரியம் நடத்துவதைக் காண்கிறோம். நமது தேசத்தில் எங்கும் இது சர்வ சாதாரணம். மத ஸ்தாபனங்கள் என்று கூறப்படும் அமைப்புகளில் சில கணக்குச் சொல்வதே கிடையாது. தர்ம கர்த்தர்கள் சொத்துக்குச் சொந்தக்காரர்களாகி விட்டார்கள். அவர்கள் யாருக்கும் கணக்குச் சொல்லக் கடமைப்பட்டவர்களல்லர். இதையெல்லாம் பார்க்கும்போது, அன்றன்று வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதே பொது ஸ்தாபனங்களின் இலட்சியமாயிருக்க வேண்டுமென்று நான் உறுதி கொண்டிருக்கிறேன்.

நிரந்தரமான கட்டிடங்கள் இன்றி நடைபெறுவதே சாத்தியமில்லாத ஸ்தாபனங்கள் சில இருக்கின்றன. அவற்றிற்கு நான் மேற்கூறியவை பொருந்தா. பொது ஸ்தாபனங்களின் நடைமுதல் செலவுகள் வருஷா வருஷம் கிடைக்கும் சந்தாத் தொகையைக் கொண்டே நடைபெற வேண்டு மென்பது தான் என் கருத்து."

ஒரு பக்கம் பொது ஊழியத்தில் காந்திஜி ஈடுபட்டிருக்கையில் அவருடைய குடும்ப வாழ்க்கை சம்பந்தமான பல பிரச்னைகள் எழுந்தன. பத்து வயதான மருமகனும், ஒன்பது வயதும் ஐந்து வயதும் உள்ள புதல்வர்கள் இருவரும் அவருடன் வந்திருந்தார்கள். இந்த மூன்று சிறுவர்களையும் படிக்க வைப்பது எப்படி? காந்திஜி பாரிஸ்டர் ஆகையால், ஐரோப்பியக் குழந்தைகளுக்கு என்று ஏற்பட்ட பள்ளிக்கூடங்களில் அவருடைய குழந்தைகளைச் சேர்த்துக் கொண்டிருப்பார்கள். அதை அவர் விரும்பவில்லை. இந்தியக் குழந்தைகளுக்கு என்று தனியாகக் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் நடத்திய பள்ளிக்கூடத்தில் சேர்க்கவும் விரும்ப வில்லை. ஆதலால்

குழந்தைகளுக்குக் காந்திஜியே கல்வி கற்பிக்க முயன்றார். ஆனால் அதற்குப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை. எனவே, ஆங்கில பாஷை கற்பிப்பதற்கு ஓர் ஆங்கில உபாத்தியாயினியை ஏற்படுத்திவிட்டு மற்ற விஷயங்களைத் தாமே கற்பித்தார். காந்திஜி தம்முடைய குழந்தைகள் யாரையும் தென்னாப்பிரிக்காவிலோ இந்தியாவிலோ பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேயில்லை. அவருடைய மூத்த புதல்வன் பிற்காலத்தில் தன்னுடைய சொந்தப் பொறுப்பில் இந்தியாவிலுள்ள சர்க்கார் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படித்தான். மற்ற மூன்று புதல்வர்களும் காந்திஜியிடமே பெரும்பாலும் கல்வி கற்றுக் கொண்டார்கள். தம்முடைய புதல்வர்களுக்குக் கல்வி கற்பித்ததிலும் பின்னால் ஏற்பட்ட போனிக்ஸ் ஆசிரமத்தில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்ததிலும் காந்திஜி பல அநுபவங்களை அடைந்தார். இவற்றைக் கொண்டு இந்தியக் குழந்தைகளுக்கு எந்த முறையில் கல்வி கற்பிக்க வேண்டும் என்பது பற்றி அவர் உறுதியான முடிவுகள் செய்யக் கூடியதாயிற்று. அந்த அநுபவங்களும் முடிவுகளும் காந்திஜியின் ஆதாரக் கல்வித் திட்டத்துக்கு ஆதாரமாயமைந்தன.

* * *

வக்கீல் தொழிலிலும் குடும்பப் பிரச்னைகளிலும் காந்திஜிக்கு வேண்டிய அநுபவங்கள் இருந்தும் அவருடைய மனம் திருப்தியடையவில்லை. சகோதர மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்னும் ஆர்வம் அவருடைய உள்ளத்தில் வளர்ந்து வந்தது. ஒரு நாள் ஒரு குஷ்டரோகி காந்திஜியின் வீட்டுக்குப் பிச்சை கேட்க வந்தான். அவன் ஒப்பந்தத் தொழிலாளியாக வந்து மேற்படி கொடிய நோய் காரணமாக வேலை இழந்து திக்கதியானவன். அவனுக்குப் பிச்சை போட்டுத் துரத்திவிடக் காந்திஜி விரும்பவில்லை. வீட்டிலேயே சில நாள் இருக்கும்படிச் சொல்லி அவனுடைய புண்களை அலம்பிக் கட்டிச் சிகிச்சை செய்தார். வீட்டிலேயே அவனை வைத்துக் கொண்டிருத்தல் மற்றவர்களுக்குத் தொல்லையாயிருந்தது. எனவே கொஞ்சம் உடம்பு குணமானதும் ஒப்பந்தத் தொழிலாளிகளுக்கென்று ஏற்பட்ட வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தார்.

அது முதல் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் ஆர்வம் காந்திஜியின் மனதில் வளர்ந்து வந்தது. பார்ஸி ரஸ்டம்ஜி தர்மத்துக்கென்று கொஞ்சம் சொத்து ஒதுக்கி வைத்தார். அதைக் கொண்டு காந்திஜி ஏழைகளுக்காகத் தர்ம வைத்திய சாலை ஒன்று ஏற்படுத்தினார். ஏழைகளுக்கு உதவி செய்வதில் பற்றுக் கொண்ட டாக்டர் பூத் மேற்படி வைத்தியசாலையைக் கவனித்துக் கொண்டார். அந்த வைத்திய சாலையில் காந்திஜி தினம் இரண்டு மணி நேரம் வேலை செய்தார். நோயாளிகளிடம் பேசி அவர்களுடைய நோய்களைத் தெரிந்து கொண்டு டாக்டர் பூத்திடம் சொல்லி அவர் எழுதிக் கொடுக்கும் முறைப்படி மருந்துகளைக் கலந்து கொடுத்து வந்தார். சுருக்கச் சொன்னால், 'கம்பவுண்டர்' வேலை பார்த்தார். இந்தத் தொண்டு காந்திஜிக்கு மிக்க மன நிம்மதி அளித்தது. அதோடு ஏழை இந்தியர்களுடன் கலந்து பழகுவதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகம் கிடைத்தன.

ஆரம்பத்தில் காந்திஜி தென்னாப்பிரிக்காவில் மேனாட்டு முறையில் நாகரிக வாழ்க்கை முறையை மேற்கொண்டிருந்தார். தொண்டில் பற்று அதிகமாக ஆக, ஆடம்பரத்தில் வெறுப்பு மிகுந்தது. வாழ்க்கையை எளிமைப்படுத்த ஆரம்பித்தார். வண்ணானிடம் துணிகளைச் சலவைக்குப் போடுவதில் பணம் அதிகச் செலவானதுடன் சமயத்தில் துணிகள் வருவதில்லையாதலால் டஜன் கணக்கில் சட்டைகளும் காலர்களும் தேவையாயிருந்தன. எனவே சலவைச் சாமான்களும் இஸ்திரிப்பெட்டியும் வாங்கி வைத்துக்கொண்டு காந்திஜி தாமே துணிகளை வெளுத்துக் கொள்ளத் தொடங்கினார். முதன் முதலில் சலவை சரியாக வரவில்லை. கழுத்துப் பட்டைக்கு இஸ்திரி போட்டதில் பசை மாவு அதில் அதிகமாக ஒட்டிக் கொண்டு கோர்ட்டுக்குப் போன பிறகு உதிர்ந்து விழ ஆரம்பித்தது. மற்ற பாரிஸ்டர்கள் இதன் பொருட்டுக் காந்திஜியைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் கேலிக்கும் பரிகாசத்துக்கும் பயப்படும் சுபாவம் காந்திஜிக்கு எப்போதுமே கிடையாது. சிரித்தவர்களைப் பார்த்து, "என்னுடைய காலரை நானே சலவை செய்து இஸ்திரி போட்டதில் இப்படி மா உதிர்கிறது. அது உங்களுடைய குதூகலத்துக்குக் காரணமாயிருப்பதில் எனக்கு இருமடங்கு சந்தோஷம்" என்றார் காந்திஜி.

"எதற்காக நீங்களே சலவை செய்து கொள்ள வேண்டும்? இந்த ஊரில் சலவைச் சாலை இல்லையா?" என்று காந்திஜியின் பாரிஸ்டர் நண்பர்கள் கேட்டார்கள்.

“இருக்கின்றனர்! அதனால் என்ன? நம்முடைய சொந்தக் காரியங்களுக்கு எதற்காகப் பிறரை நம்பியிருக்க வேண்டும்? நம்முடைய காரியங்களை நாமே செய்து கொள்வது தானே நல்லது?” என்று காந்திஜி பதில் அளித்தார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் காந்திஜி சலவைக் கலையில் நன்கு தேர்ந்து விட்டார். பின்னால் ஒரு சமயம் ஸ்ரீ கோகலே தென்னாப்பிரிக்காவுக்கு விஜயம் செய்தார். கோகலேயிடம் அவருடைய குரு ஸ்ரீ ரானடே அன்பளிப்பாகக் கொடுத்த அங்க வஸ்திரம் ஒன்று இருந்தது. முக்கியமான சந்தர்ப்பங்களில் ஸ்ரீ ரானடே அளித்த அங்க வஸ்திரத்தைப் போட்டுக் கொள்வது ஸ்ரீ கோகலேயின் வழக்கம். தென்னாப்பிரிக்காவில் ஜோகானிஸ்பர்க் இந்தியர்கள் கோகலேக்கு ஒரு விருந்து நடத்தினார்கள். அதற்கு மேற்படி அங்க வஸ்திரத்தை அணிந்து கொண்டு போகக் கோகலே விரும்பினார். ஆனால் அங்க வஸ்திரம் மடிப்புக் கலைந்து போயிருந்தது. இது குறித்துக் கோகலே அடைந்த கவலையைக் காந்திஜி தெரிந்து கொண்டு தம்முடைய கைவரிசையைக் காட்டுவதாகச் சொன்னார்.

“அரசியல் காரியங்களுக்கும் வக்கீல் வேலைக்கும் உம்மை நம்பலாம். ஆனால் சலவைத் தொழிலுக்கு எப்படி நம்பமுடியும்? அங்க வஸ்திரத்தைச் சுட்டுச் சுவராக்கி விட்டால் என்ன செய்வேன்?” என்றார் கோகலே.

காந்திஜி மேலும் பிடிவாதம் பிடித்து அங்க வஸ்திரத்தை வாங்கிக் கொண்டார். சலவைத் தொழிலாளியைவிட நன்றாய் இஸ்திரி செய்திருப்பதாகக் கோகலே மகிழ்ச்சியுடன் அத்தாட்சி கொடுத்தார்.

சலவைத் தொழிலைப்போலவே தலைமயிர் வெட்டிக் கொள்ளும் வேலையையும் காந்திஜி கற்றுக் கொண்டார். முதலில் இந்தக் காரியமும் காந்திஜியை அவருடைய சகாக்களின் நகைப்புக்கு உள்ளாயிற்று. “உமது மயிருக்கு என்ன ஆபத்து வந்தது? எலி கடித்து விட்டதா?” என்று நண்பர்கள் சிரித்துக் கொண்டே கேட்டார்கள். ஆனால் கொஞ்ச நாளைக்குள் தலை மயிரைத் தாமே வெட்டிக் கொள்வதிலும் காந்திஜி நல்ல திறமை அடைந்தார்.

தம்பி! இதெல்லாம் ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் சலவைத் தொழில், க்ஷவரத் தொழில் உட்பட அறுபத்து நாலு கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார் என்னும் விஷயத்தை நினைப்பூட்டுகிறதல்லவா?

வட்ட மேஜை

விழுப்புரம்
15-5-48

★

வெறுத்து விட்டேன்!

‘கல்கி’ ஆசிரியர் அவர்களுக்கு,

எனக்கு ரயில் பிரயாணமே வெறுத்து விட்டது. காரணம், சென்ற சில காலமாகத் திடீர் திடீர் என்று நடந்துவரும் ரயில் வேலை நிறுத்தங்கள் தான். அன்று ஒரு நாள் நான் கடலூர் போய்விட்டு வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள் போதும் போதும் இந்த ரயில் பிரயாணம் என்று ஆகிவிட்டது. பட்டாளத்திலிருந்து உயிரோடு திரும்பி வந்த பிள்ளையைப் போல் என் பெற்றோர்கள் என்னை வரவேற்றார்கள். மஞ்சள் நீர் ஆரத்தி கூட எடுத்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! அவர்களுக்கு நான் “எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய மாட்டோம் என்று தொழிலாளர்கள் வழியில் ரயிலை நிறுத்தி விட்டார்கள்” என்று சொன்ன போது, எங்கள் வீட்டுக் குழந்தை வாசு “அவர்களுக்கு அவ்வளவு பலமா இருக்கு!” என்று ஒரு போடு போட்டான்.

எந்த மகானுபாவன் இந்த ‘ஸ்டிரைக்’ என்ற வார்த்தையை அகராதியில் புகுத்தினானோ தெரியவில்லை. இந்த ஸ்டிரைக் என்ற பதம் காதில் பட்ட உடனேயே மனதைச் சங்கடப் படுத்துகிறது. இந்த ஸ்டிரைக் காரணமாக எங்கள் ஜங்ஷனில் நிற்கும் ரயில்களிலுள்ள பிரயாணிகளும் பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளும் ஆயிரக் கணக்கானவர்கள். பட்டினியால் வாடுபவர்கள் அதில் பலர். அவர்களைப் பார்க்க மனம் சகிக்கவில்லை. சிலர் ஸ்டேஷனிலேயே அடுப்பை மூட்டும் கதிக்கு வந்திருக்கிறார்கள். தப்பித் தவறி ஒரு ரயில் நகர்ந்தால் அதிலுள்ள ஜனங்கள் முகம் பரவசமடைகின்றனர்! இன்னும் கொஞ்ச நாளில் கல்யாணமாகாத தொழிலாளர்களுக்குக் கம்பெனியே கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று ஸ்டிரைக் செய்வார்கள் போலிருக்கிறது. இந்த ஸ்டிரைக் என்ற பூதத்தைச் சுதந்திர இந்தியாவை விட்டு விரட்டச் சர்க்கார் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் என்று எண்ணுகிறேன்.

எஸ். கண்ணன்.

கோயமுத்தூர்
10—5—48

பிரசாரம் வேண்டும்!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

மக்கள் உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும் கஷ்டப்படும் வேளையில் காங்கிரஸ் சர்க்காருக்கு விரோதமாகச் சிலர் பிரசாரம் செய்வதை நம்பிவிடுகிறார்கள். லஞ்ச ஊழலும் அதிகமாகத் தாண்டவமாடி ஏழைகளின் கஷ்டத்தை அதிகமாக்கிவிட்டது. கிடைத்த உணவை அவ்வப்பொழுது எல்லா இடங்களுக்கும் அனுப்பிப் பங்கீடு செய்வதற்கு நேர்மையும் திறமையுமான நிர்வாகம் வேண்டும். சட்டசபை அங்கத்தினர்கள் அடிக்கடி தங்கள் தொகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து மக்கள் குறைகளை நேரில் அறிந்து சர்க்காருக்கு அறிவித்துக் கூடுமான வரையில் பரிகாரம் உடனுக்குடன் செய்ய வேண்டும். இது அவர்கள் கடமை. ஆனால் பெரும்பாலோர் இதைச் செய்வதில்லை. என் போன்றவன் சர்க்காருக்கு எழுதினால், பரிகாரம் கிடைக்க மாதங்கள் ஆகின்றன! சட்டசபை அங்கத்தினர்களும் மந்திரிமார்களும் ஜனங்களுடன் நெருங்கிப் பழகி மக்களின் குறைகளைப் போக்க இது வரை தாங்கள் செய்ததையும் இனிச் செய்யப் போவதையும் அறிவித்துப் பிரசாரம் செய்ய வேண்டும். பிரசாரம் பலமானால், பதுக்கல் செய்து கொள்ளையடிக்கும் வியாபாரியும் திருந்தி விடுவான். அதிகாரிகளும் நேர்மையாக நடப்பார்கள். ஜனங்களும் ஒற்றுமையாய் இருக்கப் பழகிக் கொள்வார்கள். மாகாண சர்க்காரை நான் மனப்பூர்வமாக ஆதரிப்பவன். குறை கூறுவதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

கி. சிவகுருசாமி.

பூவிருந்தவல்லி
10—5—48.

தெரியும்—தெரியாது

கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

சில ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக்கூடங்களில் முதல் வகுப்பில் அந்தந்த ஊரைப் பற்றியும், இரண்டாவது வகுப்பில் தாலூக்காவைப் பற்றியும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. மூன்றாவது வகுப்பில் ஜில்லா, நான்காவது வகுப்பில் மாகாணம், ஐந்தாவது வகுப்பில் - நாடு. இந்த முறையில் பூகோளம் கற்பிக்கப்பட்டு வந்தது.

இன்று பையன் பால பருவம் முடிவதற்குள் பாரில் உள்ள நாட்டுப் பான்மை யனைத்தையும் ஒருமிக்க அறியவேண்டிய முறையில் அமெரிக்காக் கண்டம் முதல் அரேபிய தேசம் அண்டார்டிக் பிரதேசம் உள்பட பாடம் அமைகின்றது. இந்தியாவில் ஓடும் மிகப் பெரிய வளமுள்ள நதி தெரியாதவன் அமேசானைப் பற்றி அளக்கிறான்; மிஸிஸிபியைப் பற்றி மொழிகின்றான். கேட்டால், உடனே உரைப்பான் பஞ்சாபில் பிரம்மபுத்திரா ஓடுகிறதென்று! ஊருக்கு அருகில் இருக்கும் ஏரி, ஆறு, மற்றைய நீர்ப்பாசன வசதிகளைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் அமெரிக்காவின் ஐந்து ஏரிகளின் வளத்தைப் பற்றிப் பிரமாதமாகப் பேசுவான். இத்தகைய கல்வி முறை எப்போது மாறுமோ தெரியவில்லை!

சா. கி. பாலசுப்பிரமணியம்.

சென்னை
9—5—48

இங்கிலீஷ் ஒரு தடை!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

தங்கள் பத்திரிகையில் 'பெற்றோன்' என்ற புனைபெயரில் "எந்த நாள் இக்கொடுமை?" என்ற கட்டுரை மாணவர்கள் அடையும் துயரை அப்படியே சித்திரித்துக் காட்டுகிறது. ஒரு மாணவன் என்ஜினியராக ஆகிவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு கணிதம் மற்றும் அதற்குத் தேவையான பாடங்களைப் படிக்கிறான். இன்டர்மீடியட்டில் கணிதத்திலும் மற்றப் பாடங்களிலும் உயர்ந்த மார்க்குகள் வாங்குகிறான். ஆனால் ஆங்கிலத்தில் முப்பது மார்க்குதான் வாங்குகிறான். இதனால் அவன் மேல் வகுப்புக்குச் செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. பாஸ் ஆகாத மாணவன் தான் போட்ட திட்டம் அன்னிய மொழியில் குறைந்த மார்க்கு வாங்கிய காரணத்தால் தகர்த்தெறியப் படுவதை உணர்ந்து மனமுடைந்து கடைசியில் குமாஸ்தா வேலைக்குச் செல்கிறான். இப்படி அவதியுற்ற மாணவர்கள் பலர். மாணவன் திட்டம் தடைப் படுவதால் அவனுக்கு மட்டுமல்லாமல் நமது நாட்டிற்கும் பெரும் நஷ்டம் என்பதை உணரவேண்டும். சுதந்திர இந்தியாவில் பல என்ஜினியர்கள், டாக்டர்கள் மற்றும் பல அறிஞர்கள் தேவை. அன்னிய மொழி அதற்குத் தடையாக இருக்கக்கூடாது.

வி. எஸ். எஸ். மணி.

பம்பாய்
9—5—48

தியாகி யார்?

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

உங்கள் பத்திரிகையில் 'வட்ட மேஜை', யில் நண்பர் என். ராம...... (தேரூர், நாகர்கோவில்) அவர்கள் எழுதிய கடிதம் படித்தேன். நானும் நாகர்கோவிலைச் சேர்ந்தவனாதலால் எனக்குத் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸைப் பற்றி நன்கு தெரியும்.

ஸி. பி. யின் ஆட்சிக் காலத்தில் நாஜிக் கொள்கையை விரட்டுவதற்காக மற்ற நண்பர்களுடன் இந்தத் தலைவர்களும் தோளோடு தோள் சேர்ந்து பாடுபட்டார்கள். ஸி. பி. யின் காலத்தில் தமிழ்த் தலைவர்கள் ஓடவுமில்லை, ஒளியவுமில்லை.

வகுப்பு வாதிகளும் பிற்போக்காளர்களும் நிறைந்த ஸ்தாபனம் என்று கூறுவது மடமையிலும் மடமை. ஒரு ஸ்தாபனத்திற்கு விரோதமாகக் கிளம்புகிறவர்கள் அதைப்பற்றி என்ன வேண்டுமானாலும் கூறலாம் போலும்!

இன்று திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸில் இருப்போர் தியாகிகள். உழைப்பாளிகள். திட நெஞ்சம் படைத்தவர்கள்.

சிறை வாசம் செய்யாவிட்டால் 'தியாகி யல்ல' என்று கூற முடியுமா? தேச பக்தி அற்றவர்கள் என்று சொல்ல முடியுமா?

இந்திய சுதந்திர யுத்தத்தில் எத்தனையோ பெரியோர்கள் சிறை செல்லாமலேயே தேசத்திற்காகப் பாடுபடவில்லையா? கவி ரவீந்திரர் எத்தனை தடவை சிறை சென்றிருக்கிறார் என்பதை அந்த நண்பர் கூறுவாரா?

1942 சுதந்திர யுத்தத்தில் நம் தென்னாட்டுச் சாணக்கியர் ராஜாஜி சிறை சென்றாரா? இதனால் மதிப்பிற்குரிய நம் தலைவரைத் தேசபக்தி அற்றவர் என்று கூற முடியுமா?

வே. ராமநாதன்.

ரெங்கநாதபுரம்
11—5—48

நிலைமை பயங்கரம்

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

திருநெல்வேலி ஜில்லாவில் மழை யின்மையால் ஜனங்கள் கஷ்டப் படுகிறார்கள். விவசாயிகளோ ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால் கிணறுகளில் ஜலம் இல்லை. விவசாயத்துக்குரிய கருவிகள் சரியாய்க் கிடைப்பதில்லை. காங்கிரஸ் சர்க்கார் விவசாயிகளைச் சரிவரக் கவனிக்காமல் இருக்கிறார்கள். கிணறு வெட்டச் சர்க்காருக்கு "மனுக் கொடுத்தால் அநேக தடவை விவசாயிக்கு அலைச்சல் உண்டு பண்ணி அதன் பிறகு சர்க்கார் கொடுக்கிற பணத்தில் மூன்றில் ஒரு பங்கை அதிகாரிகள் வாங்கிக் கொள்கிறார்கள். மீதியை விவசாயியிடம் கொடுக்கிறார்கள். இப்படி அதிகாரிகள் செய்துகொண்டு வருகிற விஷயம் காங்கிரஸ் சர்க்காருக்குத் தெரியாதா? அவர்கள் பேரில் தகுந்த நடவடிக்கை ஏன் எடுத்துக் கொள்ளப் படவில்லை? காங்கிரசில் சேர்ந்த பிறகு சில பேர்வழிகள் தங்களுடைய சுயநலம் கருதி ஏராளமாகப் பணம் சம்பாதித்து விட்டார்கள். ஏழை மக்கள் வயிற்றுக்கில்லாமல் துடிதுடிக்கும் போது ஏன் கூச்சல் போட மாட்டார்கள்? நாட்டிலுள்ள நிலைமையைப் பொதுவாகப் பார்க்குமிடத்து வெகு பயங்கரமானதாகத் தோன்றுகிறது.

அ. சென்னப்பன்.

செங்கற்பட்டு
10—5—48

கொடி படும் பாடு!

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

நினைக்க நினைக்கக் கஷ்டமா யிருக்கிறது. நெஞ்சம் குமுறுகிறது. உள்ளம் பதைக்கிறது. ஆம், நம் தேசீயக் கொடி படும் பாட்டை நினைக்கும் போதுதான்.

ஒரு 'லாரி'யைக் கண்டேன். அதன் பக்கங்களில் தேசீயக் கொடி வரையப்பட்டிருந்தது. மூவர்ணக் கொடிதான். மேலே பச்சை வர்ணம் அடிக்கப்பட்டிருந்தது. இடையே வெள்ளையாக விடப்பட்டுப் பச்சை நிறத்தில் அஹிம்சா மூர்த்தி அசோகனின் சக்கரம். கீழே திரும்பவும் பச்சை வர்ணம். 'லாரி' முழுதும் பச்சை வர்ணம் அடிக்கப்பட்டிருந்தது. பச்சை வர்ணம் மட்டும் அகப்படவே அதை வைத்துக்கொண்டே கொடி முழுவதையும் வரைந்து விட்டார்கள் போலும். காணக் கண்கோடி வேண்டும்!

ஒரு தேசீய தீவிர வாதியின் பங்களாவுக்குள் ஒரு சமயம் சென்றேன். மாடி மீதில் உயரமாகப் பறந்துகொண்டிருந்தது அழகிய மூவர்ணக் கொடி. உள்ளே சென்றேன். கீழே மிதியடி போடப்பட்டிருந்தது. அதில் மூவர்ணங்களும் சக்கரமும் அவைகளுக்குரிய நிறங்களில் தென்பட்டன. நான் அதைத் தாண்டிச் சென்றேன். எவ்வளவு பேர் அதை மிதித்திருப்பார்களோ!

உயர்ந்த ரக பீடிகளாம். அதன் பாக்கெட்டின் மேல் தேசீயக் கொடி அச்சிடப்பட்டுள்ளது! இவைகளைக் காணும்போதெல்லாம் நெஞ்சம் குமுறாதா? உள்ளம் பதைக்காதா? கொடி படும் பாடு சொல்லத் தரமன்று. இதை வியாபார முத்திரையாக உபயோகித்தல் கூடாது. மனதிற்குகந்த வர்ணங்களிலும் மனதிற்குகந்த இடங்களிலும் அது வரையப்படவோ அச்சிடப்படவோ கூடாது. தேசீயக் கொடி அதற்குரிய நிறங்களில் காட்சி யளிக்க வேண்டும். இதற்கு வேண்டிய சட்ட திட்டங்களைச் சர்க்கார் உடனே செய்ய வேண்டாமா?

பா. ஸ்ரீ. ரங்கநாதன்.

மாதிரிமங்கலம்
19—5—48

கூப்பன் கொள்ளை

'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு,

'ஜவுளிக் கொள்ளை' என்ற தலையங்கத்தைப் படித்தேன். இப்போது 'கூப்பன் கொள்ளை'யையும் கவனிக்க வேண்டும். சென்னை சர்க்கார் சென்ற ஆண்டு போனஸ் பணம் கொடுத்தனர் விவசாயிகளுக்கு. ஒரு பாதி பணம்; மற்றொரு பாதிக்கு எருவுக்காகக் கூபன். மாயவரம் தாலூக்காவில் சுமார் ஏழு லட்சம் ரூபாய்க்குக் கூப்பன் கொடுத்திருக்கின்றனர். மாயவரம் விவசாய டிப்போவில் ஒரு ஆண்டு நிகர விற்பனை ஒன்றரை லட்ச ரூபாய். ஆனால் இன்றுவரை மூன்று மாதத்திற்குள் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேற்படி டிப்போவில் விற்பனை ஆகியிருக்கிறது. இப்போது போய் பிண்ணாக்கு முதலியன கேட்டால் இல்லை என்று சொல்லுகின்றனர். ஒன்றரை மாத காலமாகக் கடலைப் பிண்ணாக்கு டிப்போவில் இல்லை. இன்னும் இரண்டு மாதத்திற்குப் பிறகுதான் வரும் எனச் சொல்லுகின்றனர். இந்த நிலையில் மிராசுதார்கள் கூப்பனை 85 சதவிகிதம் பணம் கொடுப்பவருக்கு விற்று விடுகின்றனர். சுமார் 50,000 ரூபாய்க்கு ஒரு வாரத்தில் குத்தாலத்தில் வாங்கிக் கொண்டு சென்று விட்டனர். தென் ஆற்காடு ஜில்லாவில் கரும்பு சாகுபடிக்கு வாங்கிக் கொண்டு செல்கின்றனர். சர்க்கார் வயல்கள் நன்கு விளைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் கொடுத்தும் பயன் படாமல் போகிறது.

வி. நடராஜன்.

இலங்கை
12—5—48

இதுவா சுதந்திரம்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

9-5-48 கல்கியில் அட்டைப் பட விளக்கத்தில்......" இந்தியா சுதந்திரம் அடைந்தது; பர்மா சுதந்திரம் அடைந்தது; இலங்கை கூட முக்கால் பங்கு சுதந்திரம் அடைந்தது" ......என்று எழுதி யிருந்தது. இலங்கைக்கு முக்கால் பங்கு சுதந்திரம்தான் இப்போது கிடைத்திருக்கிறது.

இவ்வளவு காலமும் ஏகாதிபத்தியப் பித்துப் பிடித்த பிரிட்டிஷார்கள் நம்மை நேர்முகமாக ஏமாற்றிக் கொள்ளை யடித்து வந்தார்கள். ஆனால் இப்போது மறைமுகமாக நடத்தி வருகிறார்கள். பூரண சுதந்திரம் அடைந்து விட்டோம், பூரண சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று டாம்பீகமாகப் பிரசாரம்

செய்து தலைவர்கள் ஏழைகளை ஏமாற்றியிருக்கிறார்கள்.

ஒப்பந்தத்தின் சில ஷரத்துக்களை கவனித்துப் பார்த்தோமென்றால், இதிலே இருக்கும் சூழ்ச்சிகள் எவ்வளவு என்று அறிந்துக் கொள்ளலாம்.

(1) திருகோணமலை ராணுவ ஸ்தலம் பிரிட்டிஷாருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறதாம். சுதந்திரம் அடைந்த பின் நாம் ஏன் நம் ஸ்தலத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நம் தலைவர்களிடம் கேட்டால், அவர்கள் பின்வருமாறு பதில் கூறுகிறார்கள்:—"பின் ஒரு காலத்தில் நம்மை யாரும் தாக்கினால், உடனே பிரிட்டிஷார் எதிரிகளைத் தாக்கி நம்மைக் காப்பாற்றுவார்கள்." இந்த ஸ்தலத்தை அவர்களுக்குக் கொடுத்திருப்பதினால் இந்தியாவும் ஆபத்துக்குள்ளாகி யிருக்கிறது.

(2) உள்ளூர் ரகளைகள் ஏதாவது நடந்தால் இதை நிறுத்த பிரிட்டிஷாருக்குப் பூரண உரிமை கொடுத்திருக்கிறதாம். நாம் சுதந்திரம் அடைந்த பின் உள்ளூர் விஷயங்களில் தலையிட அவர்களுக்கு என்ன அதிகாரம் உண்டு? இந்த ஷரத்தைப் பார்த்தாலே நமக்குக் கால்பங்கு சுதந்திரம் கூடக் கிடைக்கவில்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

(3) இலங்கையில் யுத்தம் வந்தால், அச்சமயத்தில் பிரிட்டிஷாருக்கு இலங்கையில் அவசர ராணுவச் சட்டங்கள் போடவோ அல்லது சட்டங்களை ரத்து செய்யவோ அதிகாரம் கொடுத்திருக்கிறதாம்.

இன்னும் எத்தனையோ ஒப்பந்தங்கள் இருக்கின்றன. இதில் எவ்வளவு சூழ்ச்சிகள் இருக்கின்றன என்று கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும். ஏனெனில் சில ஒப்பந்தங்கள் மறைமுகமாக நடந்திருக்கிறதாம். நிலைமை இப்படியிருக்கும் பொழுது நமக்குக் கிடைத்திருப்பது பூரண சுதந்திரமுமல்ல, முக்காற் பங்கு சுதந்திரமுமல்ல என்று நிச்சயமாய்த் தெரிகிறது.

நமக்குக் கிடைத்திருப்பது ஒரே சுதந்திரம் தான். அதுவும் மந்திரிமார்களுக்குத்தான் கிடைத்திருக்கிறது. அந்தச் சுதந்திரம் அரசாங்கத்தாரின் செலவில் ஊர்ப் பிரயாணம் செய்வது. இந்தப் போலி சுதந்திரம் கிடைத்துக் கொஞ்ச நாட்களுக்குப் பின்பு, அரசாங்கத்தின் செலவில் சில மந்திரிமார்கள் உல்லாசப் பிரயாணங்கள் செய்ய வெளியூர்களுக்குக் கிளம்பி விட்டார்கள். ஒரு மந்திரியுடன் ஐந்து அல்லது ஆறு காரியதரிசிகள் போகிறார்கள். பணம் எங்கே தான் இருக்கிறது? காரியம்தான் எங்கே உருப்படப் போகிறது? மந்திரிகளுடைய பிரயாணத்திற்காக ஒரு வருஷத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தொகை ஆறு மாதத்தில் முடிந்து விட்டது!

இதுதான் இலங்கை மக்களுக்கு பிரிட்டிஷாரால் அளிக்கப்பட்ட பூரண சுதந்திரம்!

செ. முத்துக்குமாரசுவாமி.

உப்புளியபுரம்
12—5—48

பலிபீடம் வாழட்டும்!

'கல்கி' ஆசிரியர் அவர்கட்கு,

நான் தமிழ் 'வித்துவான்' என்ற விநோத பட்டத்திற்காக இதுவரை தமிழ்க் கல்லூரியில் மாணவனாக இருந்து வந்தேன். இவ்வருடம் வித்துவான் முடிவு வகுப்பின் தேர்தலுக்கு எழுதி யிருக்கிறேன்.

தமிழ்நாடு செய்த பாவம்தான், என்னைப் போன்ற மாணவர்களை, பரீட்சை உருவத்திலும், பரீட்சகர் உருவத்திலும் வந்து பிடித்திருக்கிறது போலும்! கடுந் தமிழில்—மறைந்து போன தமிழில்—புத்தகங்கள்! இன்றையத் தமிழ் மக்கள் கனவிலும் முதலிய ஆட்டிக்கரணங்கள் போட்டாலும் அறிந்துகொள்ள முடியாத சொற்சந்திகள்! இதற்கு உரை ஆசிரியர்கள் செய்யும் ஜால வேடிக்கைகள்! தலைவிதி! இவற்றையெல்லாம் நாங்கள் உருப்போட வேண்டும்! இல்லாவிடில் நிச்சயம் பரீட்சையில் "கோட்" தான்!

இலக்கணத்தில் பாருங்கள்! "சாத்தன் தந்தை" என்பது "சாத்தந்தை" என்றும், "பூதன் தந்தை" என்பது "பூந்தை" என்றும், "ஆதன் தந்தை" என்பது "ஆந்தை" என்றும் ஆகுமாம்!

இது இக்காலத்திற்கு அவசியமா? மேற்கண்ட பெயர்களின் திரிபுகளைத் தெரிந்து கொள்வதால் என்ன லாபம் மாணவர்கட்கு? ஏககாலத்தில் ஆயிரக் கணக்கான மாணவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் அந்தப்பரீட்சகசிகாமணிகள், தங்களின் அறிவுத் திறனை எங்களிடந்தானா காட்ட வேண்டும்? அவர்கள் ஊழிக் காலம்வரை வாழ்ந்திருக்கட்டும்!

இவ்வருடம் நடந்த பல்கலைக் கழகத் தேர்தலில், கொடுத்த கேள்விகளுக்கு உதாரணம் பாருங்கள்! தீர்ப்புக் கூறுங்கள்!

(1) "தொழிற் பெயரெல்லாந் தொழிற் பெயரியல" என்னும் சூத்திரம் எத்தனை இடங்களில் புள்ளி மயங்கியலுள் காட்டப்பட்டிருக்கிறது? காரணம் என்ன?

(2) "களவினுள் தவிர்ச்சி கிழவோற்கில்லை" இதற்கு உரைகாரர் கூறும் நடை விடைகளை விளக்குக.

இவை இலக்கணக் கேள்விகளில் இரண்டு மட்டும்! ஒரு புத்தகம் படித்தால், ஒரு சூத்திரம் எத்தனை இடங்களில் வருகிறதென்று அவசியம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டுமா? இதுதான் படிக்கும் முறையா? மாணவனின் அறிவைச் சோதிக்கும் முறையும் இதுதானா? பரீட்சகர்களென்னும் தேவாதி தேவர்களும் பரீட்சையை நடத்தும் பல்கலைக் கழகமென்னும் பலிபீடமும் நீடூழி வாழட்டும்!

இன்றிருக்கும் வித்துவான் பாடதிட்டங்கள் மூளையின் வளர்ச்சிக் கல்ல, இருக்கும் மூளையும் மழுங்குவதற்குத்தான் பயன் படும்! இன்றிருக்கும் பாடதிட்டங்கள் தமிழின் வளர்ச்சிக் கல்ல, அழிவிற்குத்தான் அறிகுறி! இப்போது அமுலில் உள்ள பாடதிட்டங்களையும் பரீட்சை முறைகளையும் மாற்றி யமைப்பது அவசியத்திலும் அவசியமென்பது என் தாழ்மையான எண்ணம்.

தமிழ் மாணவன்
எஸ். வி. வி. இராமன்.

---

* இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் விழுப்புரம் ஸ்ரீ என். கண்ணன் எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப் பட்டது.



அலை ஓசை

பதினெட்டாம் அத்தியாயம்

மூன்று நண்பர்கள்

தேவ பட்டணத்தின் தேரோடும் மாட வீதியில் எதிர் எதிராக இரண்டு மச்சு வீடுகள் இருந்தன. இரண்டு வீடுகளிலும் வாசல் தாழ்வாரத்திற்கு இரும்புக் கம்பியினால் அடைப்புப் போட்டிருந்தது. இரண்டு வீட்டு வாசற்புறத்திலும் ஒவ்வொரு போர்டு தொங்கிற்று. ஒரு போர்டில் "ஆர். ஆத்மநாதய்யர், பி.ஏ., பி.எல். அட்வகேட்" என்றும் இன்னொரு போர்டில், "என். தாமோதரம் பிள்ளை, பி. ஏ., பி. எல். அட்வகேட்" என்றும் எழுதியிருந்தது.

ஆத்மநாதய்யரும், தாமோதரம் பிள்ளையும் நெடுநாளைய சிநேகிதர்கள். தேவபட்டணத்தில் பெரிய வக்கீல்கள். இருவரும் பெரிய குடும்பிகள்; நல்ல சம்பாத்தியம் உள்ளவர்கள்; ஆனாலும் பெரிய வீடு கட்டிக் கொஞ்சம் கடன் பட்டிருந்தார்கள்.

இரண்டு வருஷத்துக்கு முன்னால் அவர்களுடைய அந்தஸ்தில் கொஞ்சம் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. 'பப்ளிக் பிராஸிகியூடர்' பதவிக்கு இருவரும் பிரயத்தனம் செய்தார்கள். ஒருவருக் கொருவர் தெரிந்துதான் பிரயத்தனம் செய்தார்கள். "தாமோதரம் பிள்ளைக்கு எந்தக் காரணத்தினாலாவது கொடுக்கா விட்டால் எனக்குக் கொடுங்கள்" என்று ஆத்மநாதய்யர் கேட்டார். "ஆத்மநாதய்யருக்கு ஒரு வேளை கொடுக்கா விட்டால் எனக்குக் கொடுங்கள்" என்று தாமோதரம் பிள்ளை சொன்னார். ஊரில் இன்னும் பல வக்கீல்களும் தத்தமக்குப் பதவிக்காகப் பிரயத்தனம் செய்தார்கள். கடைசியில் ஸ்ரீ தாமோதரம் பிள்ளைக்குப் 'பப்ளிக் பிராஸிகியூடர்' வேலை கிடைத்தது. இதைக் குறித்து அபார சந்தோஷமடைந்து முதன் முதலில் ஸ்ரீ தாமோதரம் பிள்ளைக்குப் பார்ட்டி கொடுத்தவர் ஸ்ரீ ஆத்மநாதய்யர்.

சந்தோஷம் ஒருபுறம் இருந்த போதிலும் ஆத்மநாதய்யரின் மனதில் "நம்முடன் இவ்வளவு சிநேகிதமாயிருந்த மனிதர் இந்த ஒரு விஷயத்தில் நமக்கு விட்டுக் கொடுக்க வில்லை பார்த்தாயா?" என்ற எண்ணம் இருந்தது. தாமோதரம் பிள்ளையின் மனதிலோ, "நம்முடன் இவ்வளவு சிநேகமாயிருந்த மனிதர் கடைசியில் நம்மோடு போட்டியிட முன் வந்தார் அல்லவா?"

கல்கி

என்ற எண்ணம் இருந்தது. இம் மாதிரி எண்ணத்தை இருவரும் தங்கள் மனதிற்குள் வைத்துக் கொண்டு மற்றப்படி முன் மாதிரியே சிநேகமாகப் பழகி வந்தார்கள்.

ஆனால் பழைய தலைமுறையைச் சேர்ந்த வயதான இந்த மனிதர்களைப் பற்றி நமக்கு இப்போது என்ன கவலை? இளந் தலைமுறையைச் சேர்ந்தவர்களைக் கவனிக்கலாம்.

தாமோதரம் பிள்ளை வீட்டின் மூன்றாவது மச்சில் ஒருநாள் முன்னிரவில் நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்து மூன்று வாலிபர்கள் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் தாமோதரம் பிள்ளையின் மூத்த மகனான அமரநாதன்; இன்னொருவன் ஆத்மநாதய்யரின் சிமந்த புத்திரனான பட்டாபிராமன். மூன்றாவது வாலிபன் நமது ராஜம் பேட்டை கிட்டா வய்யரின் திருக்குமாரன் சூரியநாராயணன்.

முதல் இருவரும் இந்த வருஷத்தில் பி. ஏ. பரீட்சை எழுதுவதற்குப் படித்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் வயது இருபது ஆனவர்கள்.

சூரிய நாராயணன், அவர்களுக்கு இரண்டு வயது சின்னவன். ஆனாலும் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குத் தான் படித்துக் கொண்டிருந்தான். ஏனெனில் கொஞ்சம் வயதான பிறகே அவனை ஹைஸ்கூல் படிப்புக்காகக் கிட்டா வய்யர் தேவ பட்டணத்துக்கு அனுப்பினார்.

ஆத்மநாதய்யர் கிட்டா வய்யரின் வக்கீல்; நெடுநாளைய சிநேகிதர். ஆகையால் பையனைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளும்படி அவரிடம் கிட்டா வய்யர் சொல்லி யிருந்தார். சூரிய நாராயணன் ஹோட்டலில் சாப்பிட்டான். படிப்பதற்கு வசதியாயிருக்கும் என்று ஆத்மநாதய்யர் வீட்டில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தான்.

"அமர்நாத்! நம்ம சூரியா நாளைக்கு ஊருக்குப் போகிறான். தெரியுமோ, இல்லையோ?" என்றான் பட்டாபி.

"அப்படியா? இப்போது ஊரில் என்ன விசேஷம்? பரீட்சை நெருங்கி விட்டதே!" என்றான் அமரநாத்.

"மதராஸிலிருந்து யாரோ பெண் பார்க்க வருகிறார்களாம்; அதற்காக என்னை வந்து விட்டுப் போகும்படி அப்பா கடிதம் எழுதி யிருக்கிறார்" என்றான் சூரியா.

"யாரோ பெண் பார்ப்பதற்கு வந்தால் உனக்கு என்னடா வந்தது? நீ பெண்ணா? அல்லது யாரோவா?" என்றான் அமரநாதன்.

"என்ன இப்படிக் கேட்கிறாய்? இவனுடைய தங்கைக்குக் கலியாணம் நிச்சயம் ஆகிறதா யிருந்தால் இவன் அங்கே இருக்க வேண்டாமா?" என்றான் பட்டாபிராமன்.

"யார்? சூரியாவின் தங்கை லலிதாவுக்கா கலியாணம்? அவளைப் பார்ப்பதற்கா மதராஸ்காரன் வருகிறான்? அழகா யிருக்கிறதே! ஏனப்பா பட்டாபிராமா! சூரியாவின் தங்கையை நீ கட்டிக்கொள்ளப் போகிறாய் என்றல்லவா எண்ணி யிருந்தேன்?..."

"ஓ! ஓ! என்ன இப்படி உளறுகிறாய்? அதுவும் சூரியாவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு?"

"உளறல் என்னடா உளறல்? உண்மையைச் சொன்னால் உளறலா? சூரியாவைத் தான் கேட்கிறேனே? எனக்கு என்ன பயம்? ஏண்டா, சூரியா? நம்ம பட்டாபிராமன் தினம் பொழுது விடிந்தால் லலிதாவைப் பற்றியே எண்ணி எண்ணி உருகிக் கொண்டிருக்கிறானே! — அப்படியிருக்கும்போது லலிதாவைப் பார்க்க மதராஸி லிருந்து ஒருவன் வருவானேன்?" என்றான் அமரநாத்.

"அதெல்லாம் எனக்கென்ன தெரியும், ஸார்! என்னைக் கேட்டுக் கொண்டா ஏற்பாடு செய்கிறார்கள்? ஒரு வேளை பட்டாபிக்கு ஜாதகப் பொருத்தம் சரியா யில்லையோ என்னமோ?" என்றான் சூரியா.

"ஜாதகம் பார்க்கிறது, ஜோதகம் பார்க்கிறது என்றெல்லாம் வைத்துக் கொண்டிருப்பதால் தான் நம்முடைய தேசம் பாழாய்ப் போகிறது. நடக்கிற கலியாணம் எல்லாம் ஜாதகம் பார்த்துத்தான் செய்கிறார்கள். ஆனாலும் கலியாணத்துக்குப் பிறகு நடப்பதென்ன? 100-க்கு 90 தம்பதிகளின் இல்வாழ்க்கை நரகமா யிருக்கிறது. எத்தனையோ பெண்கள் கலியாணமாகி ஒரு வருஷத்துக்குள்ளே விதவைகளாகித் தொலைக்கிறார்கள். விதவைக

ளாவதோடு நிற்கிறார்களா? எத்தனையோ காரியங்களுக்கு அபசகுனமாக எதிரே வந்து காரியங்களைக் குட்டிச் சுவராக்குகிறார்கள். இந்த மாதிரி விஷயங்களில் எல்லாம் ஈரோடு பெரியார் சொல்லுவதுதான் சரி. இந்த தேசத்திலேயுள்ள ஜாதகங்களையெல்லாம் திரட்டித் தீயிலே போட்டுப் பொசுக்கினால் எவ்வளவோ நன்மை உண்டு!'' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான் அமரநாத்.

''எல்லாம் வாய்ப் பேச்சுதான். உன் தகப்பனார் கூடப் பெரிய சூனா,மூனா மாதிரிதான் பேசுகிறார். ஆனால் போன வருஷம் உன் சகோதரியின் கலியாணம் நடந்ததே, பிராமணப் புரோகிதரைக் கூப்பிட்டுத்தானே நடத்தினார்? அப்புறம் 'ஜோஸ்யத்தில் எனக்கு நம்பிக்கையே யில்லை; சுத்த பிராடு!' என்று சொல்லிக் கொண்டிருந்தவர் பப்ளிக் பிராசிகியூடர் வேலை கிடைக்குமா கிடைக்காதா என்ற சந்தேகம் ஏற்பட்டதும் சப்தரிஷி வாக்கியம் என்னும் ஏட்டுச்சுவடி வலையில் விழுந்து விட்டாரா இல்லையா?''

''பட்டாபி! இது என்ன வாதத்தில் சேர்ந்தது? என் அப்பா செய்யும் காரியங்களுக்கெல்லாம் நான் ஜவாப்தாரியா?'' என்றான் அமரநாத்.

''ரொம்ப சரி! அது போலவே சூரியா தங்கை கலியாணத்துக்கும் ஜாதகத் தடைக்கும் சம்பந்தம் இல்லை. என்னுடைய ஜாதகத்தைக் கேட்கவும் இல்லை; பார்க்கவும் இல்லை; கலியாண விஷயத்தில் என்னுடைய திடமான கொள்கை உனக்குத் தெரியாதா? பி. ஏ. பாஸ் செய்து விட்டுக் குறைந்த பட்சம் மாதம் இருநூறு ரூபாய் சொந்தத்தில் சம்பாதிக்கும் நிலைமை ஏற்பட்ட பிறகுதான் நான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேனே?''

''அடே, இந்தக் கதையெல்லாம் யாரிடம் அளக்கிறாய்? சென்ற வருஷத்தில் கிட்டா வய்யரும் அவருடைய குமாரியும் உன் வீட்டுக்கு வந்து ஒரு வாரம் தங்கியிருந்த போது நீ என்ன பாடு பட்டாய் என்று எனக்குத் தெரியாதா? வீட்டின் உள்ளேயிருந்து வெளியிலும் வெளியிலிருந்து உள்ளேயும் குட்டி போட்ட பூனை போல் நிமிஷத்துக்கு ஒரு தடவை போய் வந்து கொண்டிருந்தாயே? அதையெல்லாம் நான் மறந்து விட்டேன் என்று நினைத்தாய்?''

''அமரநாத்! உன்னிடம் நான் இந்தப் பேச்சை எடுத்ததே தப்பு. சொன்னதையெல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.''

''அதெல்லாம் முடியாது, அப்பா, முடியாது! கோர்ட்டில் கேஸ் தாக்கல் செய்து விட்டால் அப்புறம் வாதியின் இஷ்டம் போல் வழக்கை வாபஸ் பெற முடியுமா? பிரதிவாதியும் கோர்ட்டாரும் சம்மதித்தால்தானே முடியும்? நான் கேஸை வாபஸ் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. பட்டாபி! லலிதாவைப் பற்றி நீ அந்த நாளில் வர்ணனை செய்ததெல்லாம் எனக்கு நினைவில்லை என்று நினைக்கிறாய்? கம்பனும் காளிதாஸனும் வெட்கிப் போகும்படி வர்ணனை செய்தாயே? ஒரு கவி கூடப் பாடியது எனக்கு நினைவிருக்கிறதே! 'ஒரு நாள் குமுத மலர்கள் நிறைந்திருந்த குளக்கரை ஓரமாக லலிதா சென்றாள். கூம்பியிருந்த குமுத மலர்கள் எல்லாம் கலீரென்று சிரிப்பது போல் மடலவிழ்ந்து மலர்ந்தன. லலிதாவின் சௌந்தர்ய வதனத்தை அந்தக் குமுதங்கள் பூரண சந்திரன் என்று நினைத்துக்கொண்டு விட்டதுதான் காரணம்!' என்று நீ ஒரு கவி பாடவில்லையா? நிஜமாகச் சொல்லு!''

''அப்பா! அமரநாத்! போதும், இத்துடன் நிறுத்து. வீணாக என் மானத்தை வாங்காதே. உன் பரிகாசப் பேச்சைப் பற்றிச் சூரியா ஏதாவது தப்பாக நினைத்துக் கொள்ளப் போகிறான்!'' என்று பட்டாபிராமன் பெரிதும் சங்கடப் பட்டுக்கொண்டே சொன்னான்.

''தப்பாக நினைத்துக் கொண்டால் நினைத்துக் கொள்ளட்டும்! நினைத்துக் கொண்டு என் தலையையா வாங்கி விடப் போகிறான்? அப்படி வாங்குவதாயிருந்தாலும் நான் உண்மையைத்தான் சொல்வேன். சூரியா! இருந்தாலும் உன் அப்பா செய்கிற காரியம் கொஞ்சமும் நன்றாயில்லை. நம்ம பட்டாபிராமன் இருக்கும்போது உன் அப்பா எதற்காக வேறு வரன் தேட



வேண்டும்? இவனுக்கு என்ன குறைவு? நானாயிருந்தால் என்ன செய்வேன், தெரியுமா? உன் தகப்பனாரிடமும் மதராஸிலிருந்து பெண் பார்க்க வருகிறவனிடமும் 'ட்யூயல்' (துவந்த யுத்தம்) நடத்தி இரண்டில் ஒன்று பைசல் செய்து விடுவேன்."

இத்தனை நேரமும் முகச் சிணுக்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்த சூரியா, இப்போது, "நானும் உண்மையைச் சொல்லி விடட்டுமா? எனக்கும் அப்பாவின் ஏற்பாடு பிடிக்கவில்லை. லலிதாவைப் பட்டாபிராமனுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். லலிதாவுக்கும் அது தான் சந்தோஷமாயிருக்கும். யாரோ முன்பின் தெரியாத ஆசாமியின் கழுத்திலே லலிதாவைக் கட்டுவதற்கு ஏன் முயற்சி செய்கிறார்களோ தெரியவில்லை. உண்மையிலேயே எனக்கு அது பிடிக்கவில்லை" என்றான்.

"நான் ஒருவன் இருக்கிறேன், என் விருப்பத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற யோசனையே யில்லாமல் இரண்டு பேரும் பேசுகிறீர்களே. லலிதா விஷயமாக எனக்கு அத்தகைய எண்ணம் கிடையவே கிடையாது. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் சொல்வேன். யாரோ ஒரு முன்பின் தெரியாத மனிதன் வருவது,—பெண்ணை அவன் முன்னால் கொண்டு நிறுத்துவது,—அவன் சாமுத்திரிகா லட்சணம் எல்லாம் சரியாயிருக்கிறதா என்று பார்ப்பது,—அப்புறம் பெண் பிடிக்கவில்லை என்று சொல்வது,—இதெல்லாம் மிகப் பிசகான காரியங்கள். இதே மாதிரி 'வேண்டும் அல்லது வேண்டாம்' என்று சொல்கிற



உரிமை பெண்ணுக்கும் இருந்தாலும் பாதகமில்லை! ஆனால் பெண்ணுக்கோ முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் தைரியம் கிடையாது......"

"அதென்னப்பா, அப்படிச் சொல்கிறாய்? பெண் பார்க்க வந்தவனைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று பெண்கள் சொல்லித் தானிருக்கிறார்கள். அதனால் பல கலியாணங்கள் நின்று போயிருக்கின்றன."

"அப்படி யெல்லாம் கதைகளிலே நடந்திருக்கும். உண்மை வாழ்க்கையிலே நடப்பதில்லை."

"இதுவரை நடந்திருக்கிறதோ, இல்லையோ, இப்போது அப்படிச் செய்தாலென்ன என்றுதான் கேட்கிறேன். சூரியா! நான் சொல்கிறதைக் கேள்! நீ உன் தங்கையிடம் சொல்லி, வந்து பார்க்கிறவனை 'எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொல்லப் பண்ணிவிடு!" என்றான் அமரநாத்.

"அப்படியெல்லாம் செய்யாதே, சூரியா! லலிதா விஷயத்தில் என்னுடைய மனதைத் தவறாக அறிந்து கொண்டு அமரநாதன் சொல்கிறான். ஒரு மரத்திலே ஒரு அழகான புஷ்பம் மலர்கிறது. 'அது அழகாயிருக்கிறது; கண்ணுக்கினிய காட்சியாயிருக்கிறது!' என்று ஒருவன் சொன்னால் அதை உடனே அவனுக்கே சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமா? சிலர் அப்படிப்பட்ட ஆசை கொண்டவர்களாயிருக்கலாம். ஆனால் என்னுடைய கருத்து அது வல்ல. மரத்திலே பூத்திருக்கும் புஷ்பத்தைப் பார்த்தே நான் சந்தோஷப்படத் தயார். யாராவது அந்த மலரைப் பறித்துத் தலையில் வைத்துக்

கொண்டாலும் என்னால் பார்த்துச் சந்தோஷப்பட முடியும்!"

"நீ சொல்வது சுத்த ஹம்பக்! அப்படி அழகான மலரை மரத்திலேயே விட்டு வைக்கத் தயாராயுள்ள மானிடர் வெகு அபூர்வம். அதுமட்டுமல்ல; மலரைப் பறித்துத் தலையில் சூடிக்கொள்வதாயிருந்தால், அதற்குத் தகுதியானவர்களின் தலையில் சூட்டப் பட்டால்தானே அழகாயும் பொருத்தமாயும் இருக்கும்? அதுதான் சந்தோஷமளிக்கும் காட்சி. அவலட்சணம் பிடித்த கழுதைக்கு அழகிய பூவைச் சூட்டினால் அதை எப்படிப் பார்த்து அநுபவிக்க முடியும்? கழுதையினாலேயே முடியாதே! பூவைக் காகிதம் என்று நினைத்துக் கொண்டு தின்றுவிடப் பார்க்குமே? மற்றவர்கள் அந்தக் காட்சியைப் பார்த்து எப்படிச் சந்தோஷப்பட முடியும்?" என்றான் அமரநாத்.

"உம்மோடு என்னால் விவகாரம் செய்ய முடியாது, ஸார்! ஆனாலும் நான் சொல்லுகிறதுதான் சரி!" என்றான் பட்டாபிராமன்.

"சூரியா! நீ என்ன சொல்கிறாய்?" என்று அமரநாதன் கேட்டான்.

"நீங்கள் சொல்வதை நான் ஆமோதிக்கிறேன்!" என்றான் சூரியா.

"பார்த்தாயா, பட்டாபி! மெஜாரிட்டி அபிப்பிராயம் உனக்கு விரோதமாயிருக்கிறது! என்ன செய்வது?" என்றான் அமரநாத்.

"உலகத்தில் மெஜாரிட்டியார் முட்டாள்கள் என்று சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறாரே, தெரியாதா?" என்றான் பட்டாபி.

"அப்பனே! 'பெரும்பான்மையோர் முட்டாள்கள்' என்று சுவாமி விவேகானந்தர் சொல்லலாம்; ஆனால் நீயும் நானும் சொல்லக் கூடாது! வருங் காலத்தில் மெஜாரிட்டிதான் மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம்! பெரும்பான்மையோரை அலட்சியம் செய்கிறவன் உலகில் முன்னுக்கு வரவே முடியாது. பெரும்பான்மை மக்களின் இஷ்டப்படி நடக்க முடியாவிட்டால் அவர்களை ஏமாற்றியாவது பிழைக்க வேண்டும்!" என்றான் அமரநாத்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

மோட்டார் விபத்து

மாசி மாதத்து மனோரம்மியமான மாலை நேரத்தில் ராஜம்பேட்டையை நெருங்கிச் சென்ற சாலையில் இரட்டை மாடு பூட்டிய பெட்டி வண்டி ஒன்று ஜாம் ஜாம் என்று போய்க் கொண்டிருந்தது. காளையின் கழுத்தில் கட்டியிருந்த பெரிய சதங்கை மணிகள் கலீர் கலீர் என்று சப்தித்தன. வண்டியும் வண்டிமாடுகளும் வண்டிக்காரன் தலையில் கட்டிய முண்டாசும் அந்த வண்டி பட்டாமணியம் கிட்டாவய்யரின் வண்டியென்பதை உலகமறியத் தெரிவித்தன. வண்டிக்குள்ளே கிட்டாவய்யரின் மூத்த புதல்வன் சூரிய நாராயணன் பெட்டி படுக்கை சஹிதமாக வீற்றிருந்தான். அவனுடைய உள்ளம், தன்னுடைய அருமைத் தங்கை லலிதாவைப் பற்றியும் அவளைப் பார்ப்பதற்காகப் பட்டணத்திலிருந்து வரப் போகிற மேதாவி எப்படியிருப்பான் என்பது பற்றியும் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. காரணமில்லாமலே அந்த மேதாவியின் பேரில் சூரியாவுக்குச் சிறிது கோபமும் உண்டாகியிருந்தது. "மகா பெரிய மனிதன் இவன்! பெண்ணைப் பார்க்க வருவதாம்! பிடித்திருக்கிறது—இல்லை என்று தீர்ப்புச் சொல்வதாம்! சுத்த வெட்கக் கேடு!" என்ற எண்ணம் அடிக்கடி தோன்றி அவன் மனதை உறுத்தியது. மூந்தா நாள் இரவு தாமோதரம் பிள்ளை வீட்டு மச்சின் பேரில் நடந்த சம்பாஷணையும் இடை இடையே அவனுக்கு நினைவு வந்து கொண்டிருந்தது.

ராஜம்பேட்டை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் பொருட்டுச் சூரியா வண்டி முகப்பில் வைத்திருந்த பெட்டி படுக்கையின் மேலாக எட்டிப் பார்த்தான். சமீபத்தில் ஒரு மைல் கல் தென்பட்டது. அதில்

பெரிய கறுப்பு எழுத்தில் 3 என்று எழுதியிருந்தது. "இன்னும் மூன்று கல் இருக்கிறது. இருட்டுவதற்கு முன் போய்விடலாமா, முருகா!" என்று சூரியா கேட்டான். "கல்லாப் போய் விடலாம்! நீங்கமட்டும் 'மாட்டை விரட்டாதே' என்று சும்மாச் சும்மாச் சொல்லியிரா விட்டால் இத்தனை நேரம் போய்ச் சேர்ந்திருப்போம்! அம்மாகூட, 'சாயங்காலம் காப்பி சாப்பிடச் சின்னய்யாவை வீட்டுக்கு அழைத்து வந்துவிடு' என்று சொல்லியிருந்தாங்க!" என்றான் வண்டிக்கார முருகன். இப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போது, முன்னால் சுமார் அரை பர்லாங்கு தூரத்தில் ஒரு கட்டை வண்டி போய்க் கொண்டிருப்பதைச் சூரியா கவனித்தான். அந்த வண்டிக்குள்ளே யாரோ பெண் பிள்ளைகள் சிலர் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. அந்த வண்டியும் ராஜம் பேட்டைக்குத் தானே போகவேண்டும்? வண்டிக்குள் இருப்பவர்கள் யாரா யிருக்கும்?— என்று சூரியா சிந்தித்துக் கொண்டிருந்த போதே பின்னால் 'பாம்' 'பாம்' என்று முழங்கிக் கொண்டு ஒரு மோட்டார் வண்டி வந்தது.

"பாருங்க, சின்னய்யா! மோட்டார் வண்டியிலே ஏறிவிட்டாலே தலை கிறுங்கிப் போவுது! இவன் வந்துட்டா, மற்ற வண்டியெல்லாம் உடனே ஒதுங்கிக் கொள்ள வேணுமாம்! மோட்டார் வண்டிக்கு என்று தனியாக ரோடு போட்டுக் கொள்ளுகிறது தானே!" என்று புகார் சொல்லிக் கொண்டே முருகன் வண்டியைக் கொஞ்சம் சாலை ஓரத்தில் ஒதுக்கினான். மோட்டார் வண்டி அவர்களைத் தாண்டி ஒரு பெரிய புழுதிப் படலத்தை வாரித் தூவிவிட்டு மேலே சென்றது.

அது போன உடனே முருகன் "சின்னய்யா கூடப் படிச்சுப் பெரிய உத்தியோகத்துக்கு வந்து மோட்டார் கார் வாங்க வேணும்!" என்றான்.

"அப்போது மோட்டார்க் காரர்களைப் பற்றி நீ இப்போது திட்டியது போலத்தானே பத்துப் பேர் என்னையும் திட்டுவார்கள்?" என்றான் சூரியா. இதற்குள் எதிரே கொஞ்ச தூரத்தில் நடந்த சம்பவம் அவர்களுடைய பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

பெட்டி வண்டியைத் தாண்டிச் சென்ற மோட்டார் கட்டை வண்டியையும் சாலை ஓரமாக ஒதுங்கச் செய்வதற்காகப் 'பாம்' 'பாம்' என்று முழக்கியது. கட்டை வண்டிக்காரன் இடது புறத்தில் ஒதுக்குவதற்குப் பதிலாக வலது புறத்தில் ஒதுக்க முயன்றான். கட்டை வண்டியை வலப் பக்கமாகக் கடக்க முயன்ற மோட்டார் அது முடியாதென்று தெரிந்து அதி வேகமாக ஒரு திரும்புத் திரும்பி இடப் பக்கம் தாண்டிச் சென்றது. போகும் போது வண்டி மாட்டின்மீது உராய்ந்து விடும்போல அவ்வளவு நெருக்கமாகச் சென்றபடியால் வண்டி மாடுகள் இரண்டு சாலையோரத்துப் பள்ளத்தில் இறங்கி விட்டன. அப்படி இறங்கியதில் மாடுகளை மூக்கணையுடன் பிணைத்திருந்த கயிறுகள் கழன்றன. வண்டிக்காரன் காபரா அடைந்து கீழே குதித்தான். வண்டியின் மூக்கணை மேலே போயிற்று. வண்டியின் பின்தட்டுக் கீழே வந்து தரையைத் தொட்டது. வண்டிக்குள்ளிருந்தவர்கள் சறுக்கு மரத்திலிருந்து வழுக்கி விழுகிறவர்களைப் போல உருண்டு வந்து வெளியே தரையில் விழுந்தார்கள். அவர்கள் மேலே சாமான்கள் உருண்டு வந்து விழுந்தன.

இத்தகைய கட்டை வண்டி விபத்தை உண்டாக்கிய மோட்டார் வண்டி அதை மறைப்பதற்கு ஒரு பெரிய புழுதித் திரையையும் உண்டாக்கிவிட்டு மறுகணமே தூரத்தில் மறைந்து போய் விட்டது.

புழுதி மறைத்தபடியால் மேற்படி விபத்தைப்பற்றி நடந்ததைக் காட்டிலும் அதிகமாகச் சூரியா மிகைப் படுத்தி எண்ணிக் கொண்டான்.

"முருகா! ஓட்டு! ஓட்டு! வண்டி குடையடித்து விட்டது போலிருக்கிறதே! சீக்கிரம் ஓட்டு!" என்று பதறிக் கொண்டே கூறினான்.

முருகனும் வண்டியை வேகமாக ஓட்டிக் கொண்டு போய்ச் சம்பவம் நடந்த இடத்துக்குச் சமீபத்தில் கொண்டுவந்து நிறுத்தினான்.

"சின்னய்யா! நம்ம அத்தை அம்மா போலே இருக்கிறதே! பம்பாய் அம்மாவும் அவங்க பெண்ணுங்கூட இருக்காங்களே! சாமி! ஆண்டவனே! ஒருத்தருக்கும் ஒண்ணும் இல்லாமல் இருக்க வேண்டும்!" என்று வண்டிக்காரன் சொன்னது ஒன்றும் சூரியாவின் காதில் விழவில்லை. வண்டியிலிருந்து அவன் பளிச்சென்று கீழே குதித்துக் குடையடித்த வண்டியை நெருங்கி ஓட்டமாக ஓடினான்.

• • •

குடை சாய்ந்த வண்டியின் பின்புறச் சட்டங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பம்பாய் ராஜம்மாள் உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் மூட்டைகள் சிதறிக் கிடந்தன. ஒரு தகரப் பெட்டி இன்னும் வண்டிக்குள்ளேயே இருந்துகொண்டு தானும் கீழே விழலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தது. ராஜம்மாளுக்கு வண்டிச் சட்டத்தைத் தான் விட்டால் அந்தப் பெட்டி தன் தலையில் விழுந்துவிடும் என்ற பயம் தோன்றியிருந்தது. ஏற்கெனவே நோயினால் மெலிந்திருந்த அவளுடைய முகம் மேற்படி பயத்தினால் வெருண்ட தோற்றம் அளித்தது. ஆனால் அவளுடைய பயத்துக்குக் காரணம் இது மட்டுந்தானா? "அம்மா! அம்மா! இதோ நான் வெள்ளத்தில் முழுகிப் போகிறேன். என்மேல் அலை வந்து மோதுகிறது. யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்! இதோ முழுகப் போகிறேன்!" என்று அவளுடைய செல்வக் குமாரி சீதா அலறிக் கொண்டிருந்ததும் ராஜம்மாளின் பீதிக்கு ஒரு காரணமாயிருக்கலாமல்லவா?

ராஜத்துக்கு நாலைந்து அடி தூரத்தில் தரையில் விழுந்திருந்த இன்னொரு ஸ்திரீ, "ஐயோ! அப்பா!......" என்று முனகிக்கொண்டே மெதுவாக முயன்று எழுந்து உட்கார்ந்தாள். "மோட்டார் சத்தம் கேட்டவுடனேயே 'வண்டியை ஒதுக்கி ஓட்டடா' என்று அடித்துக் கொண்டேன். கேட்டால்தானே?" என்று வண்டிக்காரனுக்கு வாய் நிறைந்த ஆசிர்வாதங்களைச் செய்தாள். பிறகு, "ராஜம்! உனக்குக் காயம் கீயம் ஒன்றும் படவில்லையே!" என்று கவலை நிறைந்த குரலில் கேட்டாள்.

ஏதோ பயங்கரமான பெரும் விபத்து ஏற்பட்டு விட்டதாக எண்ணி அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி வந்த சூரியா மேற்கூறிய காட்சியை ஒரே கண்ணோட்டத்தில் பார்த்து ஒரு நொடிப் பொழுதில் நிலைமையைத் தெரிந்து கொண்டான். வண்டிக்குச் சற்றுத் தூரத்தில் எழுந்து நிற்க முயன்று கொண்டிருந்த ஸ்திரீ தன்னுடைய மூத்த அத்தை அபயாம்பாள் என்பதையும் வண்டிக் கருகில் உட்கார்ந்திருந்தவள் பம்பாய் அத்தையாகத்தான் இருக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டான். ஆனால் இதிலெல்லாம் அவனுடைய கவனம் ஒரு நிமிஷத்துக்கு மேல் நிற்கவில்லை.

சாலையின் ஓரத்தில் இருந்த நீர் ஓடையில் விழுந்து காலையும் கையையும் அடித்துக் கொண்டு, "அம்மா! நான் முழுகிப் போகிறேன்!" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்த இளம் பெண்ணின் மீது அவனுடைய கண்களும் கவனமும் சென்றன. இரண்டே எட்டில் ஓடைக் கரைக்கு ஓடிச் சென்றான். நீரில் மூழ்கிக் கொண்டிருந்த பெண்ணைக் கரையேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடேதான்.

ஓடையில் விழுந்து மேற்கண்டவாறு கூச்சலிட்டுக் கொண்டே காலினாலும் கையினாலும் தண்ணீரை அடித்து அலைகளை உண்டாக்கிக் கொண்டிருந்த இளம் பெண் ஓடைக் கரையில் வந்து வியர்க்க விறுவிறுக்க நின்ற வாலிபனைப் பார்த்தாள். உடனே கூச்சலிடுவதையும் தண்ணீரைக் காலாலும் கையாலும் அடிப்பதையும் நிறுத்தினாள். ஏதோ ஒரு அபூர்வமான அதிசயக் காட்சியைப் பார்ப்பதுபோல் சூரியாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள். அப்படிப் பார்த்த வண்ணம் கலகல வென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பின் ஒலி சூரியாவின் செவியில் விழுந்தபோது அமுதமுண்ட குயிலின் கீதம் ஆயிரம் பதினாயிரம் வர்ண மலர்களாக மாறி மேலே விழுவது போன்ற உணர்ச்சி சூரியாவுக்கு உண்டாயிற்று!

தீவிரமான குளிர் ஜுரம்

ஸ்வாசப் பைக்கு நேரும் அபாயத்தை அறிவிக்கிறது



குளிர் ஜுரத்தினால் ஸ்வாசக் குழாய் வேக்காடு, ஸ்வாசாசய வேக்காடு, நிமோனியா போன்ற கொடிய நோய்கள்கூட ஏற்படலாம். ஆகையால் கவனத்துடன் கிருமி நாசன ஸ்வாசகரண மாத்திரையான 'பெப்ஸ்' சாப்பிடுங்கள். பெப்ஸ் மாத்திரை வாயினுள் கரையும்போது உன்னத மருந்து சத்துக்கள் வெளியாகி ஸ்வாசத்தினால் ஸ்வாசாசயத்திற்குக் கொண்டு போகப்படுவதால் ஸ்வாச மார்க்கத்திற்கு ஹிதமளிக்கிறது. ஸ்வாசக் குழாயின் மெல்லிய தோல்களிலுள்ள வேக்காடுகளை ஆற்றி, இருமலை நிறுத்தி, கிருமிகளை நாசமாக்குகிறது. இருமல், ஜலதோஷம், குளிர் ஜுரம், தொண்டைப் புண், முறை ஜுரம், மற்றும் மார்பு, ஸ்வாசாசய சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பெப்ஸ் ஒரு சிறந்த மருந்து.



PEPS பெப்ஸ்

கிருமி நாசன ஸ்வாச மாத்திரைகளைசாப்பிடுங்கள்


எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்

ஏஜண்டுகள் :—மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

No. 4

ரூலண்டு அண்டு யு.எஸ் அமெரிக்கன் மோட்டார்கள்



உயர்தர
ஸ்டார் டெல்டா
ஸ்டார்டர்களுடன்
2 முதல் 20 H. P.
A. C. 440 V.
மோட்டார்கள்
விற்பனைக்கு உடனே
தயாராக இருக்கின்றன.


•

ஈசன் இஞ்சினீரிங் கம்பெனி லிட்.

164, பிராட்வே, த. பெ. நெ. 95, மதராஸ்-1

வாழப் பிறந்தவள்

வலவு



வழக்கம் போலவே அன்றும் இடைவேளை ஆகாரத்துக்காக அலுமினியம் டிபன் டப்பி சகிதம் மரத்தடிக்கு வந்து சேர்ந்தாள் அஞ்சனா. புழுக்கம் நிறைந்த அறையை விட்டு அப்பொழுதுதான் வெளியே வந்த அவள் நெற்றியில் வியர்வை முத்து முத்தாக அரும்பியிருந்தது. மற்ற மூன்று உபாத்தியாயினிகளும் ஏற்கெனவே அங்கு கூடியிருந்தனர். அஞ்சனாவின் சிநேகிதையான நம்பிக்கை மேரி மட்டும் சாப்பிடாமல் அவள் வருகைக்காகக் காத்திருந்தாள்.

எல்லாக் கதாநாயகிகளையும் போல அஞ்சனா காண்போர் உள்ளத்தைக் கண்ட மாத்திரத்தில் கொள்ளை கொண்டுவிடும் கட்டழகி யல்ல. அவள் அத்தகைய கட்டழகியா யிருந்திருந்தால் அந்த ஏழைப் பள்ளிக்கூடத்தில் ஓர் ஏழை வாத்தியாரம்மாவாகக் காலங் கழித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காதல்லவா?


மாலைக் கதிரவனைப் போல அஸ்தமனத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது அவள் யௌவனம். அந்தப் பள்ளிக்கூடத்தில் அவள் வாத்தியாரம்மாவாக அமர்ந்து ஒன்றல்ல, இரண்டல்ல, ஒன்பது வருடங்களாகிவிட்டன. ஒரு நாளைப்போல ஒரு நாள், ஒரு மாதத்தைப் போல ஒரு மாதம், ஒரு வருஷத்தைப் போலவே இன்னொரு வருஷம் — இப்படியாக அவள் வாழ்நாள் ஓடிக்கொண்டிருந்தது — இல்லை, ஊர்ந்து கொண்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

'மனிதன் வாழவேண்டும் என்பதற்காகத்தான் கடவுள் அவனைப் படைத்திருக்கிறார். அந்த வாழ்விலே அவன் வெற்றி — வீழ்ச்சி, இன்ப — துன்பம் இவைகளை மாறி மாறி அனுபவிக்க வேண்டுமென்பதுதான் நியதி. இவைகள் எதுவுமே தனக்குத் தேவையில்லை என்று சொல்பவன் மனிதனாகமாட்டான் — அவனும் சரி, கல்லும் சரி!' என்கிறார்கள் சில மேதாவிகள். ஆயினும் அவர்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, சிலருடைய வாழ்க்கைப் பிரயாணம் பொட்டல் காட்டின் நடுவிலே பட்டிக் காட்டுப் பாதையிலே செல்லும் கட்டை வண்டிப் பிரயாணம் போல் ரஸமற்றதாயிருக்கிறதே, அதற்கு யார் பொறுப்பாளி?

யார் பொறுப்பாளியாயிருந்தால் என்ன? அஞ்சனா அதைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதேயில்லை. அவள் தன் ஜாதியைச் சேர்ந்த ஒரு விதவையின் வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு வைத்துக் கொண்டு அவர்கள் வீட்டிலேயே சாப்பிட்டும் வந்தாள். அந்த ஏழைக் குடும்பத்துக்கு அது ஒரு உபகாரமாகவும் இருந்தது. இருந்தாலும், ஆறுதல் பெற வேண்டிய சமயங்களில் அஞ்சனா, விதவையிடம் தன் மனதைத் திறந்து காட்டிக் கொள்வதில்லை. அதற்கு அவள் நம்பிக்கையின் தாயாரைத்தான் நாடிச் செல்வாள். நினைவு தெரிந்ததி லிருந்து பெற்றோரின் அன்பு என்றால் என்னவென்பதையே அறியாத அஞ்சனாவுக்கு அந்த அம்மாள் ஆறுதல் கூறுவாள். அவளையும் அவள் மகளான நம்பிக்கை மேரியையும் தவிர, அஞ்சனாவுக்கு வேறு ஆதரவே கிடையாது.

அவர்கள் இருவரும் அன்று வழக்கம் போல் மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தபோது, ஒரு குழந்தை ஓடோடியும் வந்து, "டீச்சர்! அந்தப் புதுப் பிள்ளையைப் பாருங்க, சாப்பிடாமே அப்போ புடிச்ச அழுதுக்கிட்டிருக்குது!" என்று முறையிட்டது.

செய்தி விநோதம்



பையன் (தினப் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்து விட்டு) :—"அப்பா, அப்பா! இரண்டாம் பக்கத்தில் பிடிக்கப்பட்ட திருடன் ஆறாம் பக்கத்தில் தப்பி ஓடி விட்டான், அப்பா!"

அந்தப் 'புதுப் பிள்ளை'யின் மீது பார்வையைச் செலுத்தினான் அஞ்சனு. அடுத்த கணம் விடுவிடென்று அதனருகே சென்றான். அந்தப் 'புதுப் பிள்ளை' ஒரு ஐந்து ஆறு வயது மதிக்கத் தகுந்த சிறுமி. அதன் பால் வடியும் முகத்திலே கண்ணீர் வழிந்து வந்துக் கொண்டிருந்தது. ஒரு சிலேட்டையும், புத்தகத்தையும், காகிதப் பொட்டணத்தையும் அது தன் கைகளால் மார்போடு அணைத்துக் கொண்டிருந்தது. பொட்டணத்தின் ஒரு பக்கம் கண்ணீரில் நனைந்து ஊறிப் போயிருந்தது. அஞ்சனு அந்தக் குழந்தையை நோக்கி, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"வ...த்...ச...லா!" என்று அது மிகச் சிரமப்பட்டு உச்சரித்தது.

"ஏன் நம்பிக்கை! இந்தக் குழந்தையை எந்த வகுப்பிலே சேர்த்திருக்கிறார்கள் என்று உனக்குத் தெரியுமோ?" என்று கேட்டான் அஞ்சனு.

"அதைப் பரீட்சை பண்ணிப் பார்த்து எந்த வகுப்பிலே எடுத்துக்கிறதுன்னு இன்னும் தீர்மானிக்கவில்லை. தற்சமயம் சத்தியா ஆண்டாளுவின் கிளாசிலே உட்கார வச்சிருக்காங்க!" என்றான் நம்பிக்கை.

"அட, பாவமே!" என்றான் அஞ்சனு.

'ஆண்டாளு' என்றால் குழந்தைகளுக்குச் 'சிம்ம சொப்பன'ந்தான்!—உருவத்திலுஞ் சரி, குணத்திலுஞ் சரி. அவளுடைய கோரைப் பற்களையும் உருட்டி விழிக்கும் கண்களையும் காணும்போதே குழந்தைகள் கதி கலங்கிப் போவார்கள். ஆகவே, மணி யடித்ததும் வத்ஸலாவைத் தன் வகுப்புக்கு அழைத்துச் சென்று தனக்கு அருகிலேயே உட்கார வைத்துக் கொண்டான் அஞ்சனு. குழந்தை அவனிடத்தில் ஒட்டிக் கொண்டு விட்டது. ஆம்; இதுவும் ஒருவிதக் 'காதல்'தான்!—உலகத்திலேயே ஒப்புயர்வற்ற காதல்! மனிதனுக்கு மனிதத் தன்மை பயக்கும் இந்த அன்பு விஷயத்தில் மட்டும் கடவுள் அவனை வஞ்சித்து விடவில்லை.

★

அன்று மாலை வகுப்பு முடிந்ததும் அஞ்சனு குழந்தையை நோக்கி, "நீ எப்படி வீட்டுக்குப் போவாய்?" என்றான்.

"பாட்டி வந்து அழைச்சிண்டு போவா!" என்றது குழந்தை.

பாட்டியின் வருகையை எதிர்பார்த்து இருவரும் காத்திருந்தனர். அவளும் வந்தாள்.

"டீச்சரம்மா, நீயும் எங்காத்துக்கு வாயேன்!" என்றாள் வத்ஸலா.

"இன்னொரு நாளைக்கு வருகிறேன்" என்றான் அஞ்சனு.

"ஊஹூம்; இப்பத்தான் வரணும்! அப்பா சொன்னு, 'வச்சலா! நீ சமத்தா பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டு வந்தா சாயந்திரம் நிறைய பிஸ்கோத்து, பப்பரமிட்டு எல்லாம் வாங்கிண்டு வருவேன்' அப்படின்னு! உனக்குத் தருவேனுக்கும்!" என்று ஆசை காட்டினாள் வத்ஸலா!

அஞ்சனு கிழவியைக் கேட்டான், "உங்கள் வீடு எந்தத் தெரு?" என்று.

"வல்லப விநாயகர் தெருவிலே!" என்றாள் கிழவி.

"சரி, வா! நானும் அந்தப் பக்கமாகத் தான் போகவேணும்" என்று அவளுடன் அஞ்சனுவும் புறப்பட்டான்.

கிழவி, வத்ஸலாவின் தாயாருக்கு ஏதோ தூர பந்துவாம். வத்ஸலாவின் தாய் நான்கு வருடங்களுக்கு முன் பிரசவப் படுக்கையில் மரணமடைந்து விட்டாளாம். "வேறு போக்கிடமில்லாத நான் இவர்களுக்குச் சமைத்துப் போட்டுக்கொண்டு வீட்டோடு இருக்கிறேன். அந்தப் பிராமணர் ரொம்ப சாது. தன் புத்தகமுண்டு,

சீரன் உண்டு என்று தன் அறையிலேயே கிடப்பார். வத்ஸலாதான் அவருக்கு இந்த உலகத்திலே சர்வமும். இந்தப் பெண் அவரைப் படுத்திவைக்கும் பாட்டை என்னவென்று சொல்வேன்? ரொம்ப துஷ்டை, போ!" என்று வத்ஸலாவின் கன்னத்தில் அன்புடன் இடித்துக் காட்டினாள் மிழலி.

வத்ஸலாவின் தந்தை பவானி சங்கர், எம். இ. எஸ். வில் ஓர் ஆசிரியர். அவரை ராஜமஹேந்திரபுரத்திலிருந்து அப்பொழுது தான் சென்னைக் கல்லூரி யொன்றுக்கு மாற்றியிருந்தார்கள். வேறு நல்ல பள்ளிக்கூடத்தில் இடம் கிடைத்துச் சேர்க்கிற வரை பக்கத்திலிருக்கும் இந்தப் பள்ளிக்கூடத்துக்குச் சென்று சாது குழந்தைகளுடன் பழகட்டும் என்றுதான் வத்ஸலாவை அன்று அங்கு கொண்டு வந்து சேர்த்திருந்தார்கள்.

வல்லப விநாயகர் தெருக் கோடியிலேயே அவர்களை விட்டுப் பிரியவேண்டிய அஞ்சனா, வத்ஸலாவின் ஹிம்ஸைக்காக அவர்கள் வீட்டுக்குப் போகவேண்டியதாயிற்று.

வீட்டு வாசலில் குழந்தையை எதிர் பார்த்து நின்றிருந்தார் புரொபஸர்.

"அப்பா......!"

"பாப்பா!"

அடுத்த நிமிஷம் குரங்குக் குட்டியைப் போல அப்பாவின் மேல் தொத்திக்கொண்டு விட்டாள் குழந்தை வத்ஸலா.

"அப்பா! இதோ பார், வாத்தியாரம்மா!"

"அப்படியா? — புரொபஸர் முகத்திலே அசடு வழிந்தது! அவர் அஞ்சனாவை ஒரு கணம் பார்த்து விட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு விட்டார். அவருக்கு நாற்பத்தைந்து வயதுக்கு மேலிராது. ஆனால் கூன் விழுந்த முதுகும், மூக்குக் கண்ணாடியும், முன் தலையில் விழ ஆரம்பித்திருந்த இளநரையும் அவருடைய வயதை அதிகப் படுத்தியே காட்டின.

அஞ்சனா அவரைக் கண்டதும் ஒரு விவரிக்க முடியாத உணர்ச்சிக்கு ஆளாகி நின்றாள். அதில் மரியாதை, இரக்கம் இரண்டும் கலந்திருந்தன. குழந்தை வத்ஸலாவின் தந்தை அவளுக்கு ஒரு குழந்தையாகவே தோன்றினார். எனினும் இத்தனை நாளாக யாரைப் பார்த்தும் சங்கோசப்படாத அவள் இன்று ஒன்றும் சொல்லத் தெரியாமல் நின்றாள். புரொபஸர் சட்டென்று மிழலி பின் பக்கம் திரும்பி, "ரமா பாயீ! வாத்தியாரம்மாவையும் உள்ளே அழைத்துக் கொண்டுபோய்க் காப்பி பலகாரம் கொடு! வத்ஸலா, நீயும் போம்மா!" என்றார்.

வத்ஸலா குதித்துக்கொண்டு வாத்தியாரம்மாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

அவர்கள் திரும்பி வந்தபோது அவர் வராந்தாவிலேயே ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அஞ்சனாவைக் கண்டதும் அவர் எழுந்து, "வத்ஸலா அழக் கிழச் செய்து உங்களை ரொம்ப சிரமப்படுத்தி விட்டாளா?" என்றார் சங்கோசத்துடன்.

"காலையில் அழத்தான் செய்தாள். மத்தியானம் என் வகுப்புக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்துக் கொண்டேன். சமத்தாக இருந்தாள்!" என்றாள் அஞ்சனா.

"ரொம்ப சந்தோஷம். நீங்கள்தான் சிரமத்தைப் பாராமல் அவளைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ள வேணும். அவளைக் கட்டிப் பிடித்து அடக்குவது ரொம்பச் சிரமமான காரியமா யிருக்கிறது!" என்றார் புரொபஸர்.

"அதற்கென்ன, பேஷாய்க் கவனித்துக் கொள்கிறேன்!" என்றாள் அஞ்சனா.



அன்றிரவு அவளுடைய எண்ணங்கள் அந்தக் குழந்தையையும் அதனைப் போல் காட்சியளித்த அதன் தகப்பனாரையும் சுற்றியே வட்டமிட்டன.

வத்ஸலாவின் உபத்திரவத்துக்காக அவன் வாரத்தில் குறைந்தது இரண்டு நாட்களாவது அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டி வந்தது. இதைச் சாக்கிட்டுப் பவானி சங்கர் அவளைக் குழந்தைக்குப் 'பிரைவேட்' சொல்லிக் கொடுக்க நியமித்து விட்டார்.

நாளடைவில் வத்ஸலாவை அஞ்சனாவோடு பிணைத்த பாசம் பவானி சங்கரையும் சேர்த்துப் பிணைத்தது. அவள் இதயத்தில் தாய்மை, பெண்மை ஆகிய இரு உணர்ச்சிகளும் ஊற்றெடுத்துப் பெருக ஆரம்பித்தன. ஆமாம்; அவள் வத்ஸலாவுக்கு 'வாத்தியாரம்மா'வாக இருப்பதுடன் நில்லாமல், அவளுக்கு 'அம்மா'வாகவே ஆகிவிட விரும்பினாள்!

'இதயந்தான் மனிதன்' என்கிறார்கள். 'புத்தி' என்றும், 'விவேகம்' என்றும் கூறுகிறார்களே, அது எப்பொழுதும் இதயம் எது விரும்பினாலும் சரி, கச்சை கட்டிக் கொண்டு உடனே சண்டைக்குப் புறப்பட்டு விடுகிறது. இந்த நியதியை யொட்டி அஞ்சனாவின் இதயத்துக்கும், அவள் விவேகத்துக்கும் அன்று போர் மூண்டது.

“நான் இருக்கிறேன் என்கிற நினைவு உனக்கு இருக்கிறதா, இல்லையா?” என்று புத்தி கொஞ்சம் மிரட்டியே கேட்டது.

ஒரு பெரிய மனிதரிடம் சட்டையைத் தைத்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் பேசாமல் சென்றான் தையற்காரன். பெரிய மனிதர் அவனைக் கூப்பிட்டு, “என்ன அப்பா, டெய்லர்! சட்டையைத் தைத்துக் கொடுத்து விட்டுப் பணம் கேட்காமல் போகிறாயே!” என்றார்.

“பெரிய மனிதர்களையெல்லாம் நானாக ஏன் ஸார், பணம் கேட்க வேண்டும்?” என்றான் தையற்காரன்.

“சரி, பணமே கொடுக்காமலிருந்து விட்டால்......?”

“பெரிய மனிதர் இல்லை என்று தெரிந்து கொள்கிறேன்!”

அஞ்சனா கொஞ்சம் பயந்து விட்டாள். அவளுடைய 'பலஹீன'த்தைப் பயன் படுத்திக் கொண்டு, “உனக்கு வயதென்ன ஆகிறதென்பதை யோசித்தாயா? இருபத்தைந்து ஆகிவிடவில்லையா? வத்ஸலாவைப் போன்ற நாலு குழந்தைகளுக்குத் தாயாகி யிருக்க வேண்டிய வயசாச்சே, அது?” என்றது புத்தி.

“உண்மைதான்! இதிலிருந்தே நான் அவளுக்கு 'அம்மா'வாக ஆசைப்படுவது நியாயமான விஷயம் என்று ஆகிறதல்லவா? எனக்கும் யுக்த வயதில் விவாகமாகி யிருந்தால் என் கணவருக்கும் 'அவ'ருக்காகிற வயதுதானே ஆகியிருக்கும்?” என்று அஞ்சனா ஒரு போடு போட்டாள்.

'புத்தி'க்கு ஒரு க்ஷணம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பிறகு, அது தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, “இந்தப் பந்தங்களுக்கு ஏன் வீணாக ஆசைப் படுகிறாய்? கிடைத்தற்கரிய சுதந்திர வாழ்வை ஏன் உதறித் தள்ளிவிட முயல்கிறாய்? யோசித்துப் பார், இது கொஞ்சங் கூட நன்றாயில்லை!” என்றது.

“போதும், போதும்! இந்தப் பத்து வருஷச் 'சுதந்திர வாழ்வு' எனக்கு ஏழேழு ஜன்மங்களுக்குப் போதும்! வாழ்வா, அது? சாவு! அன்பு செய்யக் கணவன் வேண்டும்; கொஞ்சி மகிழக் குழந்தைகள் வேண்டும். இவை யில்லாத வாழ்வு என்ன வாழ்வு?” என்றாள் அவள் கோபமாக.

இதைக் கேட்டு விட்டுப் புத்தி 'கட கட' வென்று நகைத்துவிட்டு, “இதென்ன, கூத்து! ஒன்றல்ல இரண்டல்ல, நாற்பது குழந்தைகள் நாள் முழுதும் உன்னைச் சூழ்ந்து உன் அன்பைப் பெறக் காத்திருக் கின்றனவே! இது உனக்குப் போதுமான தாக இல்லையா?” என்று கேட்டது.

“அவை எப்படி என் குழந்தைகளாகும்? கூலிக்கு அவைகளுடன் நான் மாரடிக் கிறேன். கல்வியோடு கொஞ்சம் உணர்ச்சி யும் ஊட்ட வேண்டி என் அன்பையும் கொஞ் சம் அள்ளி வீசுகிறேன், அவ்வளவுதானே?”

“நீ என்ன சொன்னாலும் கேட்க மாட்டாய் போலிருக்கிறது. சரி, விவாகம் பேச நீ யாரை அனுப்புவாய்? இம்மாதிரி விஷயங்களில் 'சம்பிரதாயம்' என்று ஒன்று இருக்கிறதே, அதை அனுசரித்துத் தானே நீ நடக்க வேண்டும்? தமயந்தியா யிருந்தால் அன்னப் பறவையிடம் சேதி

சொல்லி யனுப்பலாம்! யக்ஷ ஸ்திரீயாயிருந் தால் மேகத்தையாவது தூது விடலாம்! சகுந்தலையாக இருந்தால் தாமரை யிலையை யாவது தேடலாம்! ஏழை வாத்தியாரம்மா வாகிய நீ எந்த முறையைக் கையாளப் போகிறாய், சொல்!" என்று புத்தி கனைத்தது.

இதயம் சமயத்தில் அஞ்சனாவைக் கை விட்டு விடவில்லை. அது உடனே, "அஞ்சனா! 'மனிதன் வாழத்தான் பிறந்திருக்கிறான்; சாகப் பிறக்கவில்லை' என்பதை நீ முதலில் நினைவு கூர வேண்டும். அந்த வாழ்வுக்கு எதையும் பொருட் படுத்தாத மன உறுதியையும் பெற வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக உன்னிடமே உனக்கு நம்பிக்கை யுண்டாக வேண்டும். அதுவே வாழ்வின் ஜீவநாடி. அதில்லாவிட்டால் மனிதனும் வாழ முடியாது!" என்று சொல்லி வைத்தது.

இந்த உபதேசத்தை யொட்டி அஞ்சனா ஒரு முடிவுக்கு வந்து சேர்ந்தாள்.

இந்நிலையில் பள்ளிக்கூடம் கோடை விடுமுறைக்கு மூடப்பட்டு விட்டது. பத்து நாட்களுக்குப் பிறகு அவள் நெஞ்சில் பெரிய உறுதியை வரவழைத்துக் கொண்டு வத்ஸலாவின் வீட்டை நோக்கிப் புறப் பட்டாள்.

இதோ, அந்தத் தெருக் கோடியும் வந்து விட்டது!

வத்ஸலா தன் வரவை எதிர்பார்த்து வாசலில் நின்றிருப்பாளோ!

அவள் அப்பாவைப் பார்க்கச் செல்லும் போது அவளையும் கூட அழைத்துப் போவதுதான் சரி. அவளை அணைத்த வண்ணம், 'வத்ஸலாவுக்கு வாத்தியா ரம்மாவாக இருப்பது எனக்குத் திருப்தி யளிக்கவில்லை. அவளுடைய 'அம்மா'வாக என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்று கூறி அவர் பாதத்தில் சிரம் வைத்து ...ஐயோ, இதென்ன வெட்கக் கேடு! — அஞ்சனாவுக்குத் திரும்பி ஓடிப் போய்விட வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற் குள் அவள் அந்த வீட்டு வாசலுக்கு வந்து விட்டதை உணர்ந்தாள்; தலை நிமிர்ந்தாள்!

வீடு பூட்டப்பட்டிருந்தது!

அவள் மூச்சு ஒரு கணம் நின்றது. வந்த வழியே திரும்பினாள்—நம்பிக்கை மேரியின் வீட்டுக்குச் செல்ல வேண்டும்; இந்த

உணர்ச்சியை உடனே அடக்கி விட வேண்டும் என்ற எண்ணத்துடன்.

"ஏ, அம்மா! வாத்தியாரம்மா! உன்னைத் தானே!"—அஞ்சலை திரும்பினாள்; இதழ்க் கடையிலே சோகம் நிறைந்த ஒரு சிரிப்புடன்.

"என்ன?"

அந்த வீட்டுக்கெதிரில் வெற்றிலையும் வள்ளிக்கிழங்கும் விற்றுக்கொண்டு கடை வைத்திருந்த கிழவி ஒருத்தி அவளைப் பார்த்து, "அவங்க காலு காலைக்கு முன்னே தான் ஊருக்குப் புறப்பட்டுப் போனாங்க, ஏதோ அவசர காரியமா! அந்த ஐயரு என் கிட்டே எட்டணாக் காசைக் கொடுத்து நீ இந்தப் பக்கம் வந்தா உன்கிட்டே இந்தக் கடிதாசியைக் கொடுக்கச் சொன்னாரு!" என்று கூறியவண்ணம் தன் வெற்றிலைப் பையில் புகையிலைக் கட்டைகளுக்கு நடுவே மடித்து வைத்திருந்த 'மணக்கமழும் ஒரு உறை'யை எடுத்துக் கொடுத்தாள்.

அன்புள்ள அஞ்சலைக்கு.

உன்னை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஒரு வாரமாக இருப்புக் கொள்ளாமல் அலைகிறாள் வத்ஸலா. அவளுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிக்கிறேன். ஒரு நாள் அவள் அழுது கொண்டே கேட்டாள், "அப்பா, அம்மா சொர்க்கத்திலிருப்பதாகச் சொல்கிறாயே, ஒருவேளை இந்த வாத்தியாரம்மாவும் அங்கே போய் விட்டாளோ?" என்று. நான் என்ன பதில் சொல்வேன் இதற்கு?

ஊரில் எனக்குச் சொந்தமான நிலங்கள் சம்பந்தமான சில தகராறுகளைத் தீர்க்க நான் உடனே புறப்பட்டுப் போக வேண்டியிருக்கிறது. மேலும் நம் பந்துக்கள் சிலரைப் பார்க்க விரும்புவதால் அவளையும் வத்ஸலாவையும் என்னுடன் கூட்டிச் செல்கிறேன்.

பத்துப் பதினைந்து நாட்களில் நாங்கள் திரும்பி வந்து விடுவோம். அப்புறம்?.........

அப்புறம் நீ வத்ஸலாவுக்கு வெறும் வாத்தியாரம்மாவாக மட்டும் இராமல், மறைந்து போன அவள் தாயின் ஸ்தானத்தையும் வகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மிகச் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து திக்கற்றுப் போன நீ இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்த கதையைக் கிழவி சொல்லக் கேட்டேன். விதி சதி செய்து இத்தனை நாளும் உன் மண வாழ்க்கையில் மண்ணை வாரிப் போட்டு விட்டதனால் உன் தரம் குறைந்து விட்டதாக நான் கருதவில்லை.


இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கப் பகவான் அருள் புரியட்டும்.

என்றும் உன்னுடைய,

ஜி. பி. எஸ்.

"வாழத்தான் பிறந்திருக்கிறேன்; சாகப் பிறக்கவில்லை" என்று முணுமுணுத்த வண்ணம் கடிதத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள் அஞ்சலை.

சௌகரியமாகப் போயிற்று!



வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பையனை வாத்தியார் பெஞ்சுமேல் ஏற்ற, அவன் இப்போது சௌகரியமாக வேடிக்கை பார்க்கிறான்.

அருமை நண்பர்கள்

"கோணல்"

எதிர்பாராத விதமாக ஒரே நாளில் நான்கு கடிதங்கள் எனக்கு வந்தால் என் ஆச்சரியமாயிருக்காது? இவ்வளவு நாட்களாக நான் எழுதிய கடிதங்களுக்குக் கூடப் பதில் போடாத நண்பர்கள், இப்பொழுது தாங்களாகவே கடிதம் போட்டதுதான் எனக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியமாயிருந்தது. அவர்களும் ஒரு காரணத்தோடு தான் எனக்குக் கடிதமெழுதியிருக்கிறார்களென்று கடிதங்களைப் படித்தவுடன்தான் தெரிந்தது.

இதோ முதல் கடிதம்:

அன்புமிகுந்த ராஜுவுக்கு நமஸ்காரம். இவ்வளவு நாளாக நான் கடிதம் போடாது இப்பொழுது போட்டது பற்றி நீ ஆச்சரியப் படலாம். இவ்வளவு நாளும் எனக்கு ஓய்வில்லாததே இதற்கு முக்கியக் காரணம். முன்பு ஒரு தடவை நீ என் வீட்டிற்கு வந்தபொழுது என்னிடம் இரண்டு 'டேபிள் லைட்' இருப்பதைப் பார்த்துவிட்டு, உனக்கொன்று வேண்டுமென்று ஆசையோடு கேட்டாய். நான் கொடுக்க முடியாதென்று உன்னிடம் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன். இது உனக்கு ஞாபகமிருக்கும். என்ன செய்வது? அப்பொழுது எனக்கு அவசியம் ஒரு விளக்கிற்கு இரண்டு விளக்காய் வேண்டியிருந்தது. நானுந்தான் ஒரு வருஷத்திற்கு இரண்டு வருஷமாய் மேஜையில் பக்கத்துக் கொரு விளக்காக வைத்துக் கொண்டு படித்தேன். ஒன்றும் பிரயோசனமில்லை; வெறுப்படைந்து உட்கார்ந்து விட்டேன். விளக்குகளுக்கும் இப்பொழுது அவசியமில்லாமலிருக்கிறது. உனக்கு ஒரு விளக்கைக் கொடுக்காவிட்டால் என் மனதிற்குச் சாந்தி ஏற்படாது போலிருக்கிறது. 'ஒருவேளை நீ வேண்டாமென்று சொல்லி விடுவாயோ!' என்று பயமாய் இருக்கிறது. அதனால்தான் உன்னைக் கேட்டுக் கொண்டு அனுப்பலாமென்று இக் கடிதம் எழுதினேன். விளக்கை அனுப்பட்டுமா? உடனே பதில் எழுது.

இன்னொரு முக்கிய விஷயம். நீ மகாத்மா காந்தி இறந்த சமயம் டெல்லியில் இருந்தாயாமே? உன்னிடம் காந்திஜியின் கடைசி பாததூளி பட்ட புனிதமான இடத்து மண் இருக்கிறதாமே! இந்த ரகசியத்தை எனக்கொரு நண்பன் சொன்னான். அவன் பெயரை மாத்திரம் உன்னிடம் நான் சொல்லமாட்டேன். இந்த வயதில் உன்னோடு குழந்தையிலிருந்து பழகிய சினேகிதன் நான் என்பதை நீ மறந்து விடாதே. இந்தக் கடிதம் கண்டதும் அந்தப் புனிதமான மண்ணில் எனக்கும் கொஞ்சம் அனுப்பி வை.

உன் அன்புள்ள நண்பன்,
ராமமூர்த்தி.

கடிதம் இரண்டு:

ஆருயிர் நண்பன் ராஜுவுக்கு அனேக நமஸ்காரம். திடீரென்று கடிதம் போடுகிறேனே என்று நினைக்காதே. கொஞ்சம் அதிகமாகப் புஸ்தகங்களைப் படித்துப் புத்தியை விசாலப்படுத்திக் கொண்டாலே சோம்பேறித்தனமும் கிறுக்கும் ஏற்பட்டு விடும். இதனால் நீ என்னை ஏதாவது புத்தகம் இரவல் கேட்கும்போது 'புத்தகம் இரவல் கொடுப்பது உயிரை எமனிடம் ஒப்படைப்பது போல' என்று எழுதிய சீட்டை நான் உன்னிடம் காட்டுவேன். நீயும் வருத்தத்தோடு போய்விடுவாய். அதை யெல்லாம் இப்பொழுது நினைக்கும்போது பெரிய பாவம் செய்து விட்டதாக எண்ணிப் பயப்படுகிறேன். நாளையதினம் தபால் மூலமாக உனக்கொரு ரிஜிஸ்டர் பார்சல் வந்து சேரும். இதெல்லாம் கடிதாசக்காரனிடம் விலை மலிவாக வாங்கினாலும் கிடைக்கக் கூடாத இலக்கியப் பொக்கிஷங்கள். நீயே பார்த்துக் கொள்; பார்த்துவிட்டுப் பத்திரமாக வைத்துக் கொள்.

ஆமாம், சமீபத்தில் நீ டெல்லிக்குப் போயிருந்தாயாமே? மகாத்மாவின் கடைசி பாததூளி பட்ட புனிதமான பூமியிலிருந்து எடுத்த மண் உன்னிட மிருக்கிறதாமே? அதில் எனக்கும் கொஞ்சம் அனுப்பி வை. ரிஜிஸ்டர் கவரில் பத்திரமாக அனுப்பு.

உன்னுடைய உண்மை நண்பன்,
ஒய். ரங்கசாமி.

உதாரணத்துக்கு இந்த இரண்டு கடிதங்கள் போதாதா? மற்றக் கடிதங்களும் இதைப் போன்றவைகளே. ஆபத்தான சமயத்தில் ஐந்து ரூபாய் கடன் கேட்ட பொழுது இல்லையென்று சொன்ன வெங்கிட்டு, இப்பொழுது எவ்வளவு ரூபாய் கடன் வேண்டுமென்று கேட்டிருந்தான். அதோடு மட்டுமல்ல; ஊரிலுள்ள என் குடும்பத்தைப் பற்றி அவனுக்கு அபார சிரத்தை ஏற்பட்டிருந்தது. என் பெற்றோரின் தேக நிலைமை, என் சிறிய தங்கையின் மழலைச் சொல், எங்கள் வீட்டுக் கொல்லைப்புறத்தில் நான் வரும்போது வைத்துவிட்டு வந்த வாழைக் கன்றின் வளர்ச்சியை அடி அங்குலம் தப்பாது அளந்து கணக்கிட்டு எழுதியிருந்தான். இந்த அருமை நண்பர்களெல்லாம் எனக்கு உபகாரம் செய்யத் துணிந்து தாங்களாகவே முன் வந்து கடிதம் எழுதியதில் எனக்கு அளவற்ற சந்தோஷந்தான். ஆனால், அவர்கள் கடைசியாகக் காந்திஜி இறந்த இடத்துப் புனித மண் வேண்டுமென்று பிடித்த பல்லவிதான் எனக்குப் பெரிய சங்கடத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியது. நான் எப்பொழுது டில்லிக்குப் போனேன்? என்னிடம் ஏது, மகாத்மா பாத தூளி பட்ட மண்? யாரோ செய்துவிட்ட புரளியை ஆதாரமாக வைத்துக்கொண்டு இந்த நலன்களை யெல்லாம் பெறுவது மனச்சாக்ஷிக்கு விரோதமாக இருந்தது. சங்கசாமி அனுப்பிய புத்தகங்களை அவனுக்கே திருப்பி அனுப்பி விட்டு, எல்லா நண்பர்களுக்கும் கடிதமெழுதி விட்டேன் — நான் டெல்லிக்குப் போகவில்லையென்றும், நண்பர்கள் வீண் புரளிகளை எண்ணித் தடுமாற வேண்டாமென்றும்.

மறுநாள் நான் எதிர்பாராத விதமாக சீனுவிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. அவன் எழுதிய கடிதம் இதுதான்.

ராஜுவுக்கு: நீ என்னை இப்படி சங்கடத்தில் கொண்டு விடுவாய் என்று நான் நினைக்கவேயில்லை. நீ சுத்த அசடு, ஏதோ சத்ய சந்தனைப் போல் இருக்கத்தான் நினைக்கிறாய். உன்னைப் போன்றவர்களுக்குக் கஷ்டப்படத்தான் ஜென்மம். நல்ல சந்தர்ப்பம் கிடைத்தாலும் யுக்தி புத்தியாய்ப் பிழைக்கத் தெரியாது. மகாத்மா காந்தி இறந்த இடத்து மண் என்று ஏதாவதொரு மண்ணை யெடுத்துப் பத்திரமாக அனுப்பினால் என்ன மோசம் வந்து விட்டது? மகாத்மா காந்தி இந்த நாட்டில் என்று பிறந்தாரோ அன்றிலிருந்து இந்த நாடே புனிதமடைந்து விட்டது. இந்த நாட்டின் மண் முழுவதும் புனிதமானதுதான். ஆகையால் எந்த மண்ணை எடுத்து அனுப்பினாலும் பாவமோ தோஷமோ இல்லை. இதற்கு ஏன் பயப்பட வேண்டும்? தவிர இந்த நண்பர்களை யெல்லாம் உனக்கு நன்றாகத் தெரியாதா? முதலில் ராமுவை எடுத்துக்கொள்: அவனுக்கு எதற்கு இரண்டு டேபிள் லைட்? அவனிடமிருந்து எப்படியாவது உனக்கொரு விளக்கை வாங்கிக் கொடுத்து விடுவது என்று நான் சங்கல்பம் செய்து கொண்டிருந்தேன். அதற்குச் சந்தர்ப்பமும் வாய்த்தது. ஆனால் நீதான் சாமர்த்தியமில்லாமல் நடந்துகொண்டு விட்டாய். போகட்டும், வெங்கிட்டுவிடமிருந்தாவது இந்தச் சந்தர்ப்பத்தில் நூறு இருநூறு வாங்கியிருக்கலாம். அதையும் நழுவ விட்டு விட்டாய். அதுவும் போகட்டும். சங்கசாமி அனுப்பிய புஸ்தகங்களை ஏன் திருப்பி அனுப்பினாய்? வந்த புஸ்தகங்களை வாங்கி வைத்துக் கொண்டால் என்ன? நீ புத்திசாலிதான்! இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் நீ அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விடுகிறாய். இவையெல்லாந்தான் போகட்டும், வந்த கடிதங்களையாவது வாங்கிப் போட்டுவிட்டுப் பேசாமலிருந்திருக்கக் கூடாதா? அவர்களுக்கெல்லாம் உன்னுடைய ஒழுங்கையும் யோக்யதையையும் காண்பிப்பது போல் கடிதம் வேறு எழுதி விட்டாய்! இதனால் நான் வெறும் புரளிக்காரனாகி விட்டேன். இந்த அருமை நண்பர்களுக்கெல்லாம் இப்பொழுது என்னைக் கண்டாலே வெட்டிவிடலாம் போலிருக்கிறது....



சீனு எழுதியிருந்த கடிதம் பூராவும் படித்தேன். அவன் எழுதியிருப்பது போல் இந்த நண்பர்களெல்லாம் எவ்வளவு சுயநலக்காரர்களாயிருந்தாலும், அவர்களையும் ஒரு சந்தர்ப்பத்தை உபயோகித்து என்னுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ளாமல் விட்டுவிட்டதில் ஒரு அளவற்ற ஆத்ம திருப்தி ஏற்பட்டிருக்கிறது.

யாருக்கு நன்றி?



அன்று நான் ஆபீஸிலிருந்து வந்ததும் என் வீட்டில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதையறிந்து கொண்டேன். லக்ஷ்மியின் முகத்தில் பொங்கிய குதூகலந்தான் அதற்குக் காரணம். உடைகளை மாற்றிக் கொண்டு வந்து ஊஞ்சலில் உட்கார்ந்தேன். "என் தங்கை சாரதாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதாம். அப்பா கடிதாக எழுதியிருக்கிறார். இன்னும் இரண்டு நாளில் புறப்பட்டு இங்கே வருகிறாராம்!" என்றாள் லக்ஷ்மி.

"எனக்கு வந்த கடிதாசைப் பிரித்துப் பார்த்து விட்டாயோ, இல்லையோ!"

"நான் ஒன்றும் உங்களுக்கு வந்த கடிதாசைப் பிரித்துவிட வில்லை. உங்கள் சுபாவம் தெரிந்துதான் அப்பா கார்டில் எழுதியிருக்கிறார்!"

"அப்பா என்னத்துக்காக இப்பொழுது இங்கே புறப்பட்டு வருகிறார்?"

"ஆகா, என்ன பாசாங்கு! இதுகூட உங்களுக்குத் தெரியவில்லையா? என்னை அழைத்துக் கொண்டு போவதற்குத்தான் அப்பா இங்கே வருகிறார்!"

"ஓகோ! சரிதான், சரிதான்; பிறந்தகம் போவது என்றாலே பெண்களுக்குக் குஷி பிரமாதமாகப் பிறந்து விடுகிறது!"




"அனுப்ப இஷ்டமில்லையென்றால் வேண்டாமே! அதற்கு இப்படியெல்லாம் கேலி பண்ணிக் குத்திக் காட்டுவானேன்?"

இப்படிச் சொல்லும்போதே லக்ஷ்மியின் கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் அருவிபோல் பெருகியது.

"லக்ஷ்மி! இதோ பார், இப்பொழுது என்ன நடந்துவிட்டது? நான் உன்னை ஊருக்குப் போக வேண்டாம் என்று சொன்னேனா? விளையாட்டுக்காகச் சொன்னால் இப்படி விபரீதமாக எடுத்துக் கொள்ளுகிறாயே!" என்று கூறி அன்போடு அவள் கையைப் பிடித்துக் கொண்டு சமாதானப் படுத்தினேன்.

என் மாமனார் தம் கடிதத்தில் குறித்திருந்த தேதியில் என் வீட்டில் காட்சியளித்தார். நாலைந்து நாட்கள் எனக்கு என் வீட்டில் இராஜோபசாரம் நடந்தது. குளிக்கப் போகுமுன் சோப்பு, டவல் இவைகளையெல்லாம் சாதாரணமாகத் தினந்தோறும் நான்தான் தேடியெடுத்துக் கொண்டு போவேன். இப்பொழுது சோப்பும், டவலும் குளிக்கும் இடத்தில் எனக்காகக் காத்துக் கிடந்தன. சாப்பிட்டதும் கையலம்ப ஜலம் நான்தான் எடுத்துக் கொள்ளுவது வழக்

நல்ல யோசனை!



பெட்ரோல் கிடைக்காத இந்தக் காலத்தில் கார் உள்ளவர்களுக்கு இந்தமாதிரி யோசனை தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

கம். இப்பொழுதெல்லாம் ஜலமும் தயாராயிருந்தது. எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "என்மீது லக்ஷ்மி கடாக்ஷம் பூரணமாக விழுந்திருக்கிறதே!" என்று லக்ஷ்மியைப் பார்த்துக் கொண்டே கூறினேன். அவள் கொஞ்சமாகச் சிரித்துக் கொண்டே பதில் சொல்லாமல் உள்ளே போய்விட்டாள்.

★

அன்று ஞாயிற்றுக்கிழமை. நான் வழக்கம்போல் என் நண்பர்களின் வீட்டுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு வீட்டுக்குச் சாப்பாட்டு நேரத்துக்கு வந்தேன். சாப்பிட்டு விட்டுக் கொஞ்ச நேரம் விச்ராந்தி செய்து கொண்டதும் மூன்று மணிக்கெல்லாம் சிற்றுண்டியும் காப்பியும் தாமே என் அறைக்கு வந்து என்னைத் தடுத்தாட் கொண்டன.

காப்பி சாப்பிட்டு விட்டுக் கூடத்துக்கு வந்தேன். அங்கே மூட்டை முடிச்சுகளும் பெட்டியும் கூஜாவும் படுக்கையுடன் பிரயாண அவசரத்தில் காட்சியளித்தன.

"என்ன லக்ஷ்மி, ஊருக்குப் போவது என்று தீர்மானித்து விட்டாயா? அப்பப்பா! இந்தப் பெண்களுக்கே துணிச்சல் அதிகம்!" என்று துணிச்சலுடன் சொல்லி விட்டேன்.

"உங்கள் உத்தரவு பெற்று என்னை அழைத்துப் போகத்தானே அப்பா தன் வேலையை யெல்லாம் விட்டுவிட்டு இங்கே வந்து ஒரு வாரமாகக் காத்துக் கிடக்கிறீர்? அவர் ஊருக்குப் போவதைப் பற்றிப் பேச்செடுத்தாலே நீங்கள் வாய் திறவாமல் இருந்தீர்கள்!"

"ஓகோ, பதில் பேசாமல் இருந்தால் ஒப்புக் கொண்டதாக அர்த்தமோ?"

நான் இப்படிச் சொல்லி முடிப்பதற்குள் அவள் தகப்பனார் அங்கே தோன்றினார்.

"என்ன மாப்பிள்ளை, காலரை மணிக்கு ராகு காலம். குழந்தையை அழைத்துப் போக வேண்டியிருப்பதால் கொஞ்சம் முன்னதாகவே...!"

"குழந்தையா! யாரைச் சொல்லுகிறீர்கள்?"

"நம்ம லக்ஷ்மியைத்தான் சொல்லுகிறேன்!" என்றார் என் மாமனார்.

"அப்பா, நான் ஊருக்கு வரவில்லை. நீங்கள் போங்கள்!"

இது லக்ஷ்மியின் கோபம் கலந்த குரல்.

"ஏன் அம்மா, உனக்கு உடம்புக்கு என்ன? ஏன் இப்படித் திடீரென்று...?"

"எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. மாப்பிள்ளைக்குத்தான் மனசு சரியாயில்லை!" என்றாள் லக்ஷ்மி துடுக்காக.

"மாப்பிள்ளையிடம் நீ இன்னும் கேட்கவே இல்லையா, லக்ஷ்மி?" என்று கேட்டார் அவள் அப்பா.

"லக்ஷ்மி, அதற்குள் ஒன்றுமில்லாத விஷயத்தை அப்பா வரையில் கொண்டு போய் விட்டாயே?" என்று என் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் சொன்னேன்.

"பார்த்தாயா, லக்ஷ்மி? மாப்பிள்ளை தங்கமாயிற்றே! நீ அவரிடம் ஊருக்குப் போகும் விஷயமாக ஒன்றும் சொல்லவில்லையா! நீ அவரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு விட்டாயாக்கும் என்று இருந்தேன்!" என்று லக்ஷ்மியின் அப்பா ஒரு போடு போட்டார்.

"சரி, லக்ஷ்மி! நாழிகையாகிறது. சீக்கிரம் தயார் செய்து கொள்!" என்றேன். வேறு என்னத்தைச் சொல்ல?

உடனே லக்ஷ்மியின் முகத்தில் களை பொங்கியது. அவள் ஜயித்து விட்டாளல்லவா?

"வண்டி வந்ததும் புறப்பட வேண்டியதுதான்! நீங்கள் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆபீஸிலிருந்து சீக்கிரம் வந்து விடுங்கள்!" என்று கூறிப் பரபரப்புடன் புறப்படத் தயாரானாள் லக்ஷ்மி.

நான் ஸ்டேஷனுக்குப் போய் அவர்களை ரயிலேற்றி விட்டுத் திரும்பும் வரையில் லக்ஷ்மியின் முகத்தில் குதூகலம் பொங்கிக் கொண்டிருந்தது.

★

லக்ஷ்மியும் நானும் எத்தனையோ விஷயங்களில் அபிப்பிராய பேதம் கொள்ளுவோம். ஆனால் எப்பொழுதும் வெற்றிபெறுவது லக்ஷ்மிதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

என் மாமனாருக்கு இருந்த எத்தனையோ சம்சாரத் தொல்லைகளுக்கு மத்தியில் அவரது நான்காவது பெண் சாரதாவுக்கு விவாகம் செய்ய வேண்டிய தொல்லை மிகவும் முக்கியமானதாக இருந்தது. அவரும் எத்தனையோ வரன் பார்த்தார். ஒன்றாவது சரிப்பட்டு வரவில்லை. பையன் நன்றாயிருந்தால் ஜாதகம் பொருந்தாது. ஜாதகம் பொருந்தினால் பையன் திருப்திகரமாயிருக்க மாட்டான். இரண்டும் பொருந்தினால் 'லௌகிக விஷயம்'—அதுதான் வரதக்ஷிணை விஷயம்—சரிப்பட்டு வராது.

கட்டுக் கட்டாக ஜாதகம் பார்த்து ஒன்றும் சரிப்படாமல் இருந்த சமயத்தில் 'ஒரு வரன் கிடைத்து விட்டது. முகூர்த்தம் குறிக்க வேண்டியதுதான் பாக்கி!' என்று என் மாமனார் சொல்லக் கேட்டதும் எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருந்தது என்கிறீர்கள்? அந்தச் சந்தோஷத்தில்தான் லக்ஷ்மியை ஊருக்கு அனுப்பி வைத்தேன்.

லக்ஷ்மி ஊருக்குப் போய் ஒரு வாரமாகியும் அவளிடமிருந்தோ அவள் தகப்பனாரிடமிருந்தோ ஒரு கடிதமும் வரவில்லை. எனக்கு ஒரே குழப்பமாயிருந்தது. இன்று அந்தக் குழப்பம் தீர என் மாமனாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வழக்கம்போல இந்த வரனும் சரிப்படவில்லையாம். இந்த விஷயத்தைத் தெரிவித்துவிட்டு, கூடவே ஒரு மாபெரும் பொறுப்பையும் என் தலையில் சுமத்தியிருந்தார். சாரதாவின் விவாகத்தை எப்படியாவது நான் முடித்து வைக்க வேண்டுமாம். என் மாமனாரின் வேண்டுகோளுடன் கூட லக்ஷ்மியின் கட்டளையும் தனிக் கடிதத்தில் என் கைக்கு வந்து சேர்ந்தது. அதிலிருந்து "வரன் தேடு படலம்" ஆரம்பித்து விட்டேன். தாலுகா ஆபீஸ் குமாஸ்தா, பள்ளிக்கூட உபாத்தியாயர், இன்னும் கம்பெனி குமாஸ்தாக்கள் இப்படிப் பல தரப்பட்ட பையன்களைப் பார்த்து அவர்களுடைய ஜாதகங்களையும் சேகரித்தேன். பத்திரிகைகளுக்குக் கட்டுரை, கதை அனுப்பும் எழுத்தாளனைப் போல் என் மாமனார் விலாசத்துக்கு அந்த ஜாதகக் கத்தைகளை யெல்லாம் அனுப்பி வைத்தேன்.

ஆபீஸ் வேலைகளை யெல்லாம் விட்டு விட்டு நான் சாரதாவின் கல்யாண விஷயமாக எடுத்துக்கொண்ட முயற்சி என்னை அடியோடு கை விட்டு விடவில்லை. கடைசியில் ஒரு ஜாதகம் பொருந்தியிருப்பதாகக் கடிதம் எழுதியிருந்தார் என் மாமனார். லௌகிகம் எல்லாம் பேசி முடிவு கட்டி முகூர்த்தம் நிச்சயமாகி விட்டது. நான் ஒரு வார விடுமுறையில் ஊருக்குச் சென்று கல்யாணத்தை நடத்தி வைத்தேன்.


கல்யாணம் முடிந்து பிள்ளை வீட்டார் ஊருக்குப் போகிற வரையில் லக்ஷ்மி என் கண்ணில் படவேயில்லை. திடீரென்று ஒரு நாள் அவள் என் முன்னால் தோன்றி, "ஊருக்கு எப்போது போகலாம்? உங்களுக்கு லீவு எத்தனை நாள் இருக்கிறது?" என்று கேட்டாள்.

லக்ஷ்மி தானாகவே வந்து ஊருக்குப் புறப்படும் பேச்சை எடுத்ததும் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன, அப்படியே பிரமித்துப் போய் நிற்கிறீர்களே! நான் இப்போது புறப்படமாட்டேன் என்று நினைத்தீர்கள், இல்லையா?" என்றாள் லக்ஷ்மி குறும்பாக.

"அதெல்லாம் இல்லை. இரண்டு மாதங்களுக்கு மேலாக இராப்பகல் அலைந்து வரன் நிச்சயம் செய்து கல்யாணத்தையும் சௌகரியமாக முடித்து வைத்தேனே, அதற்கு ஒரு வார்த்தை நீ நன்றி தெரிவித்தாயா? ஊஹூம்! உனக்கென்ன நீ 'ஹாய்'யாக அம்மாவோடு இருந்து விட்டாய். நான் அலைந்ததை நேரில் பார்த்திருந்தாயானால் நீ இப்படியிருப்பாயா?"

"நான் உங்களோடு இருந்திருந்தால் நீங்கள் இந்த வரனைப் பார்த்திருக்கவே மாட்டீர்கள். ஆபீஸுக்குப் போன வேளை போக மற்ற நேரம் எல்லாம் என்னைச் சுற்றிச் சுற்றி வருவீர்கள். அதற்குத்தானே அப்பா என்னை ஊருக்கு அழைத்து வந்தார்? ஆகையினால் எனக்குத்தான் நீங்கள் நன்றி செலுத்த வேண்டும்!" என்றாள் லக்ஷ்மி.



விச்சுவின் நாய்

பி.எஸ்.மணி



ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு ஆண் குழந்தை. அக் குழந்தைக்கு விசுவநாதன் என்று பெயர் வைத்து மிகவும் செல்வமாக வளர்த்து வந்தார். எல்லோரும் அவனை 'விச்சு, விச்சு' என்றே அழைத்து வந்தனர். அவர் தமது செல்வக் குழந்தையை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்க மாட்டார்.

விச்சுவின் பிறந்த நாள் வெகு தடபுடலாக நடந்தது. பணக்காரர் வீட்டுக் குழந்தையல்லவா? அதுவும் ஒரே குழந்தை. அந்தக் குழந்தைக்குப் பிறந்த நாள் கொண்டாட்டம் என்றால் சாதாரணமாகவா இருக்கும்? பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு வந்திருந்தவர்கள் எல்லாம் பல விதமான விலையுயர்ந்த பொருள்களை விச்சுவுக்குப் பரிசாகக் கொடுத்தார்கள். அந்த மாதிரி வந்த பரிசுப் பொருள்களுக்குள் விச்சுவின் மாமா கொடுத்த கண்ணாடி பீரோதான் பிரமாதமாயிருந்தது.

விச்சுவுக்கு வயது வந்ததும், அவன் தகப்பனார் பல விலையுயர்ந்த பொம்மைகளை வாங்கிக் கொடுத்தார். விச்சு எப்பொழுது பார்த்தாலும் தன் பொம்மைகளுடன் விளையாடிக்கொண்டிருப்பான். அவனுக்கு அவனுடைய பொம்மைகளே நண்பர்கள். அவர்களுடன்தான் அவன் ஆடுவதும் ஓடுவதுமாக இருப்பான்; பேசுவதும் சிரிப்பதுமாக இருப்பான்; உண்பதும் உறங்குவதுமாக இருப்பான்.

ஒரு நாள் விச்சுவின் தகப்பனார் தமது நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றார். தம்முடன் விச்சுவையும் அழைத்துச் சென்றார். அந்த வீட்டில் ஓர் அழகான நாய் இருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே விச்சு வெகு நேரம் நின்றுகொண்டிருந்தான். அதை விட்டுப் போக அவனுக்கு மனம் வரவில்லை. ஏன் தெரியுமா? அந்த நாயைப் பார்த்ததும் விச்சுவுக்குத் தனக்கும் அது மாதிரி ஒரு நாய் வேண்டும் என்ற ஆசை பிறந்து விட்டது.

அன்று வீட்டிற்கு வந்ததும் "அப்பா! அந்த மாமா வீட்டிலுள்ள நாய் மாதிரி எனக்கும் ஒன்று வேணும், அப்பா!" என்றான் விச்சு. அவன் வீட்டின் செல்வக் குழந்தையல்லவா? தந்தை உடனே அதற்குச் சம்மதித்து, ஓர் ஆளை அனுப்பி ஒரு அழகான நாய்க் குட்டி வாங்கி வரச் சொன்னார். நாய்க் குட்டியைக் கண்டதும் விச்சுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

அவன் தன் அறையில் அந்த நாயைக் கட்டி வைத்தான். அதற்கு வேண்டிய ஆகாரங்களைத் தானே எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். அதில் தான் அவனுக்கு எவ்வளவு சந்தோஷம்! நாயும் அவனிடம் அன்பாக நடந்து கொண்டது. விச்சு 'ஜில்லி' என்று கூப்பிட வேண்டியதுதான்; அது வாலை ஆட்டிக் கொண்டே அவன் பக்கம் பாயும். விச்சுவும் அதை அன்புடன் தடவிக் கொடுப்பான்.

ஆனால் அந்த நாயிடம் ஒரே ஒரு குறை இருந்தது. அது எப்பொழுது பார்த்தாலும் குரைத்துக் கொண்டேயிருக்கும். யார் பக்கத்தில் போனாலும் குரைக்கும்; விச்சு போனால் கூடக் குரைக்கும். குரைப்பதோடு மட்டுமில்லாமல் விச்சுவின் அறையைச் சுற்றிச் சுற்றி வரும்.


இதெல்லாம் அந்த நாயைக் கட்டிப் போட்டிருக்கும் போதுதான்; மற்ற நேரங்களில் அது அப்படிக் குரைப்பதில்லை.

விச்சுவுக்குத் தன்னுடைய நாய் இந்தமாதிரி இடைவிடாமல் குரைத்துச் சிரமப் படுத்துவதைக் காண அழுகை அழுகையாக வந்தது. தன் தகப்பனாரிடம் போய்த் தேம்பித் தேம்பி அழுதான். விச்சுவின் தகப்பனாருக்கு மனம் இளகியது. தம் ஒரே புதல்வன் அழுது கொண்டிருக்கக் காண அவருக்குச் சகிக்குமா? உடனே வேலைக்காரன் முனியனை அனுப்பி மிருக வைத்தியரை அழைத்து வரச் செய்தார்.

மிருக வைத்தியர் வீட்டிற்கு வந்து நாயைப் பரிசோதித்தார். அவரால் அந்த நாய்க்கு என்ன வியாதி என்று கண்டு பிடிக்கவே முடியவில்லை. இருந்தாலும் நாய்க்கு ஒரு ஊசியைப் போட்டு விட்டுப் பணத்தையும் பெற்றுக் கொண்டு போய் விட்டார். ஆனால் நாயின் ஓலக் குரல் மட்டும் தணியவே யில்லை.

விச்சுவின் தகப்பனார் மீண்டும் வேலைக்கார முனியனை யழைத்து, "முனியா! எப்படியாவது இந்த நாயின் வியாதியைத் தீர்க்க வேண்டும். விச்சு அழுது அழுது மெலிந்து போகிறான். யாராவது உனக்குத் தெரிந்த மந்திரவாதியை அழைத்து வந்து குணப்படுத்தப் பார்! அவனுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் சன்மானம் அளித்து விடுகிறேன்!" என்று சொன்னார்.

அடுத்த நாள் காலையில் விச்சுவின் வீட்டுக்கு ஒரு தாடி வைத்த மந்திரவாதி வந்தான். மந்திரவாதி விச்சுவின் அறையில் உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டு ஒரு மணி நேரம் மந்திரம் சொல்லிக் கொண்டே யிருந்தான். ஆனாலும் நாய் குரைப்பதை நிறுத்தவே யில்லை. விச்சு இவைகளையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். நாயின் வியாதி தீர வேண்டுமே என்று அவன் மனம் ஏங்கிக் கொண்டிருந்தது.



கடைசியில் மந்திரவாதி, "இந்த அறையில் ஒரு பெரிய பூதம் இருக்கிறது. அதனால் தான் நாய் குரைக்கிறது. ஆகையால் நாயை வெளி வாசல் தூணில் கட்டி விட்டால் குரைக்காது!" என்று சொன்னான்.

உடனே நாயைத் தானே பிடித்துச் சென்று வெளி வாசல் தூணில் கட்டினான் விச்சு. அதற்கப்புறம் அது குரைக்கவே யில்லை. மந்திரவாதி சன்மானத்தைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

விச்சுவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அவனுக்கு மட்டுமா? அவன் அப்பாவுக்கும் தான்!

அவர்கள் இருவரின் சந்தோஷத்தையும் பார்த்து வேலைக்கார முனியன் தனக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டான். ஏன் தெரியுமா? மந்திரவாதியாக வந்தவன் வேறு யாருமில்லை; அவனுடைய தம்பி வேலுதான். முனியன், நாய் ஏன் அப்படிக் குரைக்கிறது என்பதை யறிய மிகவும் ஆவல் கொண்டான். அவன் நாய் கட்டியிருந்த அறையில் வெகு நேரம் நின்று கூர்ந்து கவனித்தான். இதனால், கண்ணாடி பீரோவுக்கு எதிரே வந்ததும்தான் நாய் குரைக்கிறது என்பதை அவன் கண்டான். பிறகுதான் அவனுக்கு விஷயம் விளங்கியது. நாய் பீரோவில் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடியில் தன்னுடைய பிரதிபிம்பத்தைப் பார்த்து விட்டுத்தான் அப்படிக் குரைக்கிறது என்பதை அவன் தெரிந்து கொண்டான். எந்த நாயுமே இன்னொரு நாய் தனக்குப் போட்டியாக வருவதை விரும்பாதல்லவா? இந்த உண்மையைத் தெரிந்து கொண்டதும் முனியன் தன் தம்பி வேலுவை மந்திரவாதி வேஷம் போட்டு அழைத்து வந்தான். வந்தவன் உண்மையைச் சொல்லாமல் அந்த அறையில் ஒரு பூதமிருக்கிறது என்றான். தந்திரமும் பலித்தது; பணமும் கிடைத்தது.

ஆனால் விச்சுவும் அவன் தந்தையும் மந்திரவாதியின் மந்திரத்தினால்தான் நாயின் வியாதி குணமாயிற்றென்று இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.



வாசகர்களே!

சர்க்கார் மான்யம் கொடுப்பதற்கு முன்னால் வாசகசாலையைப் பார்வையிட வந்த அதிகாரி கையெழுத்துப் புத்தகத்தைப் பார்த்து விட்டு, "'விஸிட்டர் புக்'கில் கையெழுத்தே யில்லையே!" என்றார்.

வாசகசாலை நிர்வாகி:— வாசித்தவர்களில் அனேகர் தற்குறிகள்; ரேகைப் பதிவு வாங்கும் வழக்கம் இங்கே கிடையாது!

★

வாஸ்தவம்!

மனைவி:—என்ன, இன்னமும் திருடர் பயம் போகவில்லையா? நாய்தான் வாங்கியாகிவிட்டதே! இன்னமும் ஏன் கதவை யெல்லாம் தாழ்ப்பாள் போட்டுவிடுகிறீர்கள்?

கணவன்:—இந்த நாயை எவனாவது திருடிக் கொண்டு போகாமல் இருக்கத்தான்! அதிக விலை கொடுத்தல்லவா நாயை வாங்கியிருக்கிறோம்?

★

பேஷ்!

பேரன் (தாத்தாவைப் பார்த்து):—நீ எப்போது தாத்தாவானாய்?

தாத்தா:—நீ பிறந்தபோது!

பேரன்:—நான் பிறந்ததனால்தானே தாத்தாவானாய்? இல்லாவிட்டால் ஆக மாட்டாய், இல்லையா?

தாத்தா:—ஆமாம், அதற்கென்ன?

பேரன்:—அப்படியானால் அதற்காக எனக்கு என்ன கொடுக்கப் போகிறாய்?

கேட்டது எதற்கு?

பையன்:—டாக்டர் ஸார்! அம்மாளுக்குப் போன மாதம் ஒரு மாத்திரை எழுதிக் கொடுத்தீர்களே, அது இன்னும் எத்தனை பாட்டில்கள் சாப்பிட வேண்டும்?

டாக்டர்:—ஏன், தம்பி! அம்மா இன்னும் இரண்டு மூன்று பாட்டில்கள் சாப்பிட வேண்டும். நீ எதற்காகக் கேட்கிறாய்?

பையன்:—நான் விளையாட்டுத் துப்பாக்கி யொன்று வைத்திருக்கிறேன். அதில் குண்டுக்குப் பதிலாக இந்த மாத்திரையை உபயோகப்படுத்தினால் ரொம்ப நன்றாயிருக்கிறது! அதனால்தான் கேட்டேன்!

★

அவர் கவலை!

நோயாளி:—ஏதோ சொல்லுகிறேனே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் கையிலேயே இதுவரையில் டாக்டர்களுக்கு நான் சுமார் இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறேன்.

டாக்டர்:— அடடா! முன்னாலேயே என்னைத் தெரியாமற் போய்விட்டதே! முதலிலேயே நீங்கள் என்னிடம் வந்திருக்கப்படாதா?

★


எப்படி வியாபாரம்?

சோமு:—ராமு, என் மாமா ரொம்பக் கீழேயிருந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்து இப்பொழுது ரொம்ப மேலே போய் விட்டார்!

ராமு:—அப்படியா? அவர் என்னமாதிரி வியாபாரம் ஆரம்பித்தார்?

சோமு:—முதலில் செருப்புக் கடை வைத்து வியாபாரம் ஆரம்பித்தார்; இப்பொழுது குல்லாய் வியாபாரம் செய்கிறார்!

கமலா - ரங்கராஜன்



மகா மகோபாத்தியாய ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியாரின் புதல்வரும், "காலச்சக்கர"த்தின் உதவி ஆசிரியருமான சிரஞ்சீவி ஆர். கே. ரங்காராஜுக்கும் சௌபாக்கியவதி கமலாவுக்கும் சித்திரை மாதம் கும்பகோணத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்தின் போது தம்பதிகளுக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்து குவிந்தன.

வாழ்க, கமலா-ரங்காராஜன்!

மதிப்பு உயர்ந்தது

எஸ். அர்த்தநாரிஸ்வாமி.

ஆபீசிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய ரகுநாதன், தன்னுடைய மனைவி சக்தி ஒரே சந்தோஷமாக இருப்பதைக் கண்டான். அதற்குக் காரணம் என்னவென்பதை யூகிக்க அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அவனைக் கண்டதும் சக்தி துள்ளிக் குதித்துக் கொண்டு அவனருகே ஓடி வந்து, "தன்னுவுக்குக் கல்யாணமாம். கடிதம் வந்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே ஒரு கவரை அவனிடம் கொடுத்தாள்.

அவன் அதற்கெல்லாம் 'உம்' கொட்டிக் கொண்டே, கோட்டையும் சட்டையையும் கழற்றிவிட்டு, முகம், கை-கால்களை அலம்பிக்கொண்டு வந்து மெதுவாக ஊஞ்சலில் உட்கார்ந்தான்.

மாமனார் வீட்டை நினைத்துக் கொண்டாலே ரகுநாதனுக்கு மனதில் வேதனை உண்டாவது சகஜமாய்ப் போய்விட்டது. அவனுடைய மாமனார் பெரிய பணக்காரர். 'பையன் உயர்ந்த படிப்புப் படித்திருக்கிறான், மேலான உத்தியோகம் கிடைக்கும்' என்ற எண்ணத்தோடுதான் அவர் தமது மூத்த பெண்ணை ரகுவுக்குக் கொடுத்தார். ஆனால் அவனுடைய அதிர்ஷ்டம் கட்டையாக இருக்கும் என்று யாருக்குத் தெரியும்? ஆகவே, கல்யாணமாகி எட்டு வருஷங்களாகியும் அவன் நூற்றிருபது ரூபாய் சம்பளம் வாங்கும் சாதாரணக் குமாஸ்தாவாகத்தான் காலம் தள்ளி வந்தான். பணத்திலே பிறந்து, பணத்திலே வளர்ந்த தன் மனைவியைத் தன்னால் கூடுமான வரை அவன் சௌகரியமாகவே வைத்திருந்தான். ஆனால், அவளுடைய பெற்றோர்களோ, தங்களுடைய மகள் கணவன் வீட்டில் ரொம்பக் கஷ்டப்படுவதாக நினைத்து வருந்தினார்கள். அதைச் சக்தியின் எதிரிலேயே சொல்லவும் அவர்கள் தயங்குவதில்லை. அவர்கள் தங்கள் மகனுடைய அதிர்ஷ்ட ஹீனத்தைப் பற்றிச் சொல்லிச் சொல்லிச் சங்கடப்பட்டுக்கொள்வார்கள். இதைக் கேட்டுக் கேட்டு சக்தியும் தன்னுடைய வாழ்க்கையில் சலிப்பு அடைந்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அவ்வப்போது தனது சலிப்பை வெளியேயும் காட்டுவாள். ஆனால் ரகு அவைகளையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. செல்வத்தில் வளர்ந்த அவள், அவ்வாறு நினைப்பது இயற்கைதான் என்று எண்ணினான். அவளை இன்னும் ரொம்ப உயர்ந்த அந்தஸ்தில் வைத்துக் கொள்ள முடியாததற்காக அவன் வருத்தப்பட்டான்.

ஆனால் இதைப் பற்றியெல்லாம் அவன் இப்போது கவலைப்படவில்லை. போன வருஷம் தன்னுடைய மனைவியின் தங்கையான கமலியின் கல்யாணத்துக்கு அவன் போனபோது, தன்னைத் தன் மாமனார் வீட்டார் சரியாக நடத்தாதது அவனது உள்ளத்தை வாள் கொண்டு அறுப்பது போல இருந்தது. கமலியின் புருஷன் பெரும் பணக்காரன். ஆகவே அங்கு சம்பந்தம் செய்து கொண்டதில் ரகுவின் மாமனாருக்கு ரொம்ப சந்தோஷம். ஆனால், மூத்த பெண் சக்தி மட்டும் அதிர்ஷ்டமற்றவளாகப் போய்விட்டாளே என்ற கவலைதான் அப்போது அவர்களுக்கு அதிகமாகி விட்டது. ஆகவே அவர்கள் ரகுநாதனை அப்போது சரியாகக் கவனித்து உபசரிக்காததில் ஆச்சரியம் இல்லை. சூக்ஷ்ம புத்தியுடைய ரகுவுக்கு இது தெரியாமல் போகுமா? அவன் மிகவும் மனமுடைந்து மறுநாளே ஊருக்குக் கிளம்பி வந்து விட்டான்.

இன்று அவனுக்கு மாமனார் வீட்டிலிருந்து மீண்டும் அழைப்பு வந்திருக்கிறது. சம்பிரதாயப்படி அங்கிருந்து யாராவது நேரில் வந்து அழைக்க வேண்டும். அதை விட்டு விட்டு, "நேரில் வர சாத்தியப்படவில்லை; இந்தக் கடிதத்தையே நாங்கள் நேரில் வந்து அழைத்ததாக பாவித்துக் கொண்டு வரவேண்டும்" என்று நாலு வரி கிறுக்கி அந்த அழைப்பிதழோடு வைத்திருந்தது. தன்மீது அவர்கள் வைத்திருக்கும் மதிப்புக்கு ஒரு சின்னமாகவே அதை அவன் கருதினான்.

சிற்றுண்டியை எடுத்துக் கொண்டுவந்த சக்தி, "என்ன, பிரமாதமான யோசனை?"



என்று சொல்லிக் கொண்டே அதை அவன் முன் வைத்தாள்.

ரகுநாதன் சிற்றுண்டியைச் சாப்பிட்டுக் கொண்டே, "நீ எப்போது கிளம்புவதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

"அதென்ன கேள்வி? நீங்கள் வரப் போவதில்லையா?"

"இல்லை. எனக்கு இப்போது வர சௌகரியப்படாது. ஆபீஸ் 'இன்ஸ்பெக்ஷன்' சமயம்."

"அப்படியானால் நானும் போகப் போவதில்லை" என்று சற்றுக் கோபத்துடன் பதில் சொன்னாள் சக்தி.

"உன்னுடைய அண்ணா கல்யாணத்துக்கு நீ போகாவிட்டால் நன்றாயிருக்குமா? அப்பா என்ன நினைப்பார்?"

"என்ன நினைப்பார்? 'மாப்பிள்ளை அனுப்பவில்லைபோலிருக்கிறது. அதனால் தான் அவள் வரவில்லை' என்று நினைத்துக் கொள்வார், அவ்வளவுதான்!"

"என் மேல் எதற்காகப் பழியைப் போடுகிறாய்? நான் தான் உன்னைப் போகச் சொல்லுகிறேனே!"

"நீங்கள் வந்தாலொழிய நான் போக மாட்டேன்."

"அப்படியா? ஏன் இப்படி வீண் பிடிவாதம் பிடிக்கிறாய், சக்தி?"

"இரண்டு பேரும் போனால் செலவு அதிகமாகும் என்று பயப்படுகிறீர்களா? அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் போன தடவை என் ஊருக்குப் போயிருந்த போது, அம்மா எனக்கு நூறு ரூபாய் கொடுத்து அனுப்பினாள். அதை அப்படியே வைத்திருக்கிறேன். இப்போது உபயோகப்படுத்திக் கொள்ளலாம்."

இந்த வார்த்தைகள் ரகுநாதனுக்குத் தன்னுடைய ஏழ்மையைப் பரிகசிப்பது போல இருந்தது.

"என்னுடைய நிலைமை அவ்வளவு மோசமாகப் போய்விடவில்லை. நீ பணக்கார வீட்டுப் பெண் என்பது எனக்குத் தெரியும். போதும், நிறுத்து!" என்று சற்றுக் கோபமாகவே சொல்லி விட்டு, துண்டை உதறித் தோள்மீது போட்டுக் கொண்டு, 'விடு விடு' என்று வெளியே போய்விட்டான்.

அன்று புகைந்த புகைச்சல் இரண்டு நாள் வரையும் தீரவில்லை. அவன் இயந்திரம் போல் தன்னுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டு வந்தான். அவளும் அவனிடம் பேச்சுக் கொடுக்கவில்லை. அவன் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமலே அவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையெல்லாம் அவள் குறைவின்றிச் செய்து வந்தாள்.

மூன்றாவது நாள் ரகுவின் முறுக்குச் சற்று தளர்ந்தது. கல்யாணத்துக்கு இன்னும் ஐந்து நாட்கள்தான் இருந்தன. குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்பே வந்துவிட வேண்டும் என்று மாமனார் தம்முடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவளோ அதைப் பற்றியெல்லாம் சிந்தித்ததாகக்கூடத் தெரியவில்லை. எவ்விதப் படபடப்பும் அவளிடம் காணப்படவில்லை. இது மாதிரியான சந்தர்ப்பங்களில்தான் பெண்கள் தங்கள் பிகுவைத் தளர விடுவதில்லையே! ரகுநாதன் யோசித்தான். மாமனார் வேறு விதமாக நினைத்துக் கொண்டால் என்ன செய்வது? அவனுடைய மனத்தில் பலவிதமான எண்ணங்கள் தோன்றி அவனைக் குழப்பின.

அவனுடைய நண்பன் ராமமூர்த்தி தனது குடும்பசகிதம் மறுநாள் திருச்சிக்குச் சொந்தக் காரியமாகப் போவதாக அறிந்தான். சக்தியை அவர்களுடன் அனுப்பி விட்டால் என்ன?

அன்றிரவு அவன் சாப்பிட்டுவிட்டு சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு பத்திரிகை படிக்கும் பாவனையில் சக்தியைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் மளமள வென்று சாப்பிட்டு விட்டு, இலையை எடுத்து எறிந்துவிட்டு, சமையலறைக்குள் நுழைந்தாள். உள்ளே எஞ்சியிருந்த வேலைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு, ஒரு டம்ளரில் பாலைக் கொண்டு வந்து ரகுநாதன் பக்கத்தில் வைத்துவிட்டு, படுக்கை யறையை நோக்கிப் போக ஆரம்பித்தாள்.

"சக்தி, இங்கே வா!" என்று கூப்பிட்டான் ரகு.

"ஏன்?"

"கலியாணத்துக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?"

"எந்தக் கலியாணத்துக்கு?"

"எந்தக் கலியாணமா? ஒஹோ! உன்னுடைய அண்ணன் கலியாணத்துக்குத் தான்!"

"தெரியாது!"

"ஏன், போவதாக உத்தேசம் இல்லையா?"

"இல்லை" என்று அசிரத்தையான பதில் வந்தது.

"சகி! ஏன் இப்படிப் பிடிவாதம் பண்ணுகிறாய்?" என்று கேட்டான் ரகு. அவனுடைய குரலில் அன்பும், கனிவும் காணப்பட்டன. அதுவரைக்கும் இருந்த மிடுக்கும் விறைப்பும் அவனிடம் காணப்படவில்லை.

இதைக் கண்டதும் அவள் தன்னுடைய உள்ளத்தில் அதுவரை அடக்கி வைத்துக் கொண்டிருந்த ஆத்திரமும், ஆவேசமும் பீறிக்கொண்டு வெளிக் கிளம்பின. பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே,

"பிடிவாதமாம்! யாருக்கு? சொந்த மைத்துனனுடைய கலியாணத்துக்கு வர மறுக்கிறீர்கள்! நான் மட்டும் தனியாகப் போனால் கலியாணத்துக்கு வந்திருக்கும் சொந்தக்காரர்களெல்லாம் என்ன சொல்லுவார்கள்? அப்பாவையும், அம்மாவையும் பற்றித்தான் என்ன நினைப்பார்கள்?" என்றாள் படபடப்புடன்.

அவள் சொன்னது அவ்வளவும் உண்மை என்றே ரகுவுக்குப் பட்டது. தான் போகாம லிருந்தால், தன்னைப் பற்றியும் தன்னுடைய மாமனாரைப் பற்றியும் பந்துக்கள் பலவாறாகப் பேசுவார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியது தான்.

"என்னுடைய நிலைமையை நீ அறிந்து கொள்ள மாட்டேன் என்கிறாயே?" என்றான்.

"என்ன நிலைமை? ஆபீசையே நீங்கள் தான் தாங்கிக் கொண்டிருக்கிறீர்களா?"

"அப்படி இல்லை. இப்போது 'இன்ஸ் பெக்ஷன்' சமயம். மேல் அதிகாரிகள் ஏதாவது சொல்லும்படி வைத்துக் கொள்ளலாமா? நீயே சொல்லு! காலைக்கு ராமமூர்த்தி திரிச்சிக்குக் குடும்பத்தோடு போகிறான். அவர்களோடு நீ போ. முகூர்த்த நாளன்று நான் வந்து விடுகிறேன்" என்றான்.

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"நான் முகூர்த்தத்துக்குக் கட்டாயம் வந்து விடுகிறேன்" என்று மறுபடியும் அழுத்தமாகச் சொன்னான் ரகுநாதன்.



"இல்லை, நீங்கள் வர மாட்டீர்கள். எப்படியாவது என்னை அனுப்பி வைப்பதற்காகத்தான் இப்படிச் சொல்லுகிறீர்கள்."

"நான் அவசியம் வருகிறேன். என்னுடைய பேச்சில் நம்பிக்கை இல்லையா?"

"நிஜமாகவா? உங்களை நம்பலாமா?" என்று கேட்டு விட்டு அவள் இலேசாகச் சிரித்தாள்.

"இத்தனை நாள் பழகியும் என்னை நம்ப மாட்டேன் என்கிறாயே?" என்று சொல்லி விட்டு அவளது கன்னத்தை மெதுவாகத் தட்டினான்.

சொன்னபடி ரகு முகூர்த்த நாளன்று கல்யாணத்துக்குப் போய் விட்டான். அவனைக் கண்டதும் சக்தி திருப்தியடைந்தாள். அவனுடைய மாமனார் அவனை ரொம்ப உபசரித்தார். எப்போதும் இல்லாத திருநாளாக அவர் அவனிடம் ரொம்ப அன்பாக நடந்து கொண்டது அவனுக்கு அதிக ஆச்சரியத்தை விளைவித்தது. அவனைக் கண்டால் "வாருங்கள்!" என்று ஒரு வார்த்தை மாத்திரம் ரொம்பக் கஷ்டத்தோடு சொல்லிவிட்டு ஒளிந்து கொள்ளும் அவனுடைய மாமியார் கூட இப்போது அன்பையும், உபசாரத்தையும் காட்டினாள். ரகுநாதனுக்கு ஒரே பிரமிப்பாகி விட்டது. அவர்களது நடத்தை அவனுக்குப் பிடிபடாத புதிராக இருந்தது.

கல்யாணத்தின் முக்கியமான பொறுப்புகள் எல்லாம் ரகுநாதனிடம் கொடுக்கப்பட்டன. சம்பந்தி வீட்டார் ஏதாவது யோசனை கேட்டால் கூட ரகுநாதனுடைய மாமனார், "பெரிய மாப்பிள்ளையைக் கேளுங்கள்," என்று சொல்லி ரகுவுக்கு முக்யத்துவத்தைக் கொடுத்து விட்டார். ஆகவே முகூர்த்தம் முடிந்ததும் கிளம்புவதாக வந்தவன் கல்யாண முடிவு வரைக்கும் இருக்க வேண்டியதாகி விட்டது.

ஒரு வழியாக எல்லாம் முடிந்ததும், மனைவியுடன் ரகு ஊருக்குப் புறப்பட்டான்.

•	•	•

"என்ன, யோசனை பலமா இருக்கிறதே?" என்று தன் மனைவி கேட்பதைக் கேட்டு ரகு திரும்பிப் பார்த்தான். வண்டி சற்று வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

"என்ன அப்படி யோசிக்கிறீர்கள்?"

"ஒன்றும் இல்லை. உன் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எப்படி என்மீது திடீரென்று இவ்வளவு பிரியம் ஏற்பட்டது என்பதைப் பற்றித் தான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு இந்தத் தடவை கிடைத்த உபசாரம் ஒரு மகாராஜாவின் வீட்டில் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்தால்கூடக் கிடைக்காது. காரணம் என்ன, சொல்லமாட்டாயா?"

"ஒன்றும் இல்லை. நீங்களாக ஏதோ நினைத்துக் கொள்ளுகிறீர்கள். அவ்வளவு தான்" என்று சக்தி மழுப்பப் பார்த்தாள்.

ஆனால், ரகு விடவில்லை. "இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது. சொல்ல மாட்டாயா?" என்று வற்புறுத்திக் கேட்டான்.

சக்தி சொன்னாள்: "இத்தனை நாள் வரை உங்கள் குணம் எங்கள் அப்பாவுக்குத் தெரியவில்லை. பணம் இல்லாவிட்டால் யாரையும் தாழ்வாக மதிப்பது அவருடைய வழக்கம். ஆனால், இப்போது அது தப்பு என்பதைத் தெரிந்து கொண்டு விட்டார். என்னுடைய தங்கை கமலாவை பெரிய இடமாகப் பார்த்துத்தான் அவர் கல்யாணம் செய்து கொடுத்தார். ஆனால் என்ன பிரயோஜனம்? அவளுடைய புருஷன் அவளை நன்றாக வைத்துக் கொள்வதும் இல்லை. அப்பாவை மதிப்பதும் இல்லை. இப்போது இந்தக் கல்யாணத்துக்கு வரவேண்டுமென்று எவ்வளவோ அழைத்தும் கூட அவர் வரவே இல்லை. இதிலிருந்து அவர் பணத்தைவிடக் குணம் தான் பெரிது என்பதை இப்போது தெரிந்து கொண்டு விட்டார்" என்றாள்.

ரகுவின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது.

அவள் பிரயாணம்

"டிக்கட்!" "டிக்கட்!" என்றார் பஸ் கண்டக்டர்.

அவள் தன் கைப் பையைத் திறந்து, அதிலிருந்து ஒரு மணிபர்ஸை வெளியே எடுத்தாள். பிறகு பையை மூடிவிட்டு மணி பர்ஸைத் திறந்து அதில் ஒரு நாலணாவைப் பார்த்தும் எடுத்துக்கொண்டு அதை மூடி விட்டு, பையை மீண்டும் திறந்து மணிபர்ஸை அதில் வைத்துவிட்டு மீண்டும் பையை மூடினாள். பிறகு அந்த நாலணாவை கண்டக்டரிடம் கொடுத்தாள். கண்டக்டர் டிக்கட்டையும் பாக்கியையும் அவளிடம் கொடுத்தான்.

அவள் மீண்டும் பையைத் திறந்து அதில் இருந்த மணிபர்ஸை வெளியே எடுத்தாள். பிறகு பையை மூடினாள். மணிபர்ஸை மறுபடி திறந்தாள். அதில் கண்டக்டர் கொடுத்த சில்லறையைப் போட்டாள். பிறகு பர்ஸை மூடிவிட்டு பையைத் திறந்தாள். அதில் பர்ஸைப் போட்டாள். பிறகு பையை மூடினாள்.

அதற்குள், பஸ் அவள் இறங்க வேண்டிய இடத்தையும் கடந்து இரண்டு பர்லாங்கு தூரத்துக்கு அப்பால் போய்விட்டது.


வரம் கிடைத்தது!

எஸ். வி. எஸ்.

அன்று நான் தெருவில் போய்க் கொண்டிருந்த போது, பள்ளிக்கூட மாணவர்களிடையே நடந்த ஒரு சம்பாஷணையைக் கேட்டேன். ஒரு மாணவன் சொன்னான் : "பழனி தண்டாயுதபாணி ஸ்வாமி தான் ரொம்ப வரப் பிரஸாதி" என்றான். இன்னொரு மாணவன் "அதெல்லாம் ஒன்றுமில்லை. திருத்தணி சுப்பிரமணிய ஸ்வாமி தான் ரொம்ப வரப்பிரஸாதி" என்றான். இதைக் கேட்டுக்கொண்டே வந்தபோது, ஐந்தாறு வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது.

புது மாம்பலத்தில் புதிதாகக் கட்டப் பட்டிருக்கும் பிள்ளையார் கோவிலுக்குக் குலசேகரன் தினந்தோறும் போய்ப் பன்னிரண்டு பிரதக்ஷணம் புரிந்து, கன்னத்தில் நட நட என்று அடித்துக் கொண்டு, இரண்டு காதுகளையும் பிடித்துக் கொண்டு பன்னிரண்டு தோப்புக் கரணங்கள் போட்டு விட்டு, சாஷ்டாங்கமாக ஒரு நமஸ்காரமும் பண்ணிவிட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். இதை அவனுடைய நண்பர்கள் எப்படியோ பார்த்து விட்டார்கள். "டேய், பிள்ளையாரைக் 'காக்காய்' பிடிக்கிறாயா, பரீட்சை பாஸ் பண்ணுவதற்கு?" என்று கேலி செய்தார்கள்.

இந்தக் கேலிக் கெல்லாம் மனம் இடிந்து விடுபவனா குலசேகரன்? எப்பாடு பட்டாலும் பி. ஏ., பரீட்சையில் தேறி விட வேண்டும் என்பதற்காகப் பிள்ளையார் கோவிலைத் தினம் வலம்வந்து "பிள்ளையாரே, என்னைப் பரீட்சையில் தேற வைத்து விட்டாயானால் உனக்கு நூறு தேங்காய் சூறை விடுகிறேன்" என்று வேண்டிக் கொண்டான்.



இந்த பி. ஏ., பரீட்சையைக் குலசேகரன் பெரிதாக மதிப்பதற்குக் காரணம் அவன் கல்யாணம் பண்ணிக் கொண்டது தான். அவன் பி. ஏ. வகுப்பில் முதல் வருஷம் படித்துக் கொண்டிருந்த போதே, அவனுக்கும் சௌபாக்கியவதி கோதை நாயகி அம்மாளுக்கும் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

"மாப்பிள்ளை பி. ஏ. படிக்கிறான்; அடுத்த வருஷம் குலசேகரன் ஒரு பி. ஏ. ஆகி விடுவான்" என்ற நம்பிக்கையின் மீது தான் அவனுடைய மாமனார் அவனுக்குத் தம்முடைய மகளைக் கொடுத்தார். ஆனால் பிள்ளையாண்டான் இப்படி 'கோட்' அடிப்பான் என்று அவருக்கு எப்படித் தெரியும்? அவர் எவ்வளவு வருத்தப்படுகிறாரோ? அவர் வருத்தப் படுகிறாரோ இல்லையோ, குலசேகரனுக்கு அவரைப் பார்க்கவே அவமானமாக இருந்தது. அதை விட அவமானமாகவும், வெட்கமாகவும் இருந்தது ஸ்ரீமதி கோதைநாயகி யம்மாளைப் பார்க்க!

மனைவியும் மாமனாரும் குலசேகரனை ஒரு முறை வந்து விட்டுப் போகும்படி எத்தனையோ தடவை வேண்டி வேண்டி அழைத்தார்கள். குலசேகரன் போக மறுத்து விட்டான். 'ஒரு பி. ஏ., கூட ஆகாமல் மனைவியைப் போய்ப் பார்ப்பதாவது!' என்று தன் மனதுக்குள் சபதம் செய்து கொண்டான். ஆகவே, அவனை எத்தனை முறை எத்தனை விதமாக வற்புறுத்தியும் அவன் மாமனார் வீட்டுக்குப் போக மறுத்து விட்டான்.

குலசேகரனுடைய மாமனாரின் ஊர் குளத்தூர். ஒரு நாள் அங்கிருந்து ஒருவர் குலசேகரன் வீட்டுக்கு வந்து

'பையனுக்குக் கல்யாணமாகி வருஷம் இரண்டுக்கு மேலாகிறது. பிள்ளையாண்டான் ஒரு தரமாவது பெண்ணைப் போய்ப் பார்க்க வேண்டாமா? அது பாவம், தன் புருஷனை நினைத்து நினைத்துத் துரும்பாக இளைத்துப் போகிறது. எங்கள் ஊர் குளத்தங்கரைப் பிள்ளையார் ரொம்ப வரப்பிரஸாதி என்று பெயர். அந்தப் பிள்ளையாரைக் காலையிலும் மாலையிலும் சுற்றிச் சுற்றி வந்து கும்பிடுவதுதான் அந்தப் பெண்ணுக்கு வேலையாய்ப் போய்விட்டது பாவம். பிள்ளையாரிடம் என்ன வேண்டிக்குமோ? ஏது வேண்டிக்குமோ?'' என்று குலசேகரனுடைய தந்தையிடம் அங்கலாய்த்துவிட்டுப் போனார்.

இதைக் கேட்ட குலசேகரனின் தந்தை தம் மகனை அழைத்து ''என்டா, குலசேகரா! நீ ஒரு தடவை அங்கே போய் விட்டு வரவேண்டா'' என்றார்.

''சரி. அப்பா! போய்விட்டு வருகிறேன்'' என்றான் குலசேகரன்.

அப்பொழுது அவனுடைய காலேஜ் 'படையெடுப்பு' முடிந்து ஒரு மாசமாகியிருந்தது. பரீட்சை முடிவுகள் வர இன்னும் பத்துப் பதினைந்து நாட்கள் இருந்தன. அதற்குள் திரும்பி வந்து விடலாம் என்ற தைரியத்தோடு மாமனார் வீட்டுக்குக் குலசேகரன் பிரயாணமானான்.

அங்கே மாப்பிள்ளைக்கு அமோகமான வரவேற்புக் கிடைத்தது. வராத மாப்பிள்ளை வந்தது குறித்து மாமனார் வீட்டில் எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷந்தான். குலசேகரன் இரண்டு நாள் இருந்துவிட்டு உடனே திரும்பி விடவேண்டும் என்று நினைத்தவன், நான்கு நாள் தங்கி விட்டான். பாவம், ஐந்தாவது நாள் அவன் தலையில் ஓர் இடி விழுந்தது. அந்த இடி, தன் சொந்த ஊரில் இருக்கும் பொழுது விழுந்திருந்தால் அவன் இலேசாகத் தாங்கிக் கொண்டிருப்பான். மாமனார் வீட்டிலிருக்கும்போது விழுந்ததால் அது பேரிடியாகி, அவனை நிலைகலங்கச் செய்து விட்டது.

வேறொன்றுமில்லை; பரீட்சை முடிவுகள் அவன் எதிர்பார்த்ததை விட நான்கு நாட்களுக்கு முன்பாகவே வந்து விட்டன. அதில் அவனுடைய நம்பரைக் காணோம்!

மாமனார் வீட்டில் இது நிகழ்ந்ததால் அவனுக்கு மாமனாரைப் பார்க்கவே ரொம்ப வெட்கமாக இருந்து. மனைவியைப் பார்க்க அதைவிட வெட்கமாக இருந்தது. ஆனால் நேற்றுவரை குலசேகரனைப் பார்க்க



''என்ன... முனியா! உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சே; யோக்கியமான தொழில் ஏதாவது செய்து கொண்டிருக்கிறாயா?''

''ஆமாங்க; யோக்கியமான தொழில் தான் செய்து கொண்டிருக்கிறேன்.''

வெட்கப் பட்டுக் கொண்டிருந்த கோதை நாயகி இன்று தன் வெட்கத்தை உதறித் தள்ளி விட்டு, குலசேகரனிடம் பேச வந்தாள்.

''எங்கள் குளத்தங்கரைப் பிள்ளையாருக்கு இணை எங்கேயுமே கிடையாது. கேட்ட வரம் கொடுக்கிற பிள்ளையார் எங்கள் பிள்ளையார்தான்'' என்றாள் பெருமையுடன்.

''ஆமாம், உங்கள் பிள்ளையாரை நீதான் மெச்சிக்கொள்ள வேண்டும். நான் 'பெயி'லாகப் போய் மூலையிலே கிடக்கிறேன்; நீ என்னமோ கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டதாகச் சொல்லுகிறாயே!'' என்றான் குலசேகரன்.

''அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்! கேட்ட வரத்தை அவர் கொடுக்கவில்லையா? நீங்க பரீட்சையில் 'பெயி'லாகப் போகணும் என்றுதான் வேண்டிக் கொண்டேன்! வேண்டிக் கொண்ட வரம் எனக்கு இப்போது கிடைத்து விட்டது'' என்றாள் கோதை.

''என்ன? நான் 'பெயி'லாகப் போக வேண்டும் என்று வேண்டிக் கொண்டாயா?'' என்று கோபத்தோடு கத்தினான் குலசேகரன்.

''எதற்காக இப்படிக் கோபப்படுகிறீர்கள்?'' என்று கண்களில் நீர் ததும்பக் கேட்டாள் அவனுடைய மனைவி.



நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு வித்தியா சாலையின் 22-வது ஆண்டு விழா மராமத்து மந்திரி கனம் பக்தவத்ஸலம் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது.

அதைக் கண்டதும் குலசேகரனுடைய மனம் இளகிவிட்டது. "பின் இப்படி நீ முட்டாள்தனமாக வேண்டிக் கொள்ளலாமா? எங்காவது கட்டிக் கொண்ட கணவன் பரீட்சையில் தேறக் கூடாது என்று வேண்டிக் கொள்வது உண்டா?" என்றான்.

"நான் அப்படி வேண்டிக் கொண்டதிலே தப்பு என்ன இருக்கிறது? இந்தத் தெருவுக்கு அடுத்த தெருவிலே ஒருவர் இருக்கிறார். அவரும் பி. ஏ. பரீட்சை இரண்டு தடவை எழுதிப் பார்த்தார். 'பாஸாக' வில்லை. பரீட்சைக்குத் தலை முழுக்குப் போட்டு விட்டு ஒரு நெல் மிஷின் வைத்தார். இப்போது மாசம் முன்னூறு ரூபாய் சம்பாதிக்கிறாராம். மூணாம் தெருவிலே ஒரு செட்டியாருடைய மகன் எப். ஏ.,க்கு படித்தானாம். பரீட்சை பாஸாக வில்லை. அவனும் பரீட்சைக்கு முழுக்குப் போட்டுவிட்டு, ஒரு ஜவுளிக்கடை வைத்தான். இன்று அவனுக்குச் சொந்தமாக மூன்று வீடு இருக்கிறது. பரீட்சையில் தேறாதவர்கள் எல்லாம் வாழ்க்கையில் அபாரமாகத் தேறியிருக்கிறார்கள். நீங்கள் பரீட்சை 'பாஸ்' பண்ணி நமக்கு ஆக வேண்டியது என்ன இருக்கிறது? அதனால்தான் நீங்கள் பரீட்சையில் தேறக் கூடாது என்று எங்கள் பிள்ளையாரை நான் வேண்டிக் கொண்டேன். ஆனைக்கரைப் பிள்ளையார் என் கோரிக்கையை நிறைவேற்றி விட்டார்" என்றாள்.

குலசேகரன் யோசித்தான், "நாம் யாரைத் திருப்தி பண்ணுவதற்காக இந்த பரீட்சையில் 'பாஸ்' செய்ய வேண்டும் என்று நினைத்தோமோ, அவளே இந்த பி. ஏ. பட்டத்துக்கு அவ்வளவு மதிப்புக் கொடுப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும்போது நாம் மட்டும் இந்தப் பரீட்சையில் 'பாஸ்' செய்ய வில்லையே என்று வீணாக ஏன் வருத்தப்படவேண்டும்?" என்று எண்ணித் தன் மனதைத் தேற்றிக் கொண்டான்.

மறுநாள் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. குலசேகரன் அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பிரித்து வாசித்துக்கொண்டிருந்த போது, அதில் கீழ்க்கண்ட செய்தியைக் கண்டான் :

"நேற்று வெளியான பி. ஏ. பரீட்சை முடிவுகளில் சில எண்கள் விடுபட்டுப் போயின. அவற்றைக் கீழே கொடுத்திருக்கிறோம்" என்று இருந்தது.

குலசேகரன் ஆவலாக அதைப் பார்த்தான். அதில் 'அவனுடைய' எண்ணும் இருந்தது! நிஜமாகவே பரீட்சையில் அவன் தேறிவிட்டான்.

இப்பொழுது அவனுக்குப் புரியவில்லை! சந்தோஷப் படுவதா? துக்கப் படுவதா? என்ன செய்வது?

அவன் மனசுக்குள், ஒருக்கால் தான் பரீட்சையில் தேறி விட்டதைப் பற்றி இப்பொழுது கோதை வருத்தப்படுவாளோ என்று நினைத்தான்.

• • •

இத்தக்கவலையுடன் அன்று குளத்தூரில் மாலை குளக்கரையில் உலாவிக் கொண்டிருந்தான். தூரத்தில் ஒரு அரச மரத்தடியில் ஜனக் கூட்டம் தெரிந்தது. சிறுவர்கள் அங்கு நின்றும் சிரித்து கொண்டிருந்தார்கள். "என்ன விஷயம்?" என்று பார்க்கக் குலசேகரன் அங்கே சென்றான்.

குளக்கரைப் பிள்ளையாருக்குத் தன் மாமனார் வீட்டு ஆள் ஒருவன் இரண்டு உடைகள் நிறையத் தேங்காய்கள் வைத்து, சூறை விட்டுக் கொண்டிருந்தான். குலசேகரன், "இது என்ன அப்பா?" என்று அவனைக் கேட்டான்.

"சின்னம்மா பிள்ளையாருக்கு ஏதோ வேண்டிக்கிட்டு இருந்தாங்களாம். அந்த வேண்டுதல் இன்னிக்கு நிறைவேறி விட்டதாம்! அதற்காக, நூற்றெட்டுத் தேங்காய் பிள்ளையாருக்குச் சூறை போடச் சொன்னாங்க!" என்றான்.

குலசேகரனுக்கு ஒன்றும் புரியவில்லை. "கோதையா — சூறை உடைக்கச் சொன்னாள்!" என்று அதிசயித்து நின்றான். இதைப்பற்றி அவளிடம் விசாரிக்க வேண்டும் என்று குலசேகரன் வீட்டுக்கு அவசர அவசரமாக வந்தான்.

"என்ன கோதை! நீ இன்றைக்கும் பிள்ளையாருக்குச் சூறைத் தேங்காய் உடைக்கச் சொன்னாயாமே! இதென்ன கூத்து?" என்றான்.

அதற்கு அவள், "ஆமாம்; யாராவதும் பரீட்சையில் தேறக் கூடாது என்று வேண்டிக் கொள்வார்களா? நீங்க சென்ற பரீட்சையில் தேறவில்லை என்ற வருத்தத்தில் மனசு இடிஞ்சு உட்கார்ந்திருந்ததைப் பார்த்து, உங்களுக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்று எங்கள் குளக்கரைப் பிள்ளையார் தலையில் பழியைப் போட்டேன்! நல்லதோ கெடுதலோ எதையும் செய்பவர் கடவுள் தானே!" என்றாள்.

குலசேகரன் மனதிற்குள் வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க வாய்மூடி மௌனியாய் அவளையே பார்த்தவண்ணம் நின்றான்!

சரோஜினியும் சங்கீதமும்

ர. வேங்கடரத்தினம்

சரோஜினி என் தங்கை. அவளுக்குப் பாட்டுச் சொல்லி வைக்க வேண்டுமென்று அம்மாவுக்கு வெகு நாளாக ஆசை. ஒருநாள் அப்பா சமூகமாக இருந்தபோது, அம்மாவினால் இந்தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டு, பாட்டியினால் எதிர்க்கப்பட்டு, என் தம்பியினாலும் என்னாலும் ஆதரிக்கப்பட்டு, இறுதியில் அங்கீகரிக்கப் பெற்றது.

இவ்விடத்திலேதான் இந்தக் கட்டுரை தொடங்குகிறது. இந்தக் கட்டுரை நாயகி (கதா நாயகி என்று வழங்குகிறதே, அது போல் கட்டுரைகளுக்கும் நாயக-நாயகிகள் இருக்கலாம் அல்லவா?) சரோஜிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க ஒருவர் நியமிக்கப் பட்டார். சங்கீதம் நாளொரு சுரமும் பொழுதொரு அடியுமாக ஓங்கி வந்தது. சிட்சை (தீவாந்திர சிட்சையை இவ்விடத்திலே நினைத்துக் கொண்டு, வாசகர்கள் குழப்பிக் கொள்ள வேண்டாம்!) சில நாட்களுக்கு நடைபெற்றது.

ஒரு சுபதினத்தன்று அந்தப் பாட்டு வாத்தியார் தன் முகத்தை எவ்வளவு கோணலாகப் பண்ணிக் கொள்ள முடியுமோ, அவ்வளவு கோணலாகச் செய்து கொண்டு, அப்பாவிடம் கூறினார்: "நம்ம சரோஜியின் சாரீரம் நன்னா அமைஞ்சிருக்கு. ஞானமும் இருக்கு. சிரத்தையும் சேர்ந்திருக்கு. இதோடு சுருதிக்கு ஒரு ஆர்மோனியமும் வாங்கி விட்டால், சிலாக்கியமா யிருக்கும்."

இதைத் தொடர்ந்து ஒரு சம்பாஷணை நடந்தது. முடிவில், அந்த யோசனையை ஒப்புக்கொண்டு ஆர்மோனியம் ஒன்று வாங்கிக்கொண்டு வரும்படி அப்பா அவரிடம் சொன்னார். ஆர்மோனியமும் வந்தது. அவர் எவ்வளவு தான் சிரமப்பட்டும், சங்கீதம் 'சரோ'வை அணுக அஞ்சியது.

ஆர்மோனியத்துக்காகத் தன்னிடம் அடாத விலையை வாங்கிவிட்டதாக அப்பாவுக்கு பாட்டு வாத்தியார்மீது ஆத்திரம். போதாததற்கு, சரோஜி 'ஸரிகம'விலேயே ரொம்ப நாட்கள் இருந்தது அவருக்குப் பிடிக்கவில்லை. "மாசா மாசம் அஞ்சு ரூபாய் பிடுங்கிக் கொள்வது மல்லாமல் ஆர்மோனியத்திலே வேறு காசு பிடுங்கி விட்டான்; இந்த லட்சணத்திலே, மூணு மாசமாக 'சரிகம'-வே சொல்லிக் கொடுத்திருக்கான். 'என்'று கேட்டாலோ, அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவதாகச் சொல்கிறான்" என்று முணுகிக் கொண்டே அப்பா அவரை நீக்கிவிட்டு இன்னொருவரை அமர்த்தினார்.

உலகம் பலவிதம் அல்லவா? ஒருவருடைய சுபாவம் போல் இன்னொருவருக்கு இருக்கிறதா? வந்தவர் சற்றுக் கோபக்காரர். ஒருநாள் அவர் வழங்கிய 'சங்கதி'யை—அவர் எவ்வளவுதான் முயன்றும், காடியாகக் கத்திப் பாடிக் காண்பித்தும்—சரோஜி பிடித்துக் கொள்ளாமற் போகவே, அவர் ஹிம்சையில் இறங்க வேண்டியதாகி விட்டது. என்ன செய்வார், பாவம்! கைக்குச் 'சட்'டென்று கிடைத்த ஆர்மோனியத்தின் மீதிருக்கும் கட்டையை எடுத்துப் பிரயோகித்து விட்டார். அத்துடன் அவருடைய பாட்டுக்கு ஒரு முற்றுப்புள்ளி இடப்பட்டது. அப்போது அப்பா சொன்ன மணியான சொற்கள் இவைதான்: "எவ்வளவு தான் சங்கீத நிபுணனானாலும், கையை ஓங்கக் கூடாது?"



அடுத்தபடியாக வந்தவர் மாயவரம் பஞ்சரிஷி ஐயர். ரொம்ப ஊக்கத்துடன் அவர் சரோஜிக்குப் பாட்டு போதித்து வந்தார். அவரை அப்பாவுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. இல்லாவிடில், அவரும்

‘சரிகம’விலிருந்தே தொடங்கியும், அப்பா பார்த்துக்கொண்டு இருந்திருப்பாரா?

இவ்விடத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். எங்கள் சரோஜிக்கு எத்தனை முறை பாட்டு வாத்தியார்கள் புதிது புதிதாக நியமிக்கப்பட்டாலும் அவள் சளைக்காமல், களைக்காமல் ‘சரிகம’ விலிருந்தே ஒவ்வொருவரிடமும் பாட்டு கற்று வந்தாள். இந்தப் பாட்டு வாத்தியார்கள் அநேகரிடம் இந்த குணமுண்டு. புதிய சிஷ்யர்கள் என்று, எப்போது சேர்ந்தாலும், வாத்தியார்கள் தங்கள் சிஷ்ய கோடிகள் கற்றுள்ளவற்றைப் புறக்கணித்து விட்டு, புதிதாகத் தங்கள் ‘சரிகம’ வைத் தொடங்கி விடுவார்கள். இது நிற்க, புதிய பாட்டு வாத்தியாரை அப்பா, அம்மா இருவருமே புகழ்ந்தனர். அவரும்—அந்தப் பூனையும் ருசி கண்டு விட்டது.

சமயத்திலே அவர் தொண்டையைக் கனைத்துக் கொள்வார். உடனே தம் சிஷ்யையிடம் “உள்ளே போய் ஒரு டம்ளர் சில் வெந்நீர் வாங்கிக் கொண்டுவாயேன்” என்பார். இம்மாதிரி சில நடவைகள் செய்து விட்டு, பின்பு அவர் “சரோ, அம்மாவைக் கேட்டு, உள்ளே காய்ச்சி அடுப்பிலேயிருந்து இறக்கிய பசும்பாலில், இரண்டு கல்கண்டையும் போட்டு வாங்கிக் கொண்டு வா!” என்று தம் கைவரிசைகளைக் காட்ட ஆரம்பித்து விட்டார்.

இத்துடன் நில்லாமல் அவர் தன்னோடு தன் அருமைப் பிள்ளையாண்டானையும் அழைத்து வரத் தலைப்பட்டார். அவன் நடுப் பாட்டில் “அப்பா, தாகமாயிருக்கு” என்பான். அவர் உடனே “உள்ளே போய் கொஞ்சம் பால் வாங்கிச் சாப்பிட்டு வா. தண்ணி, கிண்ணி எதையும் சாப்பிட்டுத் தொலையாதே. அப்புறம் நெஞ்சைக் கட்டிக் கொண்டு விட்டது என்று என் கழுத்தையறுக்காதே” என்று சொல்லுவார்.

ஒரு நாள் அவர் வரவில்லை; அவருக்குப் பதிலாக அவருடைய பையன் வந்து “எங்க அப்பாவுக்கு ஜுரம். இது நிறையப் பால் வாங்கிக் கொண்டு வரச்சொன்னார்” என்று சொல்லிக் கொண்டே ஒரு டப்பாவை நீட்டினான்.

இன்னொரு நாள் பஞ்சநதி ஐயர் தான் வர முடியவில்லையென்று தன்னுடைய சிஷ்யன் ஒருவனை அனுப்பினார். இது போன்ற இன்னும் பல அம்சங்களும் சேர்ந்து கடைசியில் அவரை வெளியேற்றும் படி செய்தன. அப்போது அப்பா சொன்னதாவது: “எவ்வளவு தான் பழகினாலும் இன்னார் இவ்வளவு தூரத்தில் தான் இருக்க வேண்டுமென்பதைக் கூடவா மறந்துவிடுவது?”

புதிய பாட்டு வாத்தியாருடைய பெயர் கிரீசப் பிள்ளை. மகானுபாவன் ‘சரிகம’விலிருந்து எல்லாவற்றையும் திரும்பவும் தொடங்கினார்.

ஒரு நாள் பிள்ளையவர்கள் அப்பாவிடம் இவ்வாறு பிரேரேபித்தார்: “ஸார், சரோவின் ஞானம், சாரீரம், சித்தை எல்லாவற்றையும் இந்த ஆர்மோனியம் அமுக்கி விடுகிறது. ஒரு தம்புரா வாங்கி விட்டால் பாட்டை எடுத்துக் காட்டும்.”

எப்போதுமே சரோவைப் புகழக்கேட்டு மகிழ்ந்திருந்த அப்பா, அவரிடம் ஒரு தம்புராவுக்கு ஆர்டர் செய்தார். இரண்டு மூன்று நாட்களில் கிரீசப் பிள்ளையின் மைத்துனன் ஒருவன் ஒரு தம்புராவைக் கொண்டு வந்து வைத்து விட்டு, விற்பனை வரியுள்பட ரூ. 95—9—3 கறந்து வாங்கிக் கொண்டு போய்விட்டான். சில நாட்களில் கிரீசப் பிள்ளை தாமாகவே தலைமறைந்தார்.

‘அண்டர் கிரவுண்ட்’ சென்று விட்ட அவரைப்பற்றி ஊரிலே அக்கம் பக்கத்தவர்களிடம் விசாரித்ததில் உண்மை வெளி வந்தது.

கிரீசப் பிள்ளை உண்மையில் ஒரு சங்கீத வித்வானே அல்ல; ஏன், சங்கீதமே அவருக்குத் தெரியாது. யாரோ ஒருவரிடம் தம்புரா காண்ட்ராக்ட் எடுத்து ஜீவனம் நடத்தி வருபவர். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு தம்புராவைத் தள்ளி விடுவதையே கண்ணும் கருத்துமாய்க் கருதுபவர். பிள்ளையவர்கள் பிரிந்துபோன பிறகு, சில நாட்களுக்குச் சிட்சை தடைப் பட்டு நின்றது. பிறகு நானே ஒருவனை அப்பாவிடம் பிடித்துக் கொண்டு போய் நிறுத்தினேன்.

அவன் என்னுடன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தவன். அப்பாவிடம் அவனைப் பற்றி ரொம்ப சிலாகித்துப் பேசிச் சிபாரிசு செய்தேன். அவன் அஹிம்சையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவன் என்பதையும் எடுத்துக் கூறினேன். இதற்கு முன்பு வந்த வாத்தியார்களிடமிருந்த விசேஷத் தன்மை எதுவும் அவனிடம் இல்லா விட்டாலும், பாட்டு வாத்தியார்கள் குல தர்மத்திற்கே இன்றியமையாத ஒரு குணம் அவனிடமிருந்தது. குறைந்த பட்சம் ‘ஐம்பது சதவீத நாட்கள் வாராமை’ யென்னும் சிறப்பு அவனிடமும் குடி கொண்டிருந்தது. இந்த யோக்யதாம்சம் இருந்தால் தான் பாட்டு

வைத்தியராக ஆக முடியுமோ, என்னவோ? ஆனால் என் நண்பன் — என்ன தானிருந்தாலும் படித்தவன் அல்லவா?—தன் தம்பியிடம் 'லீவ்' கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பி விடுவான்.

இப்படியாகக் காலம் சென்று கொண்டிருந்தது. ஒருநாள் என் நண்பன் பாட்டு சொல்லிக் கொடுக்க வரவில்லை. 'லீவ்' கடிதமும் கொடுத்தனுப்பவில்லை. அவனுக்கு என்ன சேர்ந்து விட்டதோ என்று நான் ரொம்பவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். மறுநாள் தினப் பத்திரிகையில் 'சத்தியாக்கிரஹம் செய்து கைதியானவர்கள்' என்னும் ஜாபிதாவிலே அவனுடைய பெயரைக் கண்ட பின்தான் விஷயம் தெளிவாயிற்று.

அப்பா என்னிடம் "தேசபக்தனைப் பாட்டு சொல்லிக் கொடுக்க அழைத்துக் கொண்டு வந்தாயே!" என்று சொல்லி ரொம்ப ரொம்ப வருத்தப்பட்டார்.

• • •

இப்படி எத்தனையோ பாட்டு வாத்தியார்கள் வைத்தும், கடைசிக் காலத்தில்—அதாவது, அவளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வந்தபோது—கற்ற பாட்டு ஒன்றாவது பயன்பட்டதா, இல்லை!

வருஷம் முழுவதும் பாடங்களைப் படித்த பின்பும், மாணவன் பரீட்சைக்கு முந்தின நாள் இரவு ஒரு மணிவரை படித்து விட்டுத் தான் படுக்கிறான். அதுபோல், மாப்பிள்ளை வரும் வரை—ஏன், அவனுடைய கார் வாசலில் வந்து நின்ற பின்பும்—அவசர அவசரமாக ஏதோ ஒரு பாட்டை உருப் பண்ணி வைக்க வேண்டித் தானிருந்தது. "சரோஜியை வந்து நமஸ்காரம் பண்ணச் சொல்லு" என்று அப்பாவின் வாயிலிருந்து ஆணை வரும் வரை ஒத்திகை நடத்தித் தயாரிக்க வேண்டியிருந்தது. நல்ல வேளை, அவள் சரியாக மனப்பாடம் செய்யாத பகுதியான 'சரணம்' வரும்போது, நான் மாப்பிள்ளையோடு பேச்சுக் கொடுத்து, 'சரோ'வைக் காப்பாற்றி விட்டேன். 'பாட்டுப் போட்டி'யில் வெற்றிபெற்ற சரோஜுவின் விவாகம் இனிது நடைபெற்றது.

• • •

அதென்னவோ, சரோஜியின் புருஷன் இப்போதும் "என் மனைவிக்கு எழுகுருஷம் சங்கீத சிட்சை நடந்தது" என்று பெருமையாய்த் தான் சொல்லிக் கொள்கிறான். அவள் பாடும் தாலாட்டைக் கேட்டு விட்டு, அவளுடைய குழந்தைகளும் தூங்கிப் போய் விடுகின்றன!

காரியம் வெற்றிதான்!

டி. வி. கிருஷ்ணன்

நான் பாடசாலைக்குப் போய்விட்டு வந்ததும், பொழுது போக்குக்காக வீட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்து கொண்டிருப்பேன். அன்றும் வழக்கம் போலத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது சுமார் முப்பது வயது மதிக்கத் தக்க ஒரு மனிதன் நொண்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் அங்கே ஒரு போலீஸ்காரனும் வந்து சேர்ந்தான். இருவரும் வெகு நேரம் வரை ஏதேதோ பேசிக் கொண்டிருந்து விட்டுப் போய் விட்டார்கள்.

மறு நாளும் அதே சமயத்தில் அதே போலீஸ்காரனும் நொண்டியும் அங்கே வந்து சுற்றுமுற்றும் பார்த்தார்கள். கூப்பிடு தூரத்திற்கு யாரையும் காணவில்லை. நான் அங்கிருந்தால், ஏதாவது நினைத்துக் கொள்வார்களோ என்று நினைத்து உள்ளே சென்று ஜன்னல் வழியாக அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்த நொண்டி சிறிது தூரம் சென்றவன் ஒரு புதுவித நடையுடன் வந்து 'தடா' லென்று அந்தப் போலீஸ்காரனுக் கருகில் விழுந்தான். "ஷபாஷ்! நம் காரியம் வெற்றிதான்" என்று சொல்லி நொண்டியின் முதுகில் தட்டிக் கொடுத்தான் அந்தப் போலீஸ்காரன். இவர்கள் எதற்காக அப்படிச் செய்கிறார்கள் என்று எனக்குக் கொஞ்சம் கூட விளங்கவில்லை.

அந்தச் சமயத்தில் தூரத்தில் ஒரு மோட்டார் வந்து கொண்டிருக்கவே, போலீஸ்காரன் சிறிது தூரத்தில் போய் நின்று கொண்டான். மோட்டாரும் நொண்டியை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்த நொண்டி அந்த மோட்டார் மீது விழுபவன்போல் அருகில் சென்று கூச்சலிட்டுக் கீழே விழுந்தான்.

உடனே போலீஸ்காரன் ஓடி வந்து, "ஐயையோ, கால் எலும்பல்லவா முறிந்து விட்டது! ஏ! டிரைவர், வா ஸ்டேஷனுக்கு" என்றான். டிரைவர் பயத்துடன் பின் சீட்டில் உட்கார்ந்திருந்த முதலாளியைப் பார்த்தார். அவர் உடனும் பயந்தால் நடுங்கினார். உடனே பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார். காரும் சென்று விட்டது. உடனே நொண்டியும் போலீஸ்காரனும் 'இடி இடி' என்று சிரித்தார்கள். அப்பொழுதுதான் எனக்கு நொண்டி கீழே விழுந்து பழகியது எதற்கு என்று விளங்கிற்று.

“ஸங்கர்” மார்க்

வாசனை பாக்குத்தூள்



★

அசல்

பாதாம் எண்ணை

★

ரோஜாப்பூ

குல்கந்து

★

ரஷிக்லால் & கோ.,


கோவிந்தப்ப நாய்க்கன் தெரு

மதராஸ் - 1

ஆகாரத்திற்கு பின்

வயிற்று நோயா?

இதுதான் நான் சிபார்சு செய்வது



வயிற்றில் அதிக அமிலம் சேருவதால் அடிக்கடி அஜீரண உபாதைகள் ஏற்படலாம். இந்த அதிக அமில சேர்ப்பினால் ஏற்படும் எக்கம், வாயு, இதர உபாதைகள், அஜீரணம், ஆகாரத்திற்குப் பின் வயிற்று நோய் முதலியவைகளுக்கு உடன் அதற்கு நிவாரணமாகவே ''பிஸ்மாக்''கை சிபார்சு செய்கிறேன். அமில சேர்க்கையால் வயிற்று நோயால் கஷ்டப்படுவோர்களுக்கு உடனேயே ''பிஸ்மாக்'' நிவாரண மளிக்கும். இன்றே ஒரு முறை பரிசித்து உங்கள் வயிற்றை சகல உபாதைகளினின்றும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு வேண்டியது

BISMAG

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

சோல் ஏஜண்டுகள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI மே 30, 1948 4 அண

"எவர்ஸில்வர்"

பாத்திரங்கள்

வெள்ளியின் அந்தமும் இரும்பின் உறுதியும் ஒருங்கே கொண்டவை

(பம்பாய் ஜீவன்லால் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டவை)

●

வீடுகளுக்குத் தேவையான பேஸின்கள், தட்டுகள் (எல்லா சைஸ்களிலும்), டப்பாக்கள், டேபிள் ஸ்பூன்கள், டீஸ்பூன்கள், கிண்ணங்கள், டபராக்கள், அடுக்குகள் முதலிய ஸ்டாக்குகள் கைவசமுள்ளன.

●

தென்னிந்தியாவிற்குப் பூரண விநியோகஸ்தர்கள் :

ஸாம்ஸன் & கோ.,

எஞ்ஜின், எலக்ட்ரிக், மோட்டார் பம்பு ஸெட் டீலர்கள்

8/22, பிராட்வே, மதராஸ்

தந்தி : "BARAPASH"] [போன் : 452]

சரசபரில்லா



உற்சாகத்தையும்
ஆரோக்யத்தையும்
கொடுக்கும்
சிறந்த ஓர்
குளிர்ந்த பானம்

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்

மதராஸ் ஏஜண்டு :

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி, ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு :

B. பாலபட்டாபி
வைசியாள் தெரு, கோயமுத்தூர்

REGD. No. M. 4392

